Registered as a News Paper in Sri Lanka
දිනමුරසු වාරමලර
பக்கம் 24 ரூபா 30.00
மே 15 - 21, 2014

# வாரமலர் தினமுரசு




THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 1066



## புலம்பெயரும் குற்றவாளிகள்?



## பாரதிய ஜனதாவும் இந்திய வெளியுறவும்

## கிழக்கிலும் தேடுதல்

விஷமிகளின் நோக்கம் என்ன?

## சிவன் விரதங்கள்

சைவ சமய விரதங்கள் மனம் ஐம்பொறிகளின் தன்மைக்கு ஆட்பட்டு அலையாமது, பொய்யான ஆசைகளுக்கு ஆட்படாமல் மெய்ஞான வழியில் தங்களது நினைவை செலுத்த, நெறிபிறழாத நினைவால் இறைவனை ஒரு நிலைப்படுத்திய வழக்காக சில நியமங்களைக் கைக்கொள்ள வேண்டியுள்ளது. முதலாவது மனக்கட்டுப்பாட்டுடன் உணவுக் கட்டுப்பாட்டினையும் கடைப்பிடித்திட வேண்டும்.

உணவின் தன்மைக்கேற்ற நமது சிந்தனைகள் மென்மை, கடினம் என்ற நிலையைப் பாதிப்பதால் நமது முன்னோர்கள் விரதங்களை கடைப்பிடித்தனர் - உணவுகட்டுப்பாடு ஒழுக்கத்துடன், சிவ விரதங்களாக கையாளப்படும் நமது விரதங்கள் ஒன்பது ஆகும்.

**அவையாவன:**

சோமவார விரதம், திருவாதிரை விரதம், உமா மகேஸ்வரி விரதம், சிவராத்திரி விரதம், கேதார விரதம், கல்யாண சுந்தர விரதம், சூல விரதம், இடப விரதம், பிரதோஷ விரதம், கந்தசஷ்டி விரதம் ஆகும்.

## ஆன்மீகம் — கேட்பதெல்லாம் கிடைக்கும்

நம் வாழ்க்கையில் மிகப்பெரிய ஆசீர்வாதம் நாம் கேட்டவை அனைத்தையும் பெற்றுக்கொண்டோம் என்பதுதான். "நீங்கள் என்பெயரால் கேட்பதையெல்லாம் நான் செய்வேன்" (யோவான் 14:13, 14:14) இரண்டு முறை இயேசு இதைச் சொல்லுகிறார். அவ்வாறே நம்பிக்கையோடு கேட்ட யாவரும், கேட்ட அனைத்தையும் பெற்றுள்ளனர் என்பதையும் விவிலியத்தின் பல சான்றுகளில் அறியவருகிறோம்.

இவ்வாறு கேட்ட அனைத்தையும் நாம் பெறவேண்டுமானால், அந்த ஆளைப்பற்றிய அனுபவம், அறிவு இருக்கவேண்டும். இந்த ஆளிடம் இதைக்கேட்டால் கிடைக்குமென்ற அனுபவமும் அறிவும் அவசியம் தேவை. இயேசுவைப்பற்றிய அனுபவமும் அறிவும் நாம் கேட்ட அனைத்தையும் நமக்குத் தரவல்லது. இதைத்தான் கடவுள் நம்பிக்கை அல்லது விசுவாசம் என்று சொல்லலாம்.

பெரும்பாலும் கடவுள் நமக்குச் செய்யும் நன்மைகளை நாம் சிந்திப்பதே இல்லை. ஏதோ நமது திறமையால் பணத்தால் நாம் சாதித்ததாக நினைத்துவிடுகிறோம். கடவுளை மறந்து விடுகிறோம். இது கடவுளிடம் நாம் கேட்காததற்குச் சமம். எனவே அடுத்த முறை நாம் நினைப்பது நடப்பதில்லை. கேட்பது கிடைப்பதில்லை. ஆகவே, இந்த நம்பிக்கையோடு கேட்போம். கேட்டவை யாவும் கிடைக்கும்.

## உன்னத மதம் இஸ்லாம்

இஸ்லாம் மதம் இறுதியாக வந்த மதமல்ல. முதலாம் நபி மூலம் முதலில் தோன்றிய மதம் இஸ்லாம். அல்லாஹ்வின் தூதர் அண்ணல் நபி மூலம் அகில மக்களுக்கு அல்லாஹ் அளித்த மதம் இஸ்லாம்.

அனைத்துலக மக்களுக்கும் அவசியமான போதனைகள் அடங்கியுள்ள மதம் இஸ்லாம். மனிதர்களால் பின்பற்ற முடியாத மதமல்ல இஸ்லாம். நம்பிக்கையூட்டும் நல்மதம் இஸ்லாம். சாந்தி, அமைதி என்னும் சங்கையான பொருளுள்ள மதம் இஸ்லாம்.

மனித வாழ்வின் சிக்கல்களை சீராக்கி வாழவைக்க வந்த மதம் இஸ்லாம். மனித சுதந்திரத்திற்கு மற்றொருவர் பங்கம் விளைவிக்க கூடாதென பறைசாற்றும் மதம் இஸ்லாம்.

அன்றாட வாழ்வின் அளப்பரிய சேவை செய்யும் மதம் இஸ்லாம். இவ்வாறு உண்மைகளை உணர்த்தும் உன்னத மதம் இஸ்லாம்.

எம்.சீ.கலீல், கல்முனை -05.

## கவிதைப்போட்டி 1063



### அவள் பசி தீர...


பாராட்டுக்குரியது

ஆழ அடங்கும் வாழ்க்கையில்
தேடி வரும் துன்பங்கள்
எத்தனை.
பெற்றவர்களை இழந்து
நாழச்செல்ல நாதி இல்லை என
அண்ணனின் அன்பிலே – தன்
துன்பங்களை மறந்து
அன்னத்தை உண்ணும்
ஒரு தங்கை.
அவள் பார்வையே இங்கு
எதிர்காலத்தை நோக்கி
ஏங்குகிறது.
எதையும் தாங்கும் இதயம்
இருக்க எதிர்காலம் நமக்கு
துணை இருக்கும் என
தன் பசி மறந்து தங்கைக்காக
அன்னத்தை ஊட்டுகிறான் – ஓர்
அண்ணன் அவள் பசிதீர.

இ.யோகன்.
புத்தளம்.




## கவிதைப் போட்டி இல 1066



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவுசெய்து அனுப்பிவையுங்கள்.
அனுப்பவேண்டிய கடைசித் திகதி 26.06.2014

கவிதைப் போட்டி இல. 1066 தினமுரசு வாரமலர்,
த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

### உயிர் உள்ளவரை...

உயிர் உள்ளவரை உன்னையும் – உன்
நினைவுகளையும் சுகமாய் சுமக்கும்
என் இதயமும் ஒரு தாய்தான்.

யோ.சறோ.

### அம்மா எங்கே?

தாய்ப்பால் குடித்த
தங்கையின் நிலையாயிது
தாயில்லா தங்கைக்கு
தாய்ப்பால் மறக்குமுன்
அண்ணனாய் பிறந்தவன்
அன்னம் ஊட்டுகிறான்
அதனால் பாலகி பார்வை
அம்மாவை தேடுகிறது.

எம்.சி.கலீல், கல்முனை-05.

### ஊனமில்லை

அனாதையாய் பரிதவிக்கும்
இப்பாலகியின் பசிபோக்க
தனக்குக் கிடைக்கும் அன்னத்தை
அவளுக்கு ஊட்டுகிறானே...
இவனது காலொன்றுதான் ஊனம்...
நெஞ்சத்திலோ கிஞ்சித்தும்
ஊனமில்லை.

அ.சந்தியாகோ, கண்டி.

### யுத்தத்தின் சித்தம் இது...

கொடும் யுத்தமது
தந்தையைக் காவுகொள்ள...
தாயவளோ வேலைதேடிச்
சென்றுவிட்டாள்.

தட்டிலுள்ள உணவிதுவோ
தங்கைக்கு போதுமிங்கே.
தமையன் இவன் ஊட்டுகிறான்.
தங்கை அவள் பசியாறுகிறாள்.

இனி இங்கு சிறு செம்புத்
தண்ணீரே தாய் – மகன்
குடல் நனைக்கும், நாளை
உலைப் பானை பொங்கும்வரை...

ஏ.எம்.கமால், புத்தளம்.

### அன்பின் ஆ...தங்கம்

கையால் பிசைந்து கவளம் கவளமாய்
தங்கைக்கு உணவூட்டும் இவன்
"அண்ணன் என்னடா தம்பி என்னடா
அவசரமான உலகத்திலே..." என்ற பாடல்
வரியை பாடையில் ஏற்றுகிறானோ?
இப்பாசமிகு அண்ணன்;
அன்னையையும் மிஞ்சிய அன்பின்
ஆதங்கம்.

K.M.A.அஸீஸ், சாய்ந்தமருது -11

## உங்கள் பக்கம்

### தனியார் மருந்தகங்களின் குறைபாடுகள்

சுகாதாரத் திணைக்களத்தினால் அனுமதி பெறப்பட்டு நடாத்தப்படுகின்ற தனியார் மருந்தகங்களில் பல்வேறு சிக்கல்களை நுகர்வோர் ஆகிய நாம் சந்தித்துவருவது வழமையாகிவிட்டது.

இவ்வாறாக மருந்தகங்களில் மருந்துகள் தொடர்பான கல்வி மற்றும் பயிற்சிகளைப் பெற்றவர்கள் கடமையாற்ற வேண்டுமென்பது நிபந்தனையாக இருக்கின்றபோதிலும் பெரும்பாலான மருந்தகங்களில் விற்பனைக்குள்ள மருந்துகளின் பெயர்களை உச்சரிக்க முடியாதவர்களும் அவை தொடர்பான போதிய அறிவு இல்லாதவர்களும் விற்பனை முகவர்களாக நியமிக்கப்பட்டிருப்பதை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது.

அதைவிட ஒரே வகையான மருந்துப் பொருட்கள் நிர்ணய விலை ஏதுமின்றி வெவ்வேறு விலைகளில் விற்கப்படுகின்றது. அதாவது ஒரே வர்த்தகப் பெயருடைய மருந்துப் பொருட்கள் ஒரே பிரதேசத்திலுள்ள வெவ்வேறான மருந்தகங்களில் வெவ்வேறான விலைகளில் விற்கப்படுகின்றது. இது நுகர்வோரை குழப்பமடையச் செய்வதுடன் அதிருப்தியடையவும் செய்கின்றது.

இவ்வாறு தனியார் மருந்தகங்களில் காணப்படுகின்ற பல்வேறு குறைபாடுகள் தொடர்பில் சம்மந்தப்பட்டவர்கள் கவனம் செலுத்தி நுகர்வோருக்கு ஏற்பட்டு வருகின்ற அசௌகரியங்களுக்கு தீர்வை பெற்றுத்தர வேண்டும்.

ஆர்.சாருமதி,
தெஹிவளை

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:- 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212223628
தொலைநகல்
(Fax): 0212221811
ஈமெயில்:
(E-mail):-
thinamurasu@live.com

### அமைதியின் சொற்கள்

**இனிமையான ஒரு உண்மை. உங்களுக்குள்ளே துடித்துக்கொண்டிருக்கின்றது. அதை அறிந்துகொள்ளுங்கள். அதைப் புரிந்துகொள்ளுங்கள். நீங்கள் உயிரோடு இருக்கும்பொழுதே அதை ஏற்றுக்கொள்ளுங்கள்.**

- பிரேம் ராவத்

### காலம் மாறுமா?

ஏப்.17-23, 2014 தினமுரசு வாரமலரில் அளவெட்டி ப.உதயகுமார் எழுதியிருந்த "பெண்கள் எதிர்கொள்ளும் சவால்கள்" என்ற கட்டுரையில் தமிழ்ப்பெண்களின் இன்றைய நிலை பற்றி விபரமாக எழுதியுள்ளார். இறுதியாக ஒரு பெண் இரவு 12 மணிக்கு... என்று தொடரும் வரியில் மகாத்மா காந்தி அவர்கள் குறிப்பிட்ட கருத்தைக் கூறியுள்ளார்.

கடந்த 2002ஆம் ஆண்டு போர்நிறுத்த காலத்தில் கொழும்பிலிருந்து வெளிவரும் தமிழ் நாளிதழ் ஒன்றின் ஆசிரியர் கிளிநொச்சிக்கு சென்றுவந்த தன் அனுபவத்தை தனது பத்திரிகையில் போர் முடிந்தபின்னர் பகிர்ந்துகொண்டதை இவ்விடத்தில் குறிப்பிட விரும்புகின்றேன்.

## வாசகர் சாலை

"இரவு 12 மணியளவில் தானும் வேறு சிலரும் கிளிநொச்சி A9 வீதியில் நின்றபோது ஒரு பெண் துவிச்சக்கர வண்டியில் தனியே வந்துகொண்டிருந்தாராம். அவரை வழிமறித்து "இந்த இரவில் தனியே செல்கிறீர்களே, உங்களுக்குப் பயமில்லையா? என்று கேட்டபோது, "என்ன பயம்" என்று அப்பெண் திருப்பிக்கேட்டாராம்.

எனவே மகாத்மா காந்தி அவர்கள் கண்ட கனவு எத்தனையோ ஆண்டுகளுக்குப் பின் நிறைவேறியிருந்தது.

எனவே அப்படியொரு காலம் திரும்பி வரவும் மாட்டாது. பெண்களுக்கு விடுதலையும் இல்லை என்பது மட்டும் உறுதி.

ம.அகல்யா, புளியங்குளம்.

### பல்லாண்டு வாழ்க!

கவிதை சுவை
என் இதயத்தை
கவர்ந்த தேன் சுவை
வார வாரம்
நான் அருந்தும்
தேன் சுவை
படிக்கப் படிக்க
சுவையூட்டும்
உன் கவிதையின் சுவை
எண்ணங்களை
பல திசைகளிலும்
திருப்பி
படைத்து,
இனிமையூட்டும்
'தினமுரசே'
"நீ பல்லாண்டு வாழ்க!"

P.Y.ஜேசுமணி, கண்டி.

# ஆளுகின்ற அரசில் பலமான சக்திகளாக இருக்க வேண்டும்

## இதனைத்தான் அமைச்சர் டக்ளஸ் செய்து கொண்டிருக்கின்றார்!

**-பிரதியமைச்சர் முரளீதரன் புகழாரம்!**



**"ஜனநாயகரீதியில் மாற்றத்தைக் கொண்டு வரவேண்டும். ஆளுகின்ற அரசில் பலமான அமைச்சர்களாக நாம் இருக்க வேண்டும். பேரம் பேசும் சக்கதிகளாக நாம் இருக்கவேண்டும். இதனைத்தான் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா செய்து கொண்டிருக்கின்றார்" இவ்வாறு மீள்குடியேற்றப் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளீதரன் தெரிவித்தார்.**

**பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டில், பனம்பொருள் கைப்பணி மாதிரிக் கிராமம் மட்டக்களப்பு மைலம்பாவெளியில் திறந்து வைக்கப்பட்டது. அந்நிகழ்வில் மீள்குடியேற்றப் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளீதரன் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றினார்.**

தொடர்ந்து உரையாற்றிய அவர், பாதிக்கப்பட்ட நமது சமூகத்தின் வாழ்க்கை நிலைமையை மேம்படுத்துவதற்காக இரவு பகலாகத் திட்டம் தீட்டிப் பாடுபட்டுக் கொண்டிருக்கின்ற எங்களுடைய அமைச்சரை மட்டக்களப்பு மற்றும் கிழக்கு மக்கள் சார்பாக நான் பாராட்டுகின்றேன். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்த அமைச்சைப் பொறுப்பெடுத்ததன் பின்புதான் மட்டக்களப்புப் பிரதேசத்தில் பனம்பொருள் உற்பத்தி புத்தெழுச்சி பெறத் துவங்கியிருக்கின்றது. மட்டக்களப்பில் பல்லாயிரக்கணக்கான பனை மரங்கள் இருந்தும் அதனை நாங்கள் ஒரு உற்பத்தி சார்ந்த பொருளாதாரப் பொருளாக அடையாளம் கண்டுகொள்ளவில்லை.

தேடுவாரற்றுக் கிடக்கும் பனை மரங்களில் எங்களது மக்களின் வாழ்வாதாரம் தங்கியிருக்கிறது என்பது தொடர்பில் மட்டக்களப்பு மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் சிறந்த செயற்பாடுகளில் அமைச்சர் டக்ளஸ் தேவான்ந்தா ஈடுபட்டுள்ளார்.

தற்போதுள்ள நாடாளுமன்றத்திலே உள்ள ஒரேயொரு அனுபவம் வாய்ந்த சிரேஷ்ட தமிழ் அமைச்சர் என்றால் அது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாதான்.

அப்படிப்பட்டவர் ஒரு பற்றுறுதியுடன்தான் இங்கு வந்திருக்கின்றார். இதில் அரசியல் நோக்கங்கள் எதுவும் இல்லை.

மட்டக்களப்பு மாவட்டத்திலே எமது அனைத்துக் கட்டமைப்புக்களையும் பாரியளவில் நாம் அபிவிருத்தி செய்திருக்கின்றோம். பாதைகள், பாலங்கள், குளங்கள்,



பாடசாலைக் கட்டடங்கள், வைத்திய சாலைகள் என்று எங்கு சென்று எதனைப் பார்த்தாலும் பாரிய அபிவிருத்திகள் நடந்திருக்கின்றது.

ஆனால், கல்வி வளர்ச்சியில் தமிழ் சமூகம் பின்னடைந்ததற்கு முக்கிய காரணம் 30 வருடங்களாக நாம் எதிர்கொண்ட கொடிய யுத்தம்தான். அந்தப் பாதிப்புக்களை நாம் நிவர்த்தி செய்யவேண்டி உள்ளது. இன்னுமின்னும் அழிவுகளைச் சந்தித்துக் கொண்டிருக்க முடியாது.

யுத்தக்கள வெற்றிக்குப் பின்னாலிருக்கும் வேதனைகளும் வலிகளும், பட்டாசு கொளுத்தி யுத்த வெற்றியைக் கொண்டாடும் தூரத்திலிருக்கும் பார்வையாளர்களுக்குத் தெரியாது.

யுத்த வெற்றிக்குப் பின்னால் ஆயிரம் போராளிகள் களத்திலே மடிந்து கிடக்க மேலும் அதைவிடப் பன்மடங்கில் போராளிகள் காயம் பட்டு குற்றுயிரும் குறை உயிருமாய்க் கிடப்பர். இதனால்தான் நாம் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்தோம்.

இப்பொழுது யுத்த வடுக்களே இல்லாமல் வடபகுதி பாரிய அபிவிருத்தி கண்டிருக்கிறதென்றால் அதற்கு முழுக்காரணமும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாதான்.

நீங்கள் இன்று அனுபவிக்கும் சுதந்திரமும் இதனால்தான் கிடைத்தது. அதற்காக உரிமையை இழக்கப் போவதுமில்லை விட்டுக் கொடுக்கப்போவதுமில்லை, என்றார்.

மைலம்பாவெளியில் திறந்து வைக்கப்பட்ட பனம்பொருள் கைப்பணி மாதிரிக் கிராம பயிற்சி நிலையத்தில் 178 பெண்கள் தற்பொழுது பனம்பொருள் உற்பத்தி கைப்பணி பயிற்சி பெற்றுவருகின்றனர்.

## இலங்கையில் இழந்ததை மாலைதீவில் ஈடேற்றப்படுமா?

இந்தியாவின் தெற்கு எல்லையருகே உள்ள நாடான மாலைதீவு, புதிதாக அமைக்கவுள்ள கடற்படை தளத்திற்கு உதவி வழங்குவதாக புதுடில்லி சமிக்ஞை கொடுத்துள்ளது. இந்திய மதிப்பில், ரூ.3,000 கோடி பெறுமதியான திட்டம் இது.

மாலைதீவுக்கு கடற்படை விஷயத்தில் புதுடில்லி கைகொடுப்பதற்கு, இராணுவரீதியான காரணங்கள் உள்ளன. அவற்றில் முதன்மையானது, மாலைதீவுக்கு இதே கடற்படை தளத்தை உருவாக்கிக் கொடுக்க சீனா முன்வந்திருந்தது என்பதுதான்.

இந்தியாவின் தென்முனையில் உள்ள இரண்டு நாடுகளான இலங்கை, மற்றும் மாலைதீவில்; தமது கடற்படை தளங்களை அமைப்பதில் சீனா அதிக ஆர்வத்துடன் உள்ளது. ஏற்கனவே இலங்கையில் ஹம்பாந்தோட்டை துறைமுகம், சீனாவால் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

ஹம்பாந்தோட்டையை, சீன போர்க்கப்பல்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். அத்துடன், தென்-சீன கடலில் இருந்து, சுயெஸ் கால்வாய் நோக்கி செல்லும் கடல்பாதையில், எரிபொருள் மீள்நிரப்பும் தளமாகவும், ஹம்பாந்தோட்டையை பயன்படுத்திக் கொள்ளலாம்.

அந்த வாய்ப்பு இந்தியாவுக்கு கிடைக்காதது இந்தியாவுக்கு நெருடலாகவே இருந்துவருகின்றது.

இந்நிலையில், ஒழுங்கான கடற்படை தளம் ஒன்று இல்லாத மாலைதீவில் அதிகாரத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட முன்னாள் ஜனாதிபதி மொஹமெட் நசீத் கொடுத்த பேட்டி ஒன்றில், மாலைதீவுக்காக கடற்படை தளம் ஒன்றை அமைத்துக் கொடுக்க சீனா தயாராக இருந்த விஷயத்தை முதல் தடவையாக 2012ஆம் ஆண்டு வெளியிட்டார்.

தாம் பதவியில் இருந்து அகற்றப்படுவதற்கு ஒரு வாரத்துக்கு முன்பு, கடற்படை தளம் அமைப்பதற்கு சீனாவுடன் ஒப்பந்தம் செய்துகொள்ளும்படி, தமது இராணுவ தலைமையில் இருந்து கடும் அழுத்தங்கள் வந்ததாக தெரிவித்தார். சீன ஒப்பந்தத்தை தாம் மறுத்துவிட்டதும், தமது பதவி பறிபோக காரணமாக இருந்தது எனவும் கூறினார் அவர்.


அவரையடுத்து ஆட்சிக்குவந்த புதிய அரசு, சீனா பக்கமாக சாய்வதை இராஜதந்திர ரீதியில் தடுத்துவருகிறது இந்தியா. மாலைதீவு இராணுவத்தினருக்கு, இந்திய இராணுவ அக்கடமிகளில் பயிற்சி வழங்கும் திட்டமும் தற்போது பரிசீலனையில் உள்ளது.

தற்போது மாலைதீவு தமது கடற்படை தளத்தை அமைக்க திட்டமிட்டு உள்ளதையடுத்து, இந்தியா அந்த திட்டத்துக்கு கைகொடுக்க முடிவு செய்துள்ளது.

தலைநகர் மாலே-வின் வடமேற்கே அமையவுள்ள இந்த கடற்படை தளத்தில், நவீன வசதிகளுடன், கப்பல் பழுதுபார்ப்பு, பராமரிப்பு, கடற்படையினருக்கான பயிற்சி மையங்கள் ஆகியவற்றுடன், சுமார் 1000 கடற்படை வீரர்கள் தங்கும் வசதியும் அமைக்கப்படுவதே, மாலைதீவு வைத்திருக்கும் திட்டம்!

இந்திய இராணுவ தளபதி, இந்த வாரம் மாலைதீவுக்கு விஜயம் செய்யவுள்ளார். அப்போது, ஏதாவது பேசி முடிக்கப்படலாம்.

## இரகசியங்களை கொடுத்தவர்களுக்கு கௌரவ பதவி



ஜெர்மனியை சேர்ந்த கணினி ஊடுருவல் (ஹொக்கிங்) குழு ஒன்று, அமெரிக்க உளவுத்துறை இரகசியங்கள் வெளியிட்ட எட்வார்ட் ஸ்னோடனுக்கும், செல்சியா மேனிங்குக்கும் (விக்கிலீக்ஸுக்கு அமெரிக்க இரகசியங்களை கொடுத்தவர்) கௌரவ உறுப்பினர் பதவியை கொடுப்பதாக அறிவித்துள்ளது.

The Chaos Computer Club என்ற இந்த குழு, ஸ்னோடன், மேனிங் ஆகியோரை கௌரவ உறுப்பினர்கள் ஆக்கவேண்டும் என தமது உறுப்பினர்கள் அனைவரும் மிக்க ஆர்வத்துடன் வாக்களித்துள்ளதாக தெரிவித்துள்ளது.

தம்மை "ஐரோப்பாவின் மிகப் பெரிய கம்பியூட்டர் ஹொக்கிங் குழு" என வர்ணித்துக்கொள்ளும் இந்த அமைப்பின் பெண் செய்தித் தொடர்பாளர் கொன்ஸ்டான்ஸ் கேர்ஸ், "தற்போது ரஷ்யாவில் தங்கியுள்ள ஸ்னோடனை அமெரிக்காவுக்கு நாடு கடத்தும் திட்டத்தை தடுத்து நிறுத்த சட்டரீதியான போராட்டம் நடத்தவேண்டுமென்றால், அதற்கு நிதியுதவி செய்யவும் எமது அமைப்பு தயாராக உள்ளது" என அறிவித்துள்ளார்.

இவர்களால் கௌரவ உறுப்பினர் பதவி கொடுக்கப்பட்டுள்ள செல்சியா மேனிங், தற்போது அமெரிக்காவில் 35 ஆண்டு சிறைத்தண்டனையை அனுபவித்துவருகிறார். ஸ்னோடன் அமெரிக்காவுக்கு நாடு கடத்தப்பட்டு, சட்டத்தின்முன் நிறுத்தப்பட்டால், அவருக்கு குறைந்தபட்சம் 30 ஆண்டு கால சிறைதண்டனை வழங்கப்படலாம் எனக் கூறப்பட்டுள்ளது.

## "உண்மையை சொல்லுங்கள்" வெளிநாட்டு தூதுவர்களிடம் ஜனாதிபதி

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேம்படுத்த வேண்டும் என்று கேட்டுகொண்டுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, நாட்டின் பல பாகங்களுக்கு விஜயம் செய்து, இங்குள்ள உண்மையான நிலைமைகளை உங்களின் நாடுகளுக்கு தெளிவுபடுத்துமாறு புதிய தூதுவர்களிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள ஆறு நாடுகளின் தூதுவர்கள் தங்களுடைய நியமனக்கடிதங்களை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் அலரிமாளிகையில் வைத்துக் கையளித்தனர். இதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இலங்கைக்கான தூதுவர்கள், இரு நாடுகளின் உறவுகளை வலுப்படுத்தவும் இலங்கை மக்கள் தொடர்பிலான நற்செய்திகளையும் அடிமட்ட நிலைமைகளையும் தமது நாடுகளின் தலைவர்களுக்கு எடுத்துச் சொல்லவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

## முடிவெட்டிய ஆசிரியைக்கு சரீர பிணை

வத்தேகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாடசாலையொன்றில் ஆறாம் தரத்தில் கல்விபயிலும் மாணவியொருவரின் விருப்பத்திற்கு மாறாக வகுப்பறையிலேயே வைத்து அந்த மாணவியின் தலைமுடியை வெட்டிய ஆசிரியைகள் இருவரை தெல்தெனிய நீதவான் நீதிமன்றம் தலா 25 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் விடுதலை செய்துள்ளது.

வாரமலர்
# தினமுரசு

த.பெ.இல:- 167. யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 3628
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com

## முரசம்

வாசகர்களுக்கு வணக்கம்!

## கூட்டமைப்பு தூங்குவதுபோல் நடிக்கின்றது!!

"அரசாங்கம் நியாயமாக நடக்கா விட்டால் அரசிலிருந்து விலகுவேன் அமைச்சர் டக்ளஸ்" இப்படியொரு தலைப்போடு கடந்த பன்னிரெண்டாம் திகதி தமிழ் தேசிய நாளிதழ்கள் முன்பக்கத்தில் செய்தி வெளியிட்டிருந்தன.

அமைச்சர் மக்களுக்கு எத்தனையோ நலத்திட்டங்களைச் செய்து அது தொடர்பான செய்திகளை ஊடகங்களுக்கு அனுப்பிவிட்டு போடுவார்களா என்று காத்திருக்கும்போது அதை போடாத ஊடகங்கள் அல்லது கால தாமதப்படுத்தி பொருத்தமற்ற பொழுதொன்றில் செய்தியை ஒப்புக்கு வெளியிடும் ஊடகங்கள் மேற்படி செய்திக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளன.

அமைச்சர் அரசில் இருந்துகொண்டு அரசுக்கு சவால் விடுத்துள்ளார் என்ற தோரணையில் சிலரும், அரசு கவிழப் போகின்றது. அமைச்சர்களான சம்பிக்க, விமல், ஹக்கீம் வரிசையில் அமைச்சர் டக்ளஸும் அரசுக்கு சவால் விடுத்துள்ளாரோ எனச்சிலரும் அந்தச் செய்தியை வாசித்தார்கள்.

ஆனால், அந்தச் செய்தியோ தெரிவுக் குழுவுக்கு கூட்டமைப்பை வருமாறும், அரசுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துமாறும், அவ்வாறு நடத்தப்படுகின்ற பேச்சுக்களில் அரசு நேர்மையாக நடந்து கொள்ளவில்லை என்று கருதும் பட்சத்தில் தாம் அரசிலிருந்து விலகுவதாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குறிப்பிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் பிரச்சினையை தீர்ப்பதற்கு, வாய்த்த பல சந்தர்ப்பங்களை தமிழ் தரப்பில் தலைமை வகித்தவர்கள் கடந்த காலத்தில் சரியாக பயன்படுத்திக் கொள்ளவில்லை. அதில் தவறுகளை செய்திருக்கின்றார்கள். அதன் விளைவாக தமிழ் மக்கள் ஈடுசெய்ய முடியாத இழப்புக்களை சந்தித்துள்ளனர். தற்போது எஞ்சியிருப்பது பாராளுமன்றத் தெரிவுக்குழு என்ற ஒரே வாய்ப்பு மட்டும்தான். அதையும் தமிழ் மக்கள் தவறவிட்டுவிடக்கூடாது.

கூட்டமைப்பு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவது, ஒருங்கிணைப் புக்குழுக் கூட்டங்களில் கலந்துகொள்வது, மத்திய அரசுடன் தனித்துவமான பேச்சுக் களில் ஈடுபடுவது எனப்பல விடயங்களில் முதலில் ஒரு ஆவேசமான கருத்தைக் கூறு வதும், பின்னர் அதற்கொரு நியாயத்தை கூறியபடி அதற்குள் தம்மை நுழைத்துக் கொண்டும் போக்குக்காட்டி வந்துள்ளனர்.

அதுபோல் தெரிவுக்குழு விடயத்திலும் கூட்டமைப்பு போக்கு காட்டும் அரசியலையே செய்துகொண்டுள்ளது. அதை தவிர்த்து தெரிவுக்குழுவை சரியாகப் பயன்படுத்த வேண்டும். இந்தக் கதவையும் நாளாந்த மாற்றம் மூடிவிடுமாக இருந்தால் தமிழ் மக்களின் நிலை அதோ கதிதான். வாய்ப்பு களை உருவாக்குகின்ற நிலையில் இன்று தமிழ் மக்கள் இல்லை. ஆகவே உருவாகுகின்ற வாய்ப்புக்களை நாமே சரியாக பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்பதே சமகாலத்தின் தமிழர் அரசியல் நகர்வாக இருக்கவேண்டும்.

இத்தகைய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கூட்டமைப்புக்கு சுட்டிக் காட்டியிருந்தார். அமைச்சரின் கருத்தை ஊடகங்களும் உள்வாங்கிக் கொண்டு மக்களுக்கு யதார்த்தத்தை தொடர்ந்து உணர்த்தவேண்டும்.

மீண்டும் மறுமடலில் வந்து கலக்கும்வரை
என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

# புலம்பெயரும் குற்றவாளிகள்?

**இம்மாதம்** ஐந்தாம் திகதி இலங்கை முல்லைத்தீவு பகுதியிலிருந்து மூன்று ஆண்கள், இரண்டு பெண்கள் மற்றும் ஐந்து பிள்ளைகள் என பத்துப்பேர் தென்னிந்தியக் கரையான தனுஷ்கோடி அரிச்சல்முனைப் பகுதிக்கு அகதிகளாகச் சென்று தமிழ் காவல் துறையினரிடம் சரணடைந்தனர்.

அவர்கள்மீது பாஸ்போட் சட்டத்தின்கீழ் வழக்குப்பதிவு செய்து எதிர்வரும் பத்தொன்பதாம் திகதிவரை புழல் சிறையில் அடைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.



பின்னர் கிடைத்த செய்தி களின்படி அந்த இலங்கையர் களை இராமநாதபுரம் மாவட்டத் தில் இடைத்தங்கல் முகாமில் தங்கச் செய்வதற்கான ஏற்பாடு கள் செய்யப்பட்டிருப்பதாக தெரியவருகின்றது.

இவர்கள் இந்திய அதிகாரி களிடம் தாம் அகதியாக வந்ததற்கு கூறிய காரணங்கள் இலங்கையில் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ் மக்க ளுக்கு ஆச்சரியமூட்டுகின்றன. அதாவது, இலங்கையில் தமிழ் மக்களை இராணுவம் மீண்டும் புலிகளெனக் கூறி கைது செய்கின்றது, கொலை செய்கின்றது, இளைஞர் - யுவதிகளை புலிகள் எனக்கூறி பிடித்துச் சென்று பூசா சிறையில் அடைக்கின்றது, இராணுவத்தின் இவ்வாறான கொடுமைகளுக்குப் பயந்து ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் காடுகளுக்குள் மறைந்து வாழ்கின்றனர், பல குடும்பங்கள் மீண்டும் தமிழகத்துக்கு அகதிகளாக வருவதற்கு தயாராகவே இருக்கின்றார்கள். இப்படியெல் லாம் வாக்குமூலம் வழங்கி இருக்கின்றார்கள்.

இவர்களின் பெயர்களையும் ஊடகங்கள் வெளியிட்டுள்ளன. தயாபரராஜன், உதயகலா, தவேந்திரன், கணேஸ்சுதாகர், ரமேக்கா ஆகியவர்களின் பெயர்களே அவையாகும்.

யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த அந்த காலத்தில் இடம்பெயர்ந்து உலக நாடு களெங்கும் ஓடினார்கள், அகதிகளாக வாழ்ந்தார்கள். இன்னும்கூட பல ஆண்டுகளாக தாம் வாழும் நாடுகளில் அகதிகளாகவே வாழ்ந்து கொண்டும் இருக்கின்றார்கள். சுமார் பதினைந்து இலட்சம் இலங்கைத் தமிழர்கள் உலகம் பூராகவும் பரந்து வாழ்ந்து வருகின்றனர்.

யுத்தத்துக்குப் பின்னரும் நாட்டைவிட்டு வெளியேறி வரும் தமிழ் மக்களின் எண்ணிக்கை மிக அதிகமாகவே உள்ளது. பெரும்பாலானோர் கனடா, அவுஸ்திரேலியா போய்விட்டால் அகதியாக, அதேநேரம் பொருளாதாரம் ஈட்டுகின்ற நோக்கம் இவை இரண்டும் பிரதான நோக்கமாகும்.

ஆபத்துமிகுந்த கடற் பயணத்தை மேற்கொண்டு தமிழர்கள் அவுஸ்திரேலியா வுக்குச் செல்லும் தமது முயற்சியை இன்னும் தொடர்கின்றார்கள். ஆட்களைக் கடத்தும் முகவர்கள் ஒரு வருக்கு ஆறு இலட்சம் என்ற கணக்கில் இன்னும் ஆட் கடத்தலைச் செய்துவருகின்றனர். இதற்கான தளங்களாக இந்தியாவின் கரையோர மாநிலங்களான தமிழ்நாடு, கேரளா, கொச்சின் பகுதிகளை யும், தாய்லாந்து, கிறிஸ்மஸ் தீவு போன்ற பகுதிகளையும் ஆட்கடத்தல்காரர்கள் பயன்படுத்திவருகின்றனர்.

இவை ஒன்றும் இரகசியமோ, மறைப்பதற்குரியதோ இல்லை. இதற்கு காரணங்கள் பல உள்ளன. அவுஸ்திரேலியவின் அகதிகள் முகாமில் தஞ்சம் புகுந்துள்ள தமிழ் இளைஞர், யுவதிகள் கூறும் கதைகளை கேட்கும்போது, இலங்கையில் தமிழ் மக்களின் அவலமான வாழ்க்கையின் இன்னொரு பக்கத்தை உணரமுடியும்.

அதாவது, முன்னாள் புலிகளாக இருந்து புனர்வாழ்வு பெற்றவர்களின் எதிர்காலம் என்னவென்று தெரியவில்லை. சமூகத்தோடு இணைக்கப்பட வில்லை, சமூகத்திற்குள் நடுத்தெருவில் விடுவிக்கப்பட்டு இருக்கின்றோம். எதிர்காலம் பற்றிய எந்த பிடிமானமும் தெரியவில்லை. எப்போது வேண்டுமானாலும் நாங்கள் வேட்டையாடப்படுவோம் என்ற பயமே ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கின்றது.

முன்னாள் போராளிகள் என்ற சொற்பதமே எம்மை சமூகத்திலிருந்து வேறுபடுத்திக் காட்டுகின்ற கேவலமாக அடையாளமாகவே பதியப்பட்டு விட்டது. தமிழ் அரசியல் வாதிகள் எவரும் தமிழ் இளைஞர், யுவதிகளை இணைத்து எதிர்காலம் பற்றிய நம்பிக்கையைக் கொடுப்பதற்கோ, தொழில் வாய்ப்புக்களை வழங்கு வதற்கோ முன்வருவத்தாக இல்லை.

அங்கவீனர்களாகவும், விதவைகளாகவும் தமிழர் இனம் சீரழிந்துபோயுள்ளது. இதை அரசியலாகப் பாவிக்க முயற்சிக்கின்றார்களே தவிர, அந்த வாழ்விலிருந்து தமிழர்களை மீட்க எவரும் முன்வருவாரில்லை.

இந்த நிலையில் அந்த மண்ணைவிட்டு தூர தேச மொன்றில் வாழ்வதற்கே ஒவ்வொரு தமிழர்களும் முயற்சிக்கின்றார்கள். தமிழர் களை நாடு கடத்துவதற்கு ஒரு வாய்ப்பாக சில அதிகாரிகளே புலம்பெயர்ந்து போவதற்கு மறைமுகமாக உதவுகின்றனர். மறுபக்கத்தில் தமிழர்களின் இந்த மனநிலையை புரிந்து கொண்டு ஏமாற்றி பணம்பறிக்கும் சிலரும் தமது கைவரிசையைக் காட்டிக் கொண்டுதான் இருக்கின்றார்கள், என்றவாறு பல கதைகளைக் கூறுகின்றனர்.

இதற்கிடையே இன்னொரு வகையான் புலம்பெயர்வும் மறைமுகமாக இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. அது குறிப்பாக யாழ்ப்பாணத்திலேயே நடந்துகொண்டிருக்கின்றது. அதாவது குறிப்பிட்ட நாட் களுக்குள் தம்மை ஊடகவிய லாளர்களாக காட்டிக்கொண்டு, அரச எதிர்ப்பு இணையத்தளங் களுக்கு உண்மையும் பொய்யுமாக செய்திகளை வழங்குவது. பின்னர் வாய்ப்புக் கிடைக்கும்போது, பாதுகாப்புத் தரப்புடன் ஊடகவியலாளன் என்ற சிறப்புரிமையைக் காட்டி பிரச்சினைகளை தோற்றுவிப்பது. அதை புகைப்படமாகவும், செய்தியாகவும் பரபரப்பாக்கி விடுவது. பிறகு தமக்கு அரச புலனாய்வுப் பிரிவினால் அச்சுறுத்தல், படைகளால் ஆபத்து என்று காட்டிக் கொள்வது. இவை எல்லாவற்றை யும் ஆவணமாக்கி வெளிநாட்டு தூதரகங்களில் சமர்ப்பித்து தமக்கு உயிர்ப்பிச்சை வழங்குமாறு அழுதுமன்றாடி நாட்டைவிட்டு ஓடிவிடுவது.

இவ்வாறு திட்டமிட்டு நாட்டைவிட்டு வெளியேறிய சிலர் சுவிஸ், பிரான்ஸ் போன்ற நாடுகளுக்கு அண்மையில் சென்றுள்ளதாகவும், யாழ்ப்பாண த்தில், கோஷ்டிகளாகத் திரிந்த சில ஊடகவியலாளர்களை தற்போது காணமுடியவில்லை என்றும் அவர்கள் வெளிநாடு களில் பாதுகாப்பாக இருந்து கொண்டு தனியே இணையத் தளங்கள் நடத்தியும், புதினத்தளங்கள் நடத்தியும் வருகின்றனர்.

இதேபோல் இலங்கையில் சட்டவிரோதச் செயல்களில் ஈடுபட்டவர்களும், கொலை களைச் செய்தவர்களும், கொள்ளைகளில் ஈடுபட்டவர் களும் வசதியாக வெளிநாடு களுக்குச் சென்று தப்பித்து விடவும் முயற்சிக்கின்றனர்.

நாட்டைவிட்டு புலம்பெயர்ந்து போவோர் கூறுவதெல்லாம், இலங்கை அரசு கருத்துரிமையை மதிப்பதில்லை, மனித உரிமை-களை மீறிச் செயற்படுகின்றது, சாதாரண மக்களின் பாதுகாப்பு இலங்கையில் கேள்விக்கிட மாகவே உள்ளது என்பதாகவே உள்ளது.

நாட்டிலிருந்து குற்றங்களை, மோசடிகளைச் செய்துவிட்டு யுத்தத்தின் பெயரால் நாட்டை விட்டு ஓடி, இலங்கை அரசு மற்றும் படைகள்மீதும் அபாண்டமான குற்றச்சாட்டுக்களை கூறி தமக்கும், தமது குடும்பங்களுக்கும் வெளிநாடு களில் புகலிடம் பெற்றுக் கொண்டவர்கள் பலர் இருக்கின்றார்கள். அவர்களில் பலர் யுத்தத்துக்குப் பின்னர், தமது கடந்த காலத்தை மக்கள் மறந்துபோயிருப்பார்கள் என்று நம்பிக்கொண்டு தற்போது நாடு திரும்பி அரசியலிலும், வர்த்தகத்திலும் ஈடுபட்டுக் கொண்டும் இருக்கிறார்கள். இதில் சப்ரா நிதி நிறுவன மோசடி, வெளிநாட்டுக்கு ஆட் களை அனுப்புவதாக பல இலட்சம் மோசடி செய்தவர்கள், புலிகளுடன் ஒட்டியிருந்து தங்கத்தையும், பணத்தையும் வாரிச்சுருட்டியவர்கள் எனப் பல பேரைக் குறிப்பிடலாம்.

போருக்குப்பின்னரும் புலம் பெயர்ந்த பல குற்றவாளிகள் உள்ளனர். அவர்களில் ஒரு-வராகவே இறுதியாக கடந்த ஐந்தாம் திகதி இந்தியாவுக்கு அகதியாக சென்ற அதாவது இங்கே பல இலட்சம் ரூபாய் களை மோசடி செய்து தப்பித்து ஓடியவர் ஒருவரைக் குறிப்பிடலாம்.

அவர்களில் உதயகலா என்பவர், முல்லைத்தீவிலும் வவுனியாவிலும் பலரை வெளிநாட்டுக்கு அனுப்புவதாக கூறி, பல இல்ட்சங்களை சுருட்டியதாக தற்போது செய்திகள் வெளியாகியுள்ளன. அவர் அகதியாக இந்தியா செல்லவில்லை என்றும், மோசடியிலிருந்து தப்பித்தே ஓடியுள்ளார் என்றும் பாதிக் கப்பட்ட இளைஞர்கள் கூறியுள்ளனர். அதுபற்றிய தகவல்கள் சிலவற்றையும் கவனிப்பது அவசியமாகிறது.

தற்போது, இராமேஸ்வரம் முகாமில் சேர்க்கப்பட்டுள்ள இப்பெண் பண மோசடிகளில் ஈடுபட்ட சம்பவம் மக்கள் மத்தியில் பல சந்தேகங்களை ஏற்படுத்திவருகின்றது .

முல்லைத்தீவு, கிளிநொச்சி விஸ்வமடு மற்றும் கொழும்பு போன்ற பகுதிகளைச் சேர்ந்த தமிழ் இளைஞர், யுவதிகளை இலண்டன் அனுப்புவதாகக் கூறி இலட்சக்கணக்கில் பணம் அறவிட்டு வந்துள்ளார்.

கிளிநொச்சி - விஸ்வமடு பகுதியில் உள்ள பி.பிரபாகரன் (35) இவர் ஒரு வியாபாரி. வெளிநாடு சென்றால் கூடிய பணத்தை உழைக்க முடியும் என திருட்டுத்தனமாக செயற்பட்ட உதயகலா கூறியதாகவும் அதனையடுத்து இலண்டன் செல்ல முயற்சி எடுத்ததாகவும் கொழும்பு யூனியன் பிளேஸ் எக்சஸ் டவர் எனும் இடத்தில் நேர்முகப் பரீட்சைக்கு தோற்றிய போதே பதினான்கு இலட்சம் வழங்கியதாகவும் பாதிக்கப்பட்ட நபர் கூறியுள்ளார்.

அத்துடன் விஸ்வமடு -12-ம் கட்டை குமாரசாமிபுரம் பகுதியில் நான்கு நபரிடம் 18 இலட்சம், 13 இலட்சம், 07 இலட்சம், 12 இலட்சம் எனச் சுளைசுளை யாக வாங்கியதாகவும் . பாதிக்கப்பட்ட வேணுகோபால் மற்றும் யோகசீலன் ஆகியோர் குறிப்பிட்டுள்ளனர்.

(தொடர் 21 ஆம் பக்கம்)





# தொடரும் ஏமாற்றங்கள்

போய்ச்சேந்தாப்போலை ரெலி போனெடுங்கோ. மலேசியா வீசா எடுக்கிற அலுவல் செய்யவேணும். என்ரை நண்பனொருத்தன் ஐரோப்பாவிலயிருந்து வந்து மலேசியாவில நிக்கிறான். அவன் மலேசியாவுக்கான ஒரு வருச வீசாவும் எடுத்துத் தந்து இந்தோனேசியா அனுப்பி விடுவான். அடுத்து நீங்கள் அவுஸ்ரேலியா தான்... சிரித்தபடி சொல்லிக் கடைசிக் கதவுவரை வந்து வழியனுப்பிவிட்டான்.

அவன் சொன்னபடி சொல்லி விமானம் ஏறி சிங்கப்பூர் பயணமானாள். அழகான சிங்கப்பூரில் விமானம் தரையிறங்கியது. வகைவகையாய் மனிதர்கள். பலமொழி களில் உரையாடிக் கொண்டார்கள். அவளுக்கு சிங்கப்பூரில் தங்குவதற்கு ஒருமாத வீசா அடித்துக் கொடுத்தார்கள். எல்லாமே புதிய அனுபவமாக எல்லாத் துன்பங்களில் இருந்தும் விடுதலையானது போல உணர்ந்தாள்.

அவன் சொன்னதுபோல ரக்சி பிடித்து கொட்டேலொன்றுக்குப் போனாள். தன்னால் பேசத்தெரிந்த ஆங்கில அறிவைக்கொண்டு தனக்கான அறையை தனக்கான உணவை யெல்லாம் பெற்றுக்கொண்டாள். அவளை அனுப்பிவைத்த முகவருக்குத் தகவல் அனுப்பினாள். 2நாளில் ஐரோப்பாவிலிருந்து வந்து மலேசியாவில் நிற்கும் அவனது நண்பன் தொடர்பு கொள்வானெனச் சொன்னான். அவள் அழைக்கத் தேவையில்லை, அவனே தொடர்பு கொள்வான் எனவும் சொன்னான்.

அந்தப் புதிய முகவருக்காக இருவாரங்கள் காத்திருந்தாள். அவன் தொடர்பு கொள்ளவே இல்லை. அவளை அனுப்பிய முகவருக்குத் தகவல் சொன்னாள். ஆனால் அவனோ இன்று நாளையென நாளைக் கடத்திக் கொண்டிருந்தான். கடைசியில் அவனது தொலைபேசி இலக்கமும் தொடர்பறுந்துபோனது.

மீண்டும் ஏமாந்து உடைந்துபோனாள். கொண்டுவந்த பணமும் கரைந்து சில ஆயிரங்கள்தான் மிச்சம். வேறு எந்த வழியும் தெரியவில்லை. நாடு திரும்பும் முடிவில் பயணத் திகதியைக் குறித்தாள். தொடர் ஏமாற்றம், வெறுப்பு இயலாமை எல்லாம் மனசைச் சோர்வித்தது. அங்கேயே தன்னை அழித்துவிடுவோமோ என்றுகூட யோசித்தாள். இருந்த கொட்டேலின் மாடியில் நின்று கீழே பார்த்தாள். அங்கிருந்து குதித்தால் நிச்சயம் இறப்புத்தான் என்பது உறுதியானது.

தற்கொலை முடிவைச் சில கணங்களில் ஏனோ மாற்றினாள். ஊருக்குப்போக விமான நிலையம் போனாள். விமானத்தில் ஏறி தனக்கான இருக்கை இலக்கத்தைக் கண்டு பிடித்து இருந்தாள். விமானம் தரையைவிட்டு மெல்ல மெல்ல மேலெழும்பியது. அவளுக்கு வெளிச்சம் நிறைந்த சந்தோசங்கள், நிறைந்த வாழ்வைத் தரும் அவுஸ்ரேலியா போகும் கனவு தூள்தூளாக உடைந்தது. பச்சை நிரம்பிய அழகு அவளைவிட்டுத் தொலைந்து வெண்மை நிறைந்த பஞ்சுக்கூட்ட முகில்களை உதைத்துக் கொண்டு விமானம் இலங்கையை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது.

அழுகையாக வந்தது. ஏன் என்னை எல்லோருமே ஏமாற்றுகிறார்கள்? எனது ஊனத்தை எனது இயலாமையை ஏன் இப்படியெல்லாம் நாசம் செய்கிறார்கள்.? அழுதாள்... தனது கடந்த காலம், நிகழ்காலம் திரும்பத் திரும்பத் துயரங்களால் நிரம்புவதை நினைத்து நினைத்து அழுதாள்.

ரயிலேறி வவுனியா வந்தவள் திரும்பவும் அலையைத் தொடங்கினாள். வெளிநாடு போவதாப் போய் கடைசியில் கையில் இருந்த பணம் முழுவதையும் இழந்துவிட்டுத் திரும்பியதோடு எல்லாம் போய்விட்டது. அவளுக்கு வெளிநாட்டு ஆசையை அள்ளியிறைத்து அவளது பணத்தை அழிக்கக் காரணமாயிருந்த Varodlife நிறுவனத்தில் வாழும் பிரபுவைத் தொடர்பு கொண்டாள். தனது நிலைமையைச் சொன்னாள். தனது பணத்தைத் திருப்பி வாங்கித் தரும்படி அழுதாள்.

இன்று நாளையென நாளை இழுத்தடித்துக் கடைசியில் தன்னால் பணம்வாங்கிய தனது அத்தானுடன் தொடர்புகொள்ள முடியவில்லை யெனக் கைவிரித்தான் பிரபு. கடைசியில் ஒரு ஆலோசனை சொன்னான். அவளது நிலைமைகளை எழுதி அவளது படத்துடன் தருமாறு கேட்டான். கனடாவிலிருந்து உதவும் புலம்பெயர் தமிழர் நிறுவனம் ஒன்றின் ஊடாக அவளுக்கு உதவி பெற்றுத்தருவதாகச் சொன்னான்.

ஏற்கனவே பலரிடம் உதவிக்கு இறைஞ்சி ஓய்ந்து போய்விட்டாள். உதவியென்று வந்ததில் கூட பங்கு வாங்கினான் சூரியென்ற ஒருவன். தயாளனென்ற மற்றொருவன் என்னுடன் ஒருதரம் இருந்துவிட்டுப் போ உதவிகள் பெற்றுத் தருகிறேன் என்று தொல்லை தருகிறான். இவன் 3ஆவதாக மீண்டும் படம் கடிதம் கேட்கிறான். கேட்க எரிச்சல்தான் வந்தது.

அந்த நிறுவனத்தின் பெயர் என்னவென்று கேட்டாள். அந்த நிறுவனத்தின் பெயரைச் சொன்னான் பிரபு. ஏற்கனவே அவளுக்கு உதவியென்ற பெயரால் ஏமாற்றும் அந்த நிறுவனத்தின் முகவர்கள் 2பேரின் அநியாயத்திலிருந்து எங்ங சொல்லெனவே யோசித்திருக்க மூன்றாமவனாகத் தன்னை ஏமாற்றி அவளது பணத்தையும் ஏப்பமிட்ட இவனும் அந்த நிறுவனத்தின் முகவராம். உதவியும் வேண்டாம், நான் படமும் தரலல்ல கடிதமும் தரேல்ல... என்ர காசை உங்கடை அத்தானிட்ட வாங்கித் தாங்கோ பிரபு... அது காணும்... என்று மன்றாடினாள்.

தன்போல் ஊனமடைந்த ஒருவனான பிரபு தன்னை ஏமாற்றி தனது பணத்தைக் கொண்டுபோவான் என்று கனவிலும் எண்ணவில்லை. அவன் ஒரு போராளியாக இருந்தவன். இவள்போல எல்லாத் துன்பங் களையும் அனுபவித்தவன். உதவுவான் என நினைத்து 2லட்சத்தை இழந்துபோனது தான் பெருந்துயராயிருந்தது. பணத்துக்காக இலட்சியம், கொள்கைகள் எல்லாவற்றை யும் விற்றுவிட்டு யாரை ஏமாற்றி யாரிடம் பணம் பிடுங்குவதென்ற நினைப்போடே உலவும் பலரை நேரில்கண்டு ஏமாந்து போனாள் அன்பினி.

சிங்கப்பூரிலிருந்து திரும்பிவந்து அன்றாடச் சோற்றுக்கே அல்லாடிக் கொண்டிருந்த நாட்கள் அது. அவள்மீது கருணைகாட்டியவர் களின் புண்ணியத்தில் கிடைத்த ஒருநேரச் சோறும் பாணும் தேநீருமே அவளுக்கு இப்போதைய ஆறுதல்.

அத்தகைய ஒருநாள் அவளுக்கு வெளிநாட்டுத் தமிழர்களிடமிருந்து உதவி பெற்றுத்தருவதாகக் கூறி விபரம் பெற்றுக் கடைசியில் தன்னுடன் ஒருநாள் வாழ்ந்து விடுமாறு தொல்லைகொடுக்கும் தயாளன் தொடர்புகொண்டான். பழைய பல்லவி. அவளை இந்தியா அனுப்பிவிடுகிறானாம், அடுத்த வாரம் வவுனியா வருகிறானாம், அவசியம் சந்திக்கும்படி சொன்னான்.

தொலையாத தொல்லையாய் தயாளன் அவளை மீண்டும் துரத்தத் தொடங்கியதன் சாட்சியாய் அமைந்தது அந்த அழைப்பு. சனியனாய் அவன் அவளை மீண்டும் தொடரத் தொடங்கினான். காவல்துறையில் அறிவித்துவிடுவோமோ என யோசித்தாள். அவளது மனைவி, குழந்தைகள் ஞாபகம்வர அந்த முடிவையும் கைவிட்டாள்.

(ஏமாற்றங்கள் தொடரும்...)



# புலிகளின் வதை முகாமில்

வதை 113

மணியம்

இப்போது இவர்கள் பாதுகாப்பாக லண்டனிலும், சென்னையிலும், கொழும் பிலும் பாரீசிலும் இருந்து கொண்டு புலிகளுக்காக வேலை செய்கின்றனர். ஆனால் விசுவானந்த தேவன், அன்ரன், ரமணி, ஞானம் போன்ற அர்ப்பணிப்புள்ள தோழர்களும் வேறு பலரும் புலிகளால் வேட்டையாடப்பட்டுவிட்டனர்.

இந்த இடத்தில் இன்னொரு விடயத்தையும் குறிப்பிட விரும்பு கிறேன். தோழர் விசுவானந்த தேவன் 1986ஆம் ஆண்டு வேறு சில தோழர்களுடனும், நெடுந் தீவுக்கு பயணம் மேற்கொண்ட சில பொதுமக்களுடனும் சேர்ந்து இந்தியா செல்வதற்காக படகு ஒன்றில் பயணம் செய்தபோது காணாமல்போய் இருந்தார். அவர் பயணம் மேற்கொண்ட படகு சில இரத்தக் கறைகளுடன், அடுத்த நாள் நயினாதீவு கடற்படை முகாமில் காணப்பட்டதாகக் கூறப்பட்டது. அதுபற்றி விசுவானந்ததேவனுடன் பேராதனைப் பல்கலைக்கழகத் தில் கல்விகற்ற சில படை உயர் அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு சிலர் விசாரித்த போது, கடலில் அப்படியான படகு எதனையும் தாம் தாக்கவில்லை என்று கூறப்பட்டதாகவும் தகவல்.

அத்துடன் அந்தப் படகில் பயணம் மேற்கொண்ட இரு பதுக்கும் மேற்பட்டவர்களில் ஒருவரது சடலமாவது எங்குமே கரையொதுங்கவும் இல்லை. சில வட்டாரங்களிலிருந்து தெரிய வந்த தகவல்களின்படி, புலிகளே அந்தப் படகில் சென்ற அனை வரையும் கொலைசெய்து எங்காவது ஒரு தீவில் புதைத் திருக்கலாம் என நம்பப்படுகிறது. தோழர் விசுவானந்ததேவனும் அவரது தோழர்களுமே புலிகளது இலக்கு. ஆனால் அவர்களை மட்டும் கொலை செய்துவிட்டு அதில் பயணம் செய்தபொது மக்களை விட்டுவிட்டால், உண்மை வெளியே தெரிய வந்துவிடும். அதனால்தான் புலிகள் அனைவரையும் தீர்த்துக் கட்டியிருக்கிறார்கள் என்பதே பலரின் ஊகம். இதில் உள்ள உண்மை 'லயன் எயார்' விமானத்தைப் புலிகள்தான் சுட்டு வீழ்த்தினார்கள் என்ற உண்மையைத் தற்பொழுது இராணுவப் பாதுகாப்பில் உள்ள புலி உறுப்பினன் ஒருவன் வெளிப்படுத்தியது போல, யாராவது ஒரு புலி உறுப்பினன் தெரிவித்தால்தான் வெளிச்சமாகும்.

ஆனால், எனக்கு உள்ள சந்தேகம் என்னவென்றால், விசுவானந்ததேவன் என். எல். எப்.ரி இயக்கத்தைவிட்டு வெளியேறி தனியாக பி.எல். எப்.ரி இயக்கத்தை உருவாக்கிய போது, அதற்குள்ளும் சில புலி உளவாளிகள் ஊடுருவி இருந்திருக்கிறார்கள். அவர்களே விசுவானந்ததேவன் இந்தியாவுக் குப் பயணம்செய்யும் தகவலைப் புலிகளுக்குக் கொடுத்து அவரை புலிகளிடம் சிக்க வைத்திருக் கிறார்கள்.

விசுவானந்ததேவன் படகு ஏறுவதற்கு முன்பாக கடற்கரையில் விசுவானந்ததேவனின் இயக்க உறுப்பினர்கள் சிலர் நடந்து கொண்ட முறையும், அவர்களில் சிலர் பின்னர் நான் புலிகளின் கைதியாக இருந்தபோது, புலி களால் கைதுசெய்யப்பட்டு நான் இருந்த சிறைக்கு அழைத்து வரப்பட்டதும், அவர்களைப் புலிகள் நடாத்திய விதமும், என்னை விடுதலைசெய்யும் நேரத்தில் கபிலம்மான் விசுவானந்ததேவனின் தோழர் கள் பற்றிக் குறிப்பிட்ட சில விடயங்களும் சேர்ந்து, எனக்கு இந்த சந்தேகத்தை ஏற்படுத்தி உள்ளது. இந்த விடயம் குறித்துப் பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில் விரிவாக எழுதுவேன்.

ஆனால் ஒன்றைக் குறிப்பிட வேண்டும். அதாவது மிகுந்த கட்டுப்பாட்டுக்குப் பெயர்போன கம்யூனிஸ்ட்டுகள் உருவாக்கிய இயக்கத்துக்குள்ளேயே புலிகள் ஊடுருவி 'காரியம்' பார்த்திருக் கிறார்கள் என்றால், மற்றைய சாதாரண தேசியவாத இயக்கங் களுக்குள்ளே என்னென்ன 'பெரிய வேலைகள்' எல்லாம் செய்திருப்பார்கள்.

இந்த உண்மைகள் காந்தி போன்ற புலிகளின் முக்கிய நபர் களுக்குத் தெரியாததல்ல. இருந்தும் தெரியாதவர்கள்போல நடித்துக் கொண்டு என்னைக் குடைவதன் நோக்கம், இந்த விவகாரங்கள் எல்லாம் எனக்குத் தெரியுமா என்பதை அறிவதும், எங்காவது ஒரு சிறிய நூல் கிடைத்தால் அதை வைத்துக்கொண்டு, என்னையும் அதில் முடிச்சுப் போடு வதும் தான் புலிகளது நோக்கம். "கிடந்து நுழைபவனுக்கும் கீழால் நுழைபவனும் இருக்கிறான்" என்ற சிலேடைச் சொற்றொடர் போல, இத்தனை வருடகால அரசியல் அனுபவம் உள்ள நான், இந்த குள்ளப்புலி (நரி)களின் திட்டத்தை அறியாமலா இருப்பேன்?

**புலிகளின் சுத்தத் தமிழ் இயக்கத்தில் 'ஒட்டகம்' புகுந்த கதையும், மனிதர்கள் வதை முகாம் புகுந்த கதையும்!**

நான் அடைத்து வைக்கப்பட் டிருந்த ஆனைக்கோட்டைச் வதை முகாமிலிருந்து இடையிடையே சிலர் நள்ளிரவில் திடீரென வெளியே அடைத்துச் செல்லப் படுவர். அதற்கான காரணங்கள் பலவாறாக இருக்கும். சிலர் கொல்லப்படுவதற்காகக் கொண்டு செல்லப்படுவர் சிலர் தமது எஞ்சிய சிறை வாழ்க்கையை வேறு ஒரு சிறை முகாமில் கழிப்பதற்காக அழைத்துச் செல்லப்படுவர். அபூர்வமாக ஒரு சிலர் விடுதலை செய்யப்படு வதற்காகவும் கூட்டிச் செல்லப்படுவ துண்டு. ஆனால் இவர்களில் யாருக்குமே, தாம் எங்கே கொண்டு செல்லப்படுகிறோம் என்பது இறுதிவரை தெரிந்திருக்காது.

கைதிகள் வெளியே கொண்டு செல்லப்படுவது இடையிடையே நிகழும் விடயமாக இருந்த அதே வேளையில், உள்ளே வருபவர்கள் பெரும்பாலும் தினசரி வந்த வண்ணம் இருப்பர். அவர்களில் சிலர் வேறு சிறைகளில் இருந்து இங்கு கொண்டு வரப்படுபவர் களாக இருப்பர். பெரும்பாலோர் அன்றோ அல்லது ஒருசில தினங் கள் முன்னதாகவோ, ஏதாவது ஒரு குற்றச்சாட்டில் புலிகளினால் பிடிக்கப்பட்டவர்களாக இருப்பர்.

அப்படி வருபவர்களிடம் உள்ளே உள்ள கைதிகள் உடன டியாகப் பேசமாட்டார்கள். அதற்குப் பிரதான காரணம், வருபவர் புலிகளினால் திட்டமிட்டு அனுப்பப்பட்ட உளவாளியாக இருக்கலாம் என்ற சந்தேகம்தான். அடுத்த காரணம், அவருடன் அவசரப்பட்டுக் கதைத்துவிட்டால், அவர் தனது விசாரணையின் போது சொல்லிவிடலாம் என்ற அச்சம்.

புதிதாகப் பிடித்து வரப்படுபவர் களுடன் கதைப்பதில் உள்ளே இருப்பவர்கள் மிகவும் ஆவலாக இருப்பர். ஏனெனில் உள்ளே இருப்பவர்கள் மிக நீண்டகால மாக சிலர் பல வருடங்களாகக் கூட வெளியுலகத் தொடர்புகள் அற்று இருப்பதால், வெளியே நடைபெறும் விடயங்களை அறிய ஆவலாக இருப்பர். எனவே வருபவரை நன்கு அவதானித்து நோட்டமிட்டு, ஆபத்தில்லாதவர் என்று கண்டபின், அவரைப் 'பேட்டி' காண்பர்.

ஒரு நாள் இரவு புதிதாக ஒருவரை புலிகள் எமது சிறைச் சாலைக்கு 'விருந்தாளி'யாக அழைத்துவந்தனர். சிறைக் கதவுகளுக்கு வெளியே வைக்கப் பட்டிருந்த மண்ணெண்ணெய் கைவிளக்கின் ஒளியில் அந்தப் புதியவர் நரைத்த தலையுடனும், பெரிய மீசையுடனும் காணப் பட்டார். (தொடரும்...)




அராபியர்களின் கோபம், அந்தப் பாலைவனச் சூட்டைக் காட்டிலும் உக்கிரமாக இருந்தது. தங்களுக்கு நியாயம் செய்யாவிட்டால்கூட அவர்கள் பொறுத்துக் கொண்டிருப்பார்கள். ஆனால் தங்கள் குரலை முற்றிலுமாக இப்படிப் புறக் கணிக்கிறார்களே என்கிற துக்கம்தான் அவர்களின் கோபமாக உருப்பெற்றது.

சரித்திரத்தைத் திரும்பிப் பார்த்தால், ஏனைய ஐரோப்பிய தேசங்கள் அனைத்தைக் காட்டிலும் யூதர்கள் விஜயத்தில் மிகவும் பொறுமையாக, சகிப்புத் தன்மையுடன் நடந்து கொண்டவர்கள் பாலஸ்தீன அராபியர்கள்தான். இதை யூதர்களேகூட மறுக்க முடியாது. அவர்கள் எத்தனை முறை ஊரைவிட்டு வெளி யேறினாலும் திரும்பி வந்தால் ஏற்றுக்கொள்ளக் கூடியவர்களாக அராபியர் கள் இருந்திருக்கிறார்கள். பாலஸ்தீன் இரு மதத்தவரு க்கும் பொதுவான பூமி என்கிற எண்ணம் அவர் களின் அடிமனத்தில் எப்போதும் இருந்திருக்கிறது. தவிரவும் யூதர்களுடன் சமரசமாக நடந்து கொள்ளுங்கள் என்று முஹம்மது நபியே சொல்லி விட்டுப் போயிருக்கிறார் என்பதால், அதை மீறக் கூடிய இயல்பு முஸ்லிம்கள் யாருக்குமே எந்தக் காலத் திலும் இருந்ததில்லை.

அவர்கள் சம உரிமை, நிம்மதியான வாழ்க்கை பரிபூரண சுதந்திரம் ஆகிய வற்றைத்தான் கேட்டார்களே தவிர, பாலஸ்தீனில் யூதர் களே கூடாது என்று ஒரு போதும் சொன்னதில்லை. ஆனால், பாலஸ்தீனை இரண்டாகப் பிளந்து யூதர்களுக்குகென்று ஒரு தேசம் உருவாவதைத்தான் அவர்கள் எதிர்த்தார்கள். அதற்கு அவர்கள் சொன்ன காரணம் யூதர்களுக்குத் தனிநாடு கொடுத்தால் அவர் கள் முஸ்லிம்களை வாழவிட மாட்டார்கள்; அவர்களது நிலப்பரப்பை அபகரித்து விடுவார்கள் என்பதுதான்.

இதைத்தான் மற்றவர்கள் ஏற்கவில்லை. ஆனால், நடந்தது என்னவோ இது தான்! ஆக, யூதர்கள் விசயத்தில் அராபியர்கள் யோசித்தது சரியானதுதான். அது ஒரு தீர்க்கதரிசனம் தான் என்பது உண்மை யாகிறது. இல்லையா?

இதனால்தான் அவர்கள் கோபம் கொண்டார்கள். கோபம் தலைக்கேறியதால் வன்முறையில் இறங்கினார் கள். வன்முறை என்றாகி விட்ட பிறகு அதற்கு எல்லை கள் உண்டா என்ன? என்னென்ன உண்டோ அத்தனையும் செய்தார்கள்.

யூதர்கள் தரப்பில் முதலில் தற்காப்பு நடவடிக் கள் மட்டுமே மேற்கொள்ளப் பட்டன. ஆனால் ஓரிரு மாதங்களுக்கு மேல் அவர் களாலும் தாக்குப் பிடிக்க முடியாததால் யூதர்களும் சிறு சிறு குழுக்களாகச் சேர்ந்து, அராபியர் களின் கிராமங் களை, குடியிருப் புக்களைத் தாக்க ஆரம்பித்தார்கள்.

ஏப்ரல் 1948 ஆம் ஆண்டு தெர் யாசின் என்கிற அரேபிய கிராமத்துக்குள் புகுந்து யூதர்கள் அங்கிருந்த சுமார் நூற்று இருபது அராபியர்களைக் கொன்றுவிட்டு இரவோடு இரவாக ஓடிவிட்டார்கள்.

இதற்கான பின்விளைவு உடனே ஏற்பட்டது. உடனே என்றால் நான்காவது நாள்.



ஸ்காபஸ் என்கிற குன்றுப் பகுதியில் இருந்த ஒரு மருத்துவமனையில் பணி யாற்றிக் கொண்டிருந்த சுமார் எழுபத்தேழு டாக்டர் கள் சென்றுகொண்டிருந்த ஒரு வாகத்தை அரேபிய முஸ்லிம்கள் கடத்தினார்கள். கடத்தப்பட்ட அத்தனை டாக்டர்களும் உடனடியாகக் கொலை செய்யப்பட்டார்கள்.

இந்தச் சம்பவம் உலகெங்கும் பரபரப்பாகப் பேசப்பட்டது. யூதர்கள் தரப்பில் மிகுந்த கவனமுடன் இதனை ஓர் உருக்கமான பரபரப்பான துக்கம் சுமந்த, கண்ணீர் வரவழைக்கும் செய்தியாகத் தயாரிக்கப்பட்டு, அனைத்து செய்தி ஊடகங்களுக்கும் அனுப்பப்பட்டது.

மேற்படி சம்பவம் உருக்கமானதுதான். துக்க கரமானதுதான். மறுப்பதற் கில்லை. ஆனால் தெர் யாசின் கிராமப் படுகொலைகளுக்கு பதிலாகத்தான் அராபியர்கள் இதனைச் செய்தார்கள் என்கிற ஒரு செய்தி மட்டும் கவனமாக மறைக்கப்பட்டு விட்டது..

ஆகவே, விநாடிப் பொழுதில் அராபியர்கள் அத்தனைபேரும் காட்டுமிராண்டிகள், பயங்கர வாதிகள், ஆபத்தானவர்கள் என்பது போன்ற பிம்பம் சர் வதேச மீடியாவுக்கு வழங்கப் பட்டுவிட்டது. உயிர்பிழைத்து பாலஸ்தீனுக்கு ஓடிவந்த யூதர்கள் அங்கும் அநியாய மாகப் படுகொலை செய்யப் படுகிறார்கள் என்று மீடியா அலற ஆரம்பிக்க உலகம் முழுவதும் மக்கள் யூதா களின் அனுதாபிகளாக ஆகிப்போனார்கள். ஒட்டு மொத்த உலகத் தலைவர் களும் பாலஸ்தீனிய அராபியர் களுக்கு எதிராகக் குரல் கொடுக்க ஆரம்பித்தார்கள். பாலஸ்தீனில் உள்ள அராபியர்கள் அத்தனை பேரையும் இரும்புக்கரம் கொண்டு ஒடுக்கவேண்டும் என்று பேசினார்கள் – ஒரே ஒருவரைத் தவிர.

அவர் மகாத்மா காந்தி.

தமது ஹரிஜன் பத்திரிகை யில் இந்தச் சம்பவமெல்லாம் நடப்பதற்கு முன்பாகவே காந்தி எழுதிய ஒரு கட்டுரை தான் பாலஸ்தீன் நிலவரம் பற்றிய நியாயமான விமர்சனங் களை உள்ளடக்கிய ஒரே ஆவணம். உண்மையில் சொல்லப் போனால், பல அரேபிய தேசத் தலைவர் களே மகாத்மா காந்தியின் இந்த ஒரு கட்டுரையை வாசித்து பிறகுதான் புத்தி சாலித்தனமாக சிந்திக்கவும் பேசும் ஆரம்பித்தார்கள்.

'பாலஸ்தீன் யூதர்கள்" Jews In Palestine) என்று தலைப்பிட்டு காந்தி எழுதிய அந்தக் கட்டுரையில் இருந்து சில முக்கியமான பகுதிகளை மட்டும் பார்த்துவிட்டு மேலே போய்விடலாம். இதனைத் தெரிந்துகொள்ளாமல், பாலஸ்தீன் பிரச்சினையைப் புரிந்துகொள்வது மிகவும் சிரமம். ஏனெனில் அராபியர் களைக் காட்டிலும், யூதர் களைக் காட்டிலும் பாலஸ்தீன் பிரச்சினையை மிக நுணுக்கமாக ஆராய்ந்து வைத்திருந்தவர் காந்தி.

**இனி அக்கட்டுரையில் இருந்து சில பகுதிகள்**

☛ பாலஸ்தீனில் வசிக்கும் யூதர்கள்– அராபியர்களின் பிரச்சினை குறித்து எனது கருத்தைக் கேட்டு மொத்தம் ஏழு கடிதங்கள் எனக்கு வந்தன. ஜெர்மனியில் யூதர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் குறித்தும் என் கருத்தைப் பலர் கேட்கிறார்கள். மிகவும் சிக்கலான இவ்விஷயம் பற்றிச் சிறிது தயக்க முடன் தான் எழுதுகிறேன்.

☛ யூதர்களுக்கு என் அனு தாபம் உண்டு. நான் தென்னா பிரிக்காவில் இருந்த காலத்தில் அவர்களை மிக நெருக்கமாக அறிவேன். எனக்கே சில யூத நண்பர்களும் இருக்கிறார்கள். அவர்கள்மூலம் யூதர்களில் ஆண்டாண்டு கால அவலங்கள் குறித்து அறிந்திருக்கிறேன். அரிஜனங்களை ஹிந்துக்கள் எப்படி தீண்டத்தகாதவர்களாக நடத்துகிறார்களோ, அதே மாதிரி யூதர்களைக் கிருத்தவர்கள் நடத்தியிருக் கிறார்கள். இதற்கான எனது அனுதாபம் உண்டே தவிர, நீதி என்று வரும்போது இந்த அனுதாபம் குறுக்கிடாது.

☛ யூதர்கள் தமக்கென்று ஒரு தனிநாடு கேட்பது எனக்குச் சரியாகப்படவில்லை. அவர்களது பைபிளிலேயே அது குறிப்பிடப்பட்டிருப்பதாக வெல்லாம் அவர்கள் சொல் வதை ஏற்பதற்கில்லை. உலகில் மற்ற மக்கள் எல்லோரும் செய்வதுபோல, எங்கே அவர்கள் பிறந்து வளர்ந்தார்களோ, அந்த தேசத்தையே அவர்கள் தம் சொந்த தேசமாகப் பாவிப்பதில் என்ன கஷ்டம்?

☛ இங்கிலாந்து எப்படி பிரிட்டி ஷாருக்கு சொந்தமோ பிரான்ஸ் எப்படி பிரெஞ்சுக்காரர்களுக் குச் சொந்தமோ அதேமாதிரி, பாலஸ்தீன் என்பது அராபியர் களுக்குச் சொந்தமான நிலம்.

(தொடரும்...)




**ஆகையால்** பூமியதிர்வு என்று அதன் சுமையை அடையாளப் படுத்தியது!

அந்த அதிர்வுகளால் மக்கள் குடியிருப்புக்கள், சொத்துக்கள் உயிர்கள் பலவும் காவுகொள்ளப் பட்டது! அதில் அந்த ஏழை நிலவு களின் குடிலும் சிக்கிச்சிதறியது! அதன்பிறகு திக்குமுக்காடி அக்கம் பக்கம் உள்ளோருடன் இணைந்து அகதியாக சென்றடைந்தாள் சீதாதேவி!

காவுகொள்ளப்பட்ட உயிர்களின் கமலத்தின் உயிரும்போனது! இறந்த அனைத்து உடல்களையும் அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டது!

சம்பவம் நிகழ்ந்து மாதங்கள் பல கடந்தும் பெற்ற தாயின் சடங்கிலும் கலந்துகொள்ளாத சகோதரி எதற்கு?



அந்தக் கேள்வி தினமும் பலமுறை சீதாதேவியின் மனசில் எழும்! அக்கா கீதாஞ்சலியின் வீராப்பு வார்த்தைகள் அடிக்கடி ஞாபகத்தில் வட்டமிடும்.

அவ்வேளைகளில் கீதாஞ்சலியை கடுமையாய் வெறுப்பாள். "பெத்த தாயை, உடன்பிறந்த சகோதரிமேல் பாசம் அக்கறை இல்லாதவள் மொத்த தமிழ்மக்கள் மீதும் பாசம் வைத்து, நேசம்காட்டி உதவும் நினைப்புடன் சட்டத்தரணிக்கு படிக்கிறாளாம்... படிப்பு"

அது அவளுக்குள் எழும் கடுப்பு வார்த்தை!

எப்படியெல்லாம் அக்காவை திட்ட முடியுமோ... அப்படியெல்லாம் திட்டிக் கொண்டு அருகில் இருந்த அகத்தி யனிடம் கைபேசியை வாங்கி அக்காவின் கைபேசி இலக்கத்தை அழுத்தினாள்!

மறுமுனையில் கைபேசி இப்படிக் கூறியது...

"நீங்கள் அழைத்த டயலொக் இலக்கத்தை அடையமுடியவில்லை சிறிதுநேரத்தின் பின் முயற்சி செய்யுங்கள்"

மாறி மாறி அதே மந்திரத்தை ஓதியது கைபேசி!

சீதாதேவியின் அவலநிலையைப் பார்த்து கவலைப்பட்டான் அகத்தியன்! பரிதாபம் காட்டினான்.

காலம் நகர்ந்தது. அவர்கள் இருவருக்குள் காதலைப் புகுத்திய வண்ணம்! காதலின் பலம், சக்தி கல்லையும் காதல் கொள்ளவைத்து விடும். அவ்வகையில் அது ஒரு புதுமையும் இல்லை! அன்றைய சூழ்நிலையில் பலர் விவாகப்பதிவு இல்லாமல் குடும்பம் நடத்தினர்! அந்தப் பட்டியலில் அகத்தியன் குடும்பமும் இணைந்துகொண்டனர்!

அது மிகவும் இரகசியத் திருமணம்.

அந்தத் திருமணம் அவர் களுக்கும் படைத்த இறைவனுக்கும் மட்டும் இருக்கும் இரகசியம்!

இரகசியமாய் குடும்பம் நடத்திய வாறு அகத்தியன் இயக்கத்தில் இருந்து விலகுவதற்கு விலகல் கடிதம் பலமுறை விண்ணப்பித்தான்.

அவை நிராகரிக்கப்பட்டது!

ஒரு நாள் அகத்தியனின் பொறுப்பாளர் விலகலுக்கான தகுந்த காரணத்தை கூறும்படி கேட்டான்!

காரணம் முழுவதையும் கூறினான். கொடுத்த வேலைகளை விசுவாசத் துடன் செய்தவன், விசுவாசமாய் இருப்பவன் என்பதால் பொறுப்பாளரின் உள்நோக்கம் தெரியாமல் உளர ஆரம்பித்தான்.

"அண்ணே... நான் பத்து வருஷமாக போராளியாய் இருக்கிறேன். அதையும் விட நான் ஒரு அநாதை! இப்ப இன்னொரு அநாதையும் என்னோட..."

- "என்னடா சொல்லறே.. எனக்கு விளங்கல்லலே..." அண்ணே சிவராம் ஐயாட மகளை திருமணம் முடிக்கலாமெண்டு நினைச்சேன்.. அவங்கட குடும்பத்திலே 'எல்லாம் போராட்டத்துக்கு உதவுரவங்க தானே.." என்று அகத்தியனின் உள்ளக்குமுறல்களை உளறினான்!

பொறுப்பாளர் மௌனமாக செவிமடுத்துக் கொண்டிருந்தாலும் அக்த்தியனை வன்னிக்கு வர வழைப்பதையே சிந்தித்துக் கொண்டிருந்தான். உடனே அவன் எதையும் கூறவில்லை.

"சரி தம்பி பார்ப்போம். கதைக் கிறேன். தந்த வேலையைச் சரியாகச் செய்!" என்று கதையை நிறுத்திக் கொண்டான்!

ஒரு கிழமைக்கு பிறகு அகத்தியனை தொடர்புகொண்டு பொறுப்பாளர் ஒரு தகவலைக் கூறினார்!

"தம்பி நீங்க வன்னிக்கு வாங்கோ... உங்கட விலகல் கடிதத்தை பெரிய இடத்தில் இருந்து கொடுக்கச் சொல்லி அனுமதி கிடைச்சிருக்கு. தலைவர் சில வேலைகளையும் தரவேணுமாம் வன்னிக்கு வாங்க"

துரதிர்ஷ்டம் நடக்கப்போகிறது தெரியாத அகத்தியன் அதிர்ஷ்டமாய் நினைத்து துள்ளிக்குதித்து மனைவி சீதாதேவியிடம் விபரத்தைக் கூறினான். உடனே சீதாதேவி...

"அப்ப வன்னிக்க போகக்குள்ள நானும் வாறன். அண்ணாவையும் அப்பாவையும் பார்க்கவேணும்.

(நிலவுகள் வளரும்...)

**தொடர் 05**

**தனியொரு மத அடையாளத்தை மையப்படுத்தி - போலியாக தேசிய ஒற்றுமை என்கின்ற கருத்தை ஊக்குவித்துவரும் மத கடும்போக்குவாதிகளால் குழப்பங்களும் பல்வேறு அச்சுறுத்தல்கள் மற்றும் வன்முறைகளும் நாட்டில் நடந்துவருவதாகவும் பாப்பரசர் பிரான்சிஸ் கூறியுள்ளார்.**

**"இப்படியான கடும்போக்கானவர்கள் எல்லா சமூகங்களின் மத்தியிலும் இருக்கின்றார்கள். ஆனால் நாங்கள் அவர்களோடும் நல்லிணக்கத்தையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்த வேண்டும்" என்று பாப்பரசர் ஆலோசனை கூறினார்.**

# பொதுபல சேனாவுக்கு அதிகாரம் அனுசரணையா?

**ஏ.எச்.ஏ. ஹுஸைன்**

### பச்சை குத்திய பெண்ணிடம் மன்னிப்புக் கோரல்

புத்தர் உருவத்தை தனது கைகளில் பச்சைக் குத்தியிருந்ததால் இலங்கையரின் மத உணர்வுகளைப் புண்படுத்தியதாக கைதுசெய்யப்பட்டு குற்றஞ்சாட்டப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த பிரிட்டிஷ் பிரஜையான நவோமி கோல்மேன் நீதிமன்ற உத்தரவின்படி ஏப்ரல் 24ஆம் திகதி இலங்கையிலிருந்து வெளியேற்றப்பட்டார்.

அவர் பிரிட்டனுக்கு திரும்பிச் செல்வதற்கான விமானப் பயணச்சீட்டை இலவசமாக வழங்கியிருந்த இலங்கை சுற்றுலாச் சபை அவருக்கு ஏற்பட்ட அசௌகரியங்களுக்காக மன்னிப்புக்கோருவதாகவும் அறிவித்து இருந்தது.

நீதிமன்ற உத்தரவு குறித்து தாங்கள் கருத்து ஏதும் சொல்ல முடியாது என்றாலும், அதுபற்றி தாங்கள் ஆழ்ந்த கவலை கொண்டிருப்பதாகவும் இது உணர்வுபூர்வமான விஷயம் என்றும் இலங்கையின் சுற்றுலாச் சபை கூறியது. இலங்கைக்கு இரண்டாவது அதிக எண்ணிக்கையில் வருபவர்கள் பிரிட்டிஷ் சுற்றுலாப் பயணிகளே என்று சுற்றுலாச் சபை தெரிவித்துள்ளது.

இதனிடையயே வெளியுறவு அமைச்சகம் மட்டுமே ஒருவரை நாட்டைவிட்டு வெளியேற்றும் உத்தரவைப் பிறப்பிக்க முடியும். சுற்றுலாவுக்காக வந்த அந்தப் பெண்மணியை நாட்டை விட்டு வெளியேற்றியிருக்கும் முறை சட்டவிரோதமானது என்று சந்திரபால குமாரகே எனும் வழக்கறிஞர் பி.பி.சி சிங்கள சேவையிடம் கூறியிருந்தார்.

### சமய முரண்பாடுகளை ஆராய விஷேட பொலிஸ் பிரிவு

சமய முரண்பாடுகள் தொடர்பில் கண்டறிவதற்கான விஷேட பொலிஸ் பிரிவு ஏப்ரல் 28ஆம் திகதி கொழும்பு, தர்மபால மாவத்தை இலக்கம் 135இல் அமைந்துள்ள பௌத்த மற்றும் சமய விவகாரங்களுக்கான அமைச்சின் 7ஆவது மாடியில் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

அங்குரார்ப்பண நிகழ்வில் பிரதமர் டி.எம். ஜயரட்ன, நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். அஸ்வர், பௌத்த மதவிவகார அமைச்சின் செயலாளர் எம்.கே.பி. திசா நாயக்க, பொலிஸ் மா அதிபர் என். கே. இலங்ககோன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்த புதிய பொலிஸ் பிரிவில், உதவி பொலிஸ் அதிகாரியின்கீழ் பொலிஸ் பரிசோதகர் மற்றும் கான்ஸ்டபிள்கள் ஆறு பேர் கடமையாற்றுவர். என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹண கூறினார்.

சமய முரண்பாடுகள் தொடர்பாக அவ்வப் பிரதேசங்களில் இருக்கின்ற பொலிஸ் நிலையங்களில் செய்யப்படுகின்ற முறைப்பாடுகள் தொடர்பில் திருப்தி கொள்ளாவிடின் இந்த பொலிஸ் பிரிவில் முறையிடலாம் என்றும் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இந்த முறைப்பாடுகள் தொடர்பில் 0112307674, 0112307964, 0112307688 அல்லது 0112307406 ஆகிய இலக்கங்களுடன் தொடர்புகொண்டு அறிவிக்க முடியும் எனவும் பொலிஸ் பேச்சாளர் கூறினார்.

### முதல் முறைப்பாட்டை பதிந்த பிக்குகள்

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பொலிஸ் பிரிவில் இலங்கை தவ்ஹீத் ஜமாத் முஸ்லிம் அமைப்பினருக்கு எதிராக சிங்கள ராவய அமைப்பு தனது முதலாவது முறைப்பாட்டினை ஏப்ரல் 28ஆம் திகதி பதிவு செய்தது.

### "890,000 சிங்களப் பெண்கள் மலடிகளாக்கப்பட்டுள்ளனர்" – பொதுபல சேனா

இலங்கைக்குள் செயற்பட்டுவரும் அரச சார்பற்ற நிறுவனமொன்றினால் கடந்த 10 வருட காலப்பகுதிக்குள் சிங்கள பௌத்த மதத்தைச் சேர்ந்த 8 இலட்சத்து 90 ஆயிரம் பெண்கள் குழந்தைப்பேறற்ற நிலைக்கு மலடிகளாக்கப்பட்டுள்ளனர் எனப் பொது பலசேனா அமைப்பு ஏப்ரல் 30ஆம் திகதி குற்றஞ்சாட்டியது.

உலக சனத்தொகையைக் கட்டுப்படுத்தும் நோக்கில் 1973ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வந்த "தங்கமான சிறிய குடும்பம்" என்ற வேலைத்திட்டத்தை மையமாகக்கொண்டே மேற்படி அரச சார்பற்ற நிறுவனத்தினால் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது என்றும் பொதுபல சேனா குறிப்பிட்டது.

கொழும்பு மாவட்டத்திலுள்ள பௌத்த மதத்தைச் சேர்ந்த சிங்களவர்களில் ஒன்றரை இலட்சம் பேரும் மத்திய கிழக்கில் வேலை வாய்ப்பு பெற்றுச் சென்றவர்களில் 80 ஆயிரம் பேரும் ஒட்டுமொத்த இலங்கையர்களில் இலட்சக்கணக்கானோரும் மதமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என பொதுபலசேனாவின் பொதுச் செயலாளர் கலகொடத்தே ஞானசாரர் தெரிவித்தார்.

### முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதிக்கு கடிதம்

மே 2-ம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்த முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இலங்கையில் பௌத்த கடும்போக்கு சக்திகளிடமிருந்து தமது சமூகத்தைப் பாதுகாக்குமாறு கேட்டுக் கொண்டனர்.

### "இலங்கையில் கடும்போக்கு மதவாதச் செயற்பாடுகள்" – பாப்பரசர்


இலங்கை கத்தோலிக்கத் திருச்சபையின் ஆயர்களுக்கும் பாப்பரசர் பிரான்சிஸ்"க்கும் இடையிலான சந்திப்பு வத்திக்கானில் மே 3 ஆம் திகதி நடைபெற்றது.

ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு தடவை நடைபெறும் பாப்பரசருடனான இப்படியானதொரு சந்திப்பில் இம்முறை இலங்கையின் 11 மறைமாவட்டங்களைச் சேர்ந்த ஆயர்கள் கலந்துகொண்டதாக வத்திக்கான் வானொலி செய்தி வெளியிட்டது.

"போர் முடிந்துவிட்ட போதிலும் நல்லிணக்கத்தை ஊக்குவிக்கவும் எல்லா மக்களின் மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கவும் தீர்க்கப்படாதுள்ள இனரீதியான குழப்பங்களை களையவும் இன்னும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியுள்ளது" என்று இலங்கை ஆயர்களுக்கான தனது செய்தியில் பாப்பரசர் கூறியிருந்தார்.

தனியொரு மத அடையாளத்தை மையப் படுத்தி - போலியாக தேசிய ஒற்றுமை என்கின்ற கருத்தை ஊக்குவித்துவரும் மத கடும்போக்குவாதிகளால் குழப்பங்களும் பல்வேறு அச்சுறுத்தல்கள் மற்றும் வன்முறைகளும் நாட்டில் நடந்துவருவதாகவும் பாப்பரசர் பிரான்சிஸ் கூறியுள்ளார்.

"இப்படியான கடும்போக்கானவர்கள் எல்லா சமூகங்களின் மத்தியிலும் இருக்கின்றார்கள். ஆனால் நாங்கள் அவர்களோடும் நல்லிணக்கத்தையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்த வேண்டும் என்று பாப்பரசர் ஆலோசனை கூறினார்" என்று வத்திக்கானிலிருந்து பி.பி.சி தமிழோசையிடம் பேசிய திருகோணமலை மறைமாவட்ட ஆயர் கிங்ஸிலி சுவாம்பிள்ளை தெரிவித்திருந்தார்.



"எங்களுக்கு அரசியல்ரீதியாக சமாதானம் வேண்டும் என்ற நிலையையும் நாங்கள் பாப்பரசரிடம் வலியுறுத்தினோம்" என்றும் ஆயர் கிங்ஸிலி சுவாம்பிள்ளை தெரிவித்தார்.

மத அடிப்படைவாதிகளின் செயற்பாடுகளுக்கு மத்தியிலும் கத்தோலிக்கத் திருச்சபை சமாதானத்தை வலியுறுத்திச் செயற்பட வேண்டும் என்பதையே பாப்பரசர் இலங்கை ஆயர்களுக்கு அளித்துள்ள செய்தியின் சாராம்சம் என்று வத்திக்கானிலிருந்து இலங்கை அடிகளார் ஜோர்ஜ் திசாநாயக்க பி.பி.சி தமிழோசையிடம் கூறினார்.

இலங்கையில் கடந்த காலங்களில் சில கடும்போக்கு பௌத்த அமைப்புகள் மதச் சிறுபான்மை சமூகங்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்ற நிலையில், அவற்றைத் தடுக்க அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்கின்ற குற்றச்சாட்டுக்களுக்கு மத்தியில் கிறிஸ்தவ உலகத்திடமிருந்து இந்தக் கருத்துக்கள் வெளிவந்துள்ளன.

### பொதுபல சேனா பிக்குகள் ஆறு பேருக்கு நீதிமன்றம் பிணை

புனித அல்குரானுக்கு அவமதிப்பு ஏற்படுத்தியது. ஜாதிக பலசேனா அமைப்பு நடத்திய ஊடக சந்திப்புக்கு இடையூறு ஏற்படுத்தியது ஆகிய குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியிருக்கும் பொதுபலசேனா அமைப்பின் செயலாளர் கலகொடத்தே ஞானசாரர் உட்பட ஆறு பிக்குகளை பிணையில் விடுதலை செய்யுமாறு கோட்டை மஜிஸ்ட்ரேட் நீதிமன்றம் மே 5-ம் திகதி உத்தரவிட்டது.

### நீதிமன்றம் விடுத்த உத்தரவிற்கு அமைய சம்பந்தப்பட்ட பிக்குகள் மே 5–ம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகினர்.

நீண்ட விசாரணையின் பின்பு சந்தேக நபர்களான பிக்குகளை பிணையின்கீழ் விடுதலை செய்யுமாறு நீதிபதி உத்தரவிட்டதாக பிரதி பொலிஸ் மா அதிபர் அனுர சேனாநாயக்க ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

"மதங்களுக்கு எதிராக தாக்குதல்களை மேற்கொள்ளும் குழுக்களுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்த நாம் தயங்க மாட்டோம். பௌத்த, இஸ்லாமிய மற்றும் கத்தோலிக்க சமுகத்தில்கூட மதங்களுக்கிடையே முறுகல் நிலைகளை ஏற்படுத்தும் குழுக்கள் இருக்கின்றன. இவர்களுக்கு எதிராக முறைபாடுகள் சமர்ப்பிக்கப்பட்டால் அதனை விசாரணை செய்வதற்கும் நாம் தயங்கமாட்டோம்." எனப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அனுரா சேனாநாயக்க தெரிவித்தார்.

பொலிஸார் எமக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்தியிருந்தாலும், பௌத்த மதத்திற்கு எதிராக செயற்படும் அமைச்சர் ரிஷாத் பதியுதீனுக்கு எதிராக சட்டம் ஏன் செயற்பட வில்லை என்று பிணையின்கீழ் விடுதலை செய்யப்பட்ட கலகொடத்தே ஞானசார தேரர் கேள்வி எழுப்பினார்.

தமக்கு எதிராக எந்த விதமான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாலும், சிங்கள பௌத்த மக்களுக்கு எதிராக செயற்படும் குழுக்களுக்கு எதிரான போராட்டம் தொடரும் என்றும் ஞானசாரர் சூளுரைத்தார்.

புத்தரை இழிவுபடுத்திய வழக்கில் முஸ்லீம் தலைவர் பிணையில் விடுதலை இலங்கையில் புத்தரை அவமதித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட இலங்கை தௌஹீத் ஜமாத் அமைப்பின் செயலாளர் அப்துல் ரபிக்தீன் என்பவரை, கடும் நிபந்தனைகள் கொண்ட பிணையில் விடுதலை செய்யுமாறு கொழும்பு மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றம் மே மாதம் 6-ம் திகதி உத்தரவிட்டது.

2013.04.06ஆம் திகதி கொழும்பு மாளிகாவத்தை பகுதியில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்ட அப்துல் ரபிக்தீன், புத்தரை நிந்திக்கக்கூடிய சில கருத்துகளைத் தெரிவித்தார் என்று இலங்கையின் பிரதி பொலிஸ் மா அதிபர் அனுர சேனநாயக தெரிவித்தார்.

சந்தேக நபரினால் வெளியிடப்பட்ட கருத்துக்கள் சம்பந்தமாக அவர் பின்னர் பல திருத்தங்களை ஊடகங்கள்மூலம் வெளியிட்டுள்ளதாகவும் எதிர்காலத்தில் இவ்வாறான கருத்துகளை வெளியிடுவதை இவர் தவிர்த்துக் கொள்வதாகவும் சட்டவாதி எதிர்த்தரப்பு சார்பில் ஆஜரான சட்டவாதி நீதிமன்றத்துக்கு வாக்களித்தார்.

புத்த பகவானை அவமதிக்கும் நோக்கம் சந்தேகநபருக்குள் இல்லை என்று தெரிவித்த சட்டவாதி அவரை பிணையில் விடுதலை செய்யுமாறு வேண்டுகோள் விடுத்தார். ஆயினும் இந்த வழக்கைத் தொடுத்த ஜாதிக ஹெல உறுமய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அதுரலியே ரதன தேரரும் மற்றும் பொலிசாரும் இதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர்.

ஆயினும் சந்தேகநபரை பிணையின்கீழ் விடுதலை செய்த நீதிபதி, மதங்களுக்கிடையே மோதல்கள் ஏற்படக்கூடிய கருத்துக்களை வெளியிடுவதை தவிர்த்துக் கொள்ளுமாறும் உத்தரவிட்டார்.

இவ்வாறான கருத்துகளை வெளியிட்டால் பிணை ரத்துச் செய்யப்பட்டு அவர் விளக்கமறியலில் வைக்கப்படுவார் என்றும் நீதிபதி எச்சரித்தார்.

இந்த தீர்ப்பு வழங்கப்பட்ட பின்பு செய்தியாளர்களிடம் பேசிய, அதுரலியே ரத்ன தேரர், "நீதிமன்ற தீர்ப்பு சம்பந்தமாக எமக்கு எதுவும் கூறமுடியாது. ஆயினும் சந்தேக நபர் மகாநாயக்க தேரர்கள் முன்பு பகிரங்கமாக மன்னிப்புக்கோர வேண்டும்" என்றார்.

புத்த பகவானுக்கு அவமதிப்பை ஏற்படுத்தும் நோக்கம் தனக்கு இருந்திருக்கவில்லை என்று பிணை வழங்கப்பட்ட பின்பு செய்தியாளர்களிடம் பேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் செயலாளர் அப்துல் ரபிக்தீன் கூறினார்.

### இலங்கையில் மத முரண்பாடுகள் இல்லை: ஜனாதிபதி

மே 08-ம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ டுவிட்டர் சமூக வலைத்தளத்தின் ஊடாக கேள்விகளுக்குப் பதிலளித்தார்.

மத விவகாரங்கள் மற்றும் முரண்பாடுகள் -சம்பந்தமாகக் கேட்கப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும்போது, சிறு சிறு சம்பவங்களைத் தவிர இலங்கையில் மத முரண்பாடுகள் என்று எதுவுமில்லை என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

இது உண்மையில் ஆசியாவின் ஆச்சரியம்தான்.

இதனிடையயே மத விவகாரங்கள் தொடர்பிலான முரண்பாடுகளை ஆராய்வதற்காக புதிதாக நியமிக்கப்பட்ட பொலிஸ் பிரிவு வேண்டாம் என்று இராவணபலய அமைப்பு பௌத்த விவகாரங்களுக்கான அமைச்சில் 07.05.2014 அன்று முறையிட்டுள்ளது.

கடந்த ஆண்டில் முஸ்லிம் பள்ளிவாசல்கள் மீதும் கிறிஸ்தவ தேவாலயங்கள் மீதும் பௌத்த பிக்குகளால் நடத்தப்பட்ட மதவாதத் தாக்குதல்கள், இந்தத் தாக்குதல்களின் பின்னணியில் இருப்பவர்கள்மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு காவல்துறை தவறியுள்ளதாக சமூக நல்லுறவை வலியுறுத்துகின்ற பௌத்த பிக்குகளும் கிறிஸ்தவ மற்றும் முஸ்லிம் மதத் தலைவர்களும் குற்றஞ்சாட்டிவருகின்றனர்.

(தொடரும்...)

# பாரதிய ஜனதாவும் இந்திய வெளியுறவும்

தொகுப்பு: வேணு கிருஷ்ணா



## பாரதிய ஜனதா கட்சி

பாரதிய ஜனதா கட்சி (மொழிபெயர்ப்பு: இந்திய மக்கள் கட்சி சுருக்கமாக பா.ஜ.க) இந்திய அரசியலின் இரண்டு பெரிய கட்சிகளில் ஒன்றாகும். 1980-ம் ஆண்டு நிறுவப்பட்ட இக்கட்சி, நாடாளுமன்றத்திலும், பல்வேறு மாநில சட்டமன்றங்களிலும் பெற்றிருக்கும் இடங்களின் அடிப்படையில் இந்தியாவின் இரண்டாவது பெரிய அரசியல் கட்சியாகத் திகழ்கிறது.

பாரதிய ஜனதா கட்சி, தீன்தயாள் உபாத்யாயாவால் 1965-ம் ஆண்டு எழுதப்பட்ட ஒரு புத்தகத்தின் அடிப்படையில், ஒருங்கிணைந்த மனிதநேயம் என்ற தத்துவத்தை தனது அதிகாரபூர்வ கொள்கையாகக் கொண்டுள்ளது. "இந்து தேசியவாதக் கட்சி" என்று கூறப்படும் இக்கட்சி, சுதேசி இயக்கத்தால் சுட்டிக் காட்டப்பட்ட சுயசார்புக் கொள்கையும், தேசியவாத கொள்கையை அடிப்படையாகக் கொண்ட வெளியுறவுக் கொள்கையையும் கொண்டது. இந்திய அரசியலில் வலதுசாரிக் கொள்கையுடைய கட்சிகளில் இதுவும் ஒன்று.

பா.ஜ.க தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி, அடல் பிகாரி வாஜ்பாயைப் பிரதமராகக் கொண்டு 1998 முதல் 2004 வரை இந்தியாவை ஆண்டது. காங்கிரஸ் அல்லாத ஒரு அரசு தனது முழு ஐந்து வருட காலத்தையும் பூர்த்தி செய்தது அதுவே முதல் முறையாகும். 2004-ம் ஆண்டு பொதுத் தேர்தல் தோல்விக்குப் பிறகு, பா.ஜ.க நாடாளுமன்றத்தில் முக்கிய எதிர்க்கட்சியாக விளங்கிவருகிறது.

### வரலாறு

### பாரதிய ஜன சங்

டாக்டர். சியாமா பிரசாத் முகர்ஜியால் இந்து தேசியவாத கொள்கையை வளர்ப்பதற்காக, 1951-ம் ஆண்டு பாரதிய ஜன சங் நிறுவப்பட்டது. காங்கிரசை கடுமையாக விமர்சித்த இக்கட்சி, தேசிய மற்றும் கலாசார அடையாளம், ஒற்றுமை மற்றும் ஒருங்கிணைப்பு ஆகியவற்றில் சமரசம் கூடாது என்ற கருத்துடையதாக விளங்கியது. இக்கட்சி, ராஷ்டிரிய சுயம் சேவக் சங்கின் அரசியல் பிரிவு என்று பரவலாகக் கருதப்பட்டது.

ஜம்மு காஷ்மீரை இந்தியாவுடன் இணைக்க நடந்த கலவரத்தின்போது சிறையில் அடைக்கப்பட்டிருந்த சியாமா பிரசாத் முகர்ஜி, 1953-ம் ஆண்டு மறைந்ததை அடுத்து, கட்சியின் பொறுப்புகள் அனைத்தும் தீன்தயாள் உபாத்யாயாவிடம் வந்துசேர்ந்தன. அவர், பதினைந்து வருடங்கள் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்து கட்சியை வளர்த்தார். அர்ப்பணிப்பு உணர்வுகொண்ட இளைஞர்களைக் கொண்டு கட்சியின் கொள்கைகளை செதுக்கினார். வாஜ்பாய், அத்வானி போன்ற அரசியல்வாதிகளுக்கு இவரே வழிகாட்டியாக விளங்கினார். கட்சியின் பெரும்பான்மையான தொண்டர்கள் (உபாத்யாயா வையும் சேர்த்து) ராஷ்டிரிய சுயம்சேவக் சங்கில் இருந்து வந்தவர்களாதலால், இயற்கையாகவே தேசப்பற்றும், ஒழுக்கமும் கொண்டவர்களாக விளங்கினர்.

இக்கட்சி 1952-ம் ஆண்டு நடந்த பொதுத்தேர்தலில் மூன்று இடங்களில் மட்டுமே வென்றது. இருப்பினும் தொடர்ந்து வளர்ந்த இக்கட்சி, 1962-ம் ஆண்டு இந்தியாவின் முக்கிய எதிர்க்கட்சிகளில் ஒன்றாகத் திகழ்ந்தது. அனைத்து இந்தியர்களுக்கும் பொதுவான சட்டம், பசுவதைத் தடை, ஜம்மு காஷ்மீரின் சிறப்பு அந்தஸ்தைத் திரும்பப்பெறுவது, இந்திமொழியை வளர்ப்பது போன்ற கொள்கைகள் கொண்ட இக்கட்சி, பல வட மாநிலங்களில் காங்கிரசின் அதிகாரத்திற்கு பெரும் சவாலாகத் திகழ்ந்தது.

இக்கட்சி, 1967க்குப் பிறகு ஒத்த கொள்கையுடைய கட்சிகளுடன் கூட்டணி அமைத்து, உத்திரப் பிரதேசம், தில்லி போன்ற சில மாநிலங்களில் ஆட்சி அமைத்தது. இந்திரா காந்தியால் 1975 முதல் 1977 வரை அமுல்படுத்தப்பட்ட அவசர காலத்தின்போது நடந்த அரசியல் கிளர்ச்சியில் முக்கிய பங்குவகித்ததினால், இக்கட்சியின் பல தலைவர்களும் தொண்டர்களும் கைதுசெய்யப்பட்டனர். இக்கட்சியும் வேறு சில கட்சிகளும் ஜனதா கட்சியுடன் இணைந்து, 1977-ம் ஆண்டு காங்கிரசிற்கு எதிராக களமிறங்கின.

1977-ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஜனதா கட்சி பெரும்பான்மையான இடங்களில் வென்று, மொரர்ஜி தேசாயைப் பிரதமராகக் கொண்டு அரசமைத்தது. உபாத்யாயாவின் மரணத்திற்குப் பிறகு ஜன சங்கின் தலைவரான அடல் பிகாரி வாஜ்பாய், புதிய அரசாங்கத்தின் வெளியுறவுத் துறை அமைச்சராக நியமிக்கப்பட்டார். ஆனால் அந்த அரசு அதிக நாள் நீடிக்கவில்லை. மொரார்ஜி தேசாய் பிரதமர் பதவியில் இருந்துவில்கிய பிறகு, ஜனதா கட்சி கலைக்கப்பட்டது. அதன்பிறகு கூட்டணியைத் தக்கவைத்துக் கொள்ள ஜன சங் பெறும் முயற்சி செய்தது. உட்கட்சிப் பூசலால் பாரதிய ஜன சங் கட்சி பெரும் நலிவுற்றது.

### உருவாக்கம் - 1980

பாரதிய ஜன சங்கின் தலைவர்களும் தொண்டர்களும் இணைந்து, அடல் பிகாரி வாஜ்பாயைத் தலைவராகக் கொண்ட பாரதிய ஜனதா கட்சி என்ற புதிய கட்சியை உருவாக்கினர். காங்கிரஸ் அரசை வன்மையாகக் கண்டித்த பா.ஜ.க, பஞ்சாப்பில் நிலவிய சீக்கிய பயங்கரவாதத்திற்கு காங்கிரஸ் அரசின் ஊழலும் பாரபட்சமும் மிகுந்த ஆட்சியே காரணம் என்றது. "இந்து - சீக்கிய ஒற்றுமைக்கு வித்திட்டவர் வாஜ்பாய்" என்று சீக்கியத் தலைவர் தாராசிங் கூறியுள்ளார்.

பா.ஜ.க புளூஸ்டார் நடவடிக்கையை எதிர்த்த முக்கிய கட்சிகளுள் ஒன்றாகும். இந்திரா காந்தியை அவரது சீக்கிய மெய்க்காப்பாளர் சுட்டுக்கொன்றதால் தில்லியில் 1984-ம் ஆண்டு நடந்த சீக்கியர்களுக்கு எதிரான வன்முறையை பா.ஜ.க வெளிப்படையாகக் கண்டித்தது.

பா.ஜ.க.விடம் 1984இல் இரண்டு நாடாளுமன்ற இடங்களே இருந்த போதிலும் தனது கொள்கைகள் மூலமாக இளைஞர்களைக் கவர்ந்து, விரைவிலேயே இந்திய அரசியலில் முக்கிய இடத்தைப் பிடித்தது. அப்போது வாஜ்பாய், கட்சியில் முக்கிய இடத்திலும், நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவராகவும் திகழ்ந்தார். இந்து தேசியவாத கொள்கையுடைய பலர் கட்சியின் முக்கிய பொறுப்புகளில் நியமிக்கப்பட்டனர்.

விஷ்வ இந்து பரிஷத் மற்றும் ஆர்.எஸ்.எஸ் இயக்கங்களால் முன்னெடுக்கப்பட்ட ராம் ஜென்மபூமி மந்திர் இயக்கத்திற்கு உறுதுணையாக பா.ஜ.க விளங்கியதோடு, அயோத்தியில் பாபர் மசூதி இருக்கும் இடத்தில் ராமருக்குக் கோயில் கட்டப்பட வேண்டுமென்றும் கூறியது. அயோத்தியில் பாபர் மசூதி இருக்கும் இடம் இராமர் பிறந்த இடம் எனவும், வெகு காலத்திற்கு முன் அங்கு இராமர் கோயில் இருந்தது எனவும் ஏராளமான மக்கள் நம்புகின்றனர்.

எனவே இந்துக்களின் புனித இடமான அந்த இடத்தில் இராமர் கோயில் கட்டப்பட வேண்டும் என்று கோரப்படுகிறது. லால் கிருஷ்ண அத்வானி கட்சியின் தலைவராக இருந்தபோது, பல்வேறு ரத யாத்திரைகள் மேற்கொண்டு, இந்துக்களிடையே இதுகுறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

டிசம்பர் 6, 1992 அன்று விஷ்வ இந்து பரிஷத் மற்றும் பா.ஜ.க தொண்டர்கள் அமைதியான போராட்டத்திலிருந்து கலவரத்தில் இறங்கி, பாபர் மசூதியை இடித்தனர். இதைத் தொடர்ந்து நாடு முழுவதும் இந்துகளுக்கும் இசுலாமியர்களுக்கும் நடந்த கலவரத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர். அயோத்தி விவகாரத்தை அரசியலாக்கியதாகக் கூறி பலரால் விமர்சனம் செய்யப்பட்டலும், கோடிக்கணக்கான இந்துக்களின் ஆதரவை பா.ஜ.க வென்று தேசிய முக்கியத்துவம் பெற்றது.

தில்லியில் 1993-ம் ஆண்டு நடந்த சட்டமன்றத் தேர்தலிலும், 1995-ம் ஆண்டு குஜராத்திலும், மகாராஷ்டிராவிலும் நடந்த சட்டமன்றத் தேர்தலிலும் பா.ஜ.க வென்றது. டிசம்பர் 1994 இல் நடந்த கர்நாடக சட்டமன்றத் தேர்தலிலும் கணிசமான இடங்களைக் கைப்பற்றியது. இதன்மூலம் தேசிய அரசியலில் பெரும் முக்கியத்துவம் பெற்றது.

மும்பையில், நவம்பர் 1995 இல் நடைபெற்ற பா.ஜ.க பொதுக் கூட்டத்தில், மே 1996 இல் நடக்கும் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் பா.ஜ.க வென்றால் வாஜ்பாய் பிரதமராவார் என்று அக்கட்சியின் தலைவர் அத்வானி அறிவித்தார். அத்தேர்தலில், பா.ஜ.க வெற்றி பெற்று அமைத்த அரசில் வாஜ்பாய் பிரதமரானார். இருப்பினும் பா.ஜ.க நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்கத் தவறியதால், 13 நாட்களில் வாஜ்பாய் தனது பதவியை இராஜினாமா செய்தார்.

தேசிய ஜனநாயகக் கூட்டணி, 1998இல் நடந்த நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் பெரும்பான்மையான இடங்களில் வென்றது. இம்முறை பா.ஜ.க ஏற்கனவே இருந்த கூட்டணிக் கட்சிகளான சமதா கட்சி, சிரோமணி அகாலி தளம், சிவசேனா போன்றவற்றோடு சேர்த்து, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் பிஜு ஜனதா தளம் போன்ற கட்சிகளோடும் கூட்டணி அமைத்துப் போட்டியிட்டது. இவற்றுள் மகாராஷ்டிராவைச் சேர்ந்த சிவசேனா மட்டுமே பா.ஜ.க.வுடன் ஒத்த கொள்கையுடைய கட்சியாகும். தெலுங்கு தேசம் கட்சி இக்கூட்டணிக்கு வெளியில் இருந்து ஆதரவளித்தது. மெலிதான பெரும்பான்மை பெற்ற தேசிய ஜனநாயகக் கூட்டணி மீண்டும் வாஜ்பாயைப் பிரதமராகக் கொண்டு ஆட்சி அமைத்தது. ஆனால், அ.இ.அ.தி.மு.க தலைவர் ஜெயலலிதா அரசுக்கு அளித்துவந்த ஆதரவைத் திரும்பப்பெற்றதால் கூட்டணி உடைந்து மீண்டும் தேர்தல் நடத்தப்பட்டது.

கார்கில் போரில் பெற்ற வெற்றியைத் தொடர்ந்து வாஜ்பாய்க்கு கிடைத்த மக்கள் ஆதர்வு காரணமாக, பா.ஜ.க தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி 1999-ம் நடந்த பொதுத் தேர்தலில் 303 இடங்களில் வென்றது. பா.ஜ.க மட்டுமே 183 இடங்களில் வென்றது. வாஜ்பாய் மூன்றாவது முறையாகப் பிரதமராகவும், அத்வானி துணைப் பிரதமராகவும் உள்துறை அமைச்சராகவும் பதவியேற்றனர்.

இம்முறை, தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு தனது ஆட்சிக்காலமான ஐந்து ஆண்டுகளும் நீடித்தது. வாஜ்பாய் தலைமையில் யஷ்வந்த் சின்காவை நிதி அமைச்சராகக் கொண்ட இந்த அரசு, பி.வி. நரசிம்மராவ் அரசு தொடங்கிய பொருளாதாரக் கொள்கைகள்ளைத் தொடர்ந்து செயற்படுத்தியது.

தேசிய ஜனநாயகக் கூட்டணி, 2004 இல் நடந்த நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் எதிர்பாராத விதமாகத் தோல்வியைத் தழுவியது. இத்தேர்தலில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி வென்று, டாக்டர். மன்மோகன் சிங்கைப் பிரதமராகக் கொண்டு அரசமைத்தது.

கர்நாடகாவில், மே, 2008 இல் நடந்த சட்டமன்றத் தேர்தலில் பா.ஜ.க வென்றது. இதுவே தென்னிந்திய மாநிலமொன்றில் பா.ஜ.க வென்றது முதல் முறையாகும். ஆனால் 2013 ஆம் ஆண்டு நடந்த கர்நாடக சட்டமன்றத் தேர்தலில் பா.ஜ.க தோற்று தனது ஆட்சியைக் காங்கிரசிடம் இழந்தது. 2009-ம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றப் பொதுத்தேர்தலில் பா.ஜ.க மீண்டும் தோற்றதனால், மக்களவையில் அதன் பலம் 116 ஆகக் குறைந்தது. ராஜஸ்தான், உத்திரப் பிரதேசம், மகாராஷ்டிரம், உத்தராகண்ட் மற்றும் ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் குறைந்த செயற்பாடே அக்கட்சியின் தோல்விக்குக் காரணம் என்று கூறப்பட்டது.

### கொள்கையும் அரசியல் நிலையும்

பாரதிய ஜனதா கட்சி, ஒருங்கிணைந்த மனித நேயம், இந்துத்துவம் மற்றும் கலாசார தேசிய வாதம் போர்ன்ற கொள்கைகளைக் கொண்டது. பா.ஜ.க பலமான பாதுகாப்புக் கொள்கைகளுக்கு ஆதரவளிக்கும் கட்சியாகும்.

### இந்துத்துவம்

வினாயக் தாமோதர் சாவர்க்கர் என்கிற அரசியல்வாதியால் உருவாக்கப்பட்ட கொள்கையான இந்துத்துவத்தை பா.ஜ.க பலமாக ஆதரிக்கிறது. இந்தியாவின் பாரம்பரியம், கலாசாரம் மற்றும் நாகரிகம் ஆகியவற்றுக்கு மேற்கத்தியக் கொள்கைகளைவிட இந்துத்துவமே உகந்தது என்பது பா.ஜ.க வின் நிலைப்பாடு. பா.ஜ.க.வின் கொள்கைகள் சிறுபான்மையினருக்கு எதிரானது என்று பலரால் விமர்சிக்கப்பட்டாலும், கலாசார தேசியவாதம் என்பது இந்தியர்கள் அனைவருக்கும் பொருந்தும் கொள்கையே என்பது பா.ஜ.க.வின் வாதம்.

### பொருளாதாரக் கொள்கைகள்

பா.ஜ.க.வும் அதன் வழிவந்த கட்சிகளும், மார்க்சிசத்தையும், இந்தியாவை நீண்டகாலம் ஆட்சி செய்த காங்கிரசின் சமூகவுடைமைப் பொருளாதாரக் கொள்கைகளையும் எதிர்த்தன. சுதேசிக் கொள்கையையும், உள்நாட்டு நிறுவனங்களையும், தொழிற்சாலைகளையும் பா.ஜ.க பலமாக ஆதரித்ததோடு, வெளிநாட்டிலிருந்து செய்யப்படும் இறக்குமதியைக் குறைக்க வேண்டுமென்றது. பா.ஜ.க.வின் ஆட்சிக்காலத்தில், வாஜ்பாய் அரசு 199[illegible]ல் ஆரம்பிக்கப்பட்ட சந்தை சீர்திருத்தங்கள், பொருளாதார தாராளமயமாக்கல் போன்றவற்றைத் தொடர்ந்ததால், தேக்கத்தில் இருந்த இந்தியப் பொருளாதாரம் வேகமாக வளர்ந்தது.

பா.ஜ.க தலைமையிலான அரசு, தங்க நாற்கர சாலை முதலிய சில முக்கியமான உட்கட்டமைப்பு வளர்ச்சித் திட்டங்களில் முதலீடு செய்ததோடு, அந்நிய முதலீட்டை ஈர்க்க கட்டற்ற வர்த்தகத்தையும் அறிமுகப்படுத்தியது. பா.ஜ.க ஆட்சியில் நடுத்தர மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்தாலும், இந்தியாவின் ஏழை மக்களைவிட தொழில் முனைவோருக்கும், வர்த்தகர்களுக்குமே ஆதரவாக இருந்தது என்ற விமர்சனத்தால் 2004ஆம் ஆண்டு பொதுத் தேர்தல்களில் அக்கட்சி தோற்றது.

### பாதுகாப்பு மற்றும் தீவிரவாதம்

பா.ஜ.க, இந்திய பாதுகாப்புப் படைகளை நவீனமயமாக்குதல், பலமான அணு ஆயுதத் தற்காப்பு போன்ற பலமான தேசியப் பாதுகாப்புக் கொள்கையை ஆதரிக்கும் கட்சியாகும். இந்திய அரசியலமைப்பால் ஜம்மு காஷ்மீருக்கு வழங்கப்பட்டுள்ள சிறப்பு அந்தஸ்தைப் பயன்படுத்தி அதை முழுமையாக இந்தியாவோடு இணைக்க வேண்டுமென்ற கொள்கையை பா.ஜ.க ஆதரிக்கிறது.

வாஜ்பாய் அரசின் ஆட்சிக்காலத்தில், பொக்ரான்-II என்ற பெயரில் மே, 1998இல் ஐந்து அணுவெடிப்புச் சோதனைகள் நிகழ்த்தப்பட்டது மட்டுமின்றி பல முக்கிய ஏவுகணைகளும் சோதனை செய்யப்பட்டது. வாஜ்பாய் அரசு, இந்தியக் கட்டுப்பாட்டில் உள்ள காஷ்மீரை ஆக்கிரமத்த பாகிஸ்தான் இராணுவத்தை வெளியேற்ற அனைத்து வழிகளையும் கையாள இந்திய இராணுவத்திற்கு உத்தரவிட்டது. இதுவே கார்கில் போர் என்று அறியப்படுகிறது. பாகிஸ்தானின் ஊடுருவலை காலதாமதமாகக் கண்டறிந்தமைக்காக அரசின் உளவுப்பிரிவு விமர்சிக்கப்பட்டாலும், அதன் பின்னர் அரசு எடுத்த உறுதியான நடவடிக்கைகளும் அதில் இராணுவம் கண்ட வெற்றியும் வாஜ்பாய் அரசுக்குப் புகழ் சேர்த்தது.

டிசம்பர் 2001 இல் இந்திய நாடாளுமன்றத்தில்






# பரபரப்பு நிறைந்த எகிப்திய விமான விபத்து!

**-விறுவிறுப்புக்காக தருவது ரிஷி**

**பைலட்** டொய்லெட்டுக்கு போவதற்கு ஆயத்தமாகிறார் என்று கடந்த வாரம் பார்த்தோம்.

"எக்ஸ்கியூஸ் மீ (கோ-பைலட்டிடம் சொல்கிறார்) நான் டொய்லெட்டுக்கு போய்விட்டு வரப்போகிறேன். இப்போது பயணிகள் சாப்பிட்டுக் கொண்டிருப்பார்கள். அவர்கள் சாப்பிட்டு முடிந்தால், டொய்லெட்டுகளில் கூட்டம் அதிகமாகி விடும்" என்றார் கப்டன்.

இதற்கு கோ-பைலட்டின் குரலில் பதில் வருகிறது. 'கோ அஹெட் பிளீஸ்'

இதையடுத்து, விமானியின் சீட் மோட்டர் இயங்கும் சத்தம் பதிவாகியுள்ளது. சீட்-பெல்ட் விடுவிக்கப்படும் 'கிளிக்' சத்தம் பதிவாகியுள்ளது. அதன் அர்த்தம், கப்டன் தனது சீட்டில் இருந்து எழுகிறார். ஹொர்க்பிட் கதவு திறக்கும் சத்தம் கேட்கிறது. கப்டன் வெளியே செல்கிறார்.

சிறிதுநேரத்தில், ஹொக்பிட்டுக்குள் இருந்த கோ-பைலட் தனக்குத்தானே பேசிக்கொள்ள தொடங்குகிறார். தணிந்த குரலில் ஏதோ சொல்கிறார். அது தனக்குத்தானே பேசிக்கொள்வது போலவும் உள்ளது, ஒருவித பிரார்த்தனை போலவும் ஒலிக்கிறது.

கோ-பைலட் தணிந்த குரலில் உச்சரித்த இந்த சொற்கள், பின்னாட்களில் புலனாய்வில் மிகப்பெரிய குழப்பத்தை ஏற்படுத்தின. இந்த சொற்களின் அர்த்தம் என்னவென்று கடைசிவரை புரிந்து கொள்ளப்படவில்லை.

புலனாய்வுக் குழுவில் இருந்த 5 அரபு மொழி பேசும் உறுப்பினர்களால், இந்த சொற்கள் அரபு மொழி சொற்கள்தானா என்று உறுதிசெய்ய முடியவில்லை. குரானிலோ, அல்லது வேறு எந்த அரபுமொழி மத உச்சாடனங்களிலோ, இந்த சொற்கள் உள்ளதாக அடையாளம் காணப்படவில்லை. அரபு மொழியின் எகிப்திய வட்டார உச்சரிப்பு எதிலும் இந்த சொற்கள் உள்ளதாக கண்டு பிடிக்கப்படவில்லை.

இந்த அடையாளம் காணப்படாத சொற்களை கோ-பைலட் அல்-பட்டோடி தணிந்த குரலில் கூறியதில் இருந்து 10 விநாடிகளின் பின் அவரது குரல் மீண்டும் ஒலிக்கிறது. இம்முறை மிக தெளிவாக, எகிப்திய அராபிக்கில் உச்சரிக்கிறார் அவர்.

'தவாக்கால்ட் அலா அல்லா' இந்த வாக்கியமும் சில குழப்பங்களை ஏற்படுத்தியது.

இதன் ஆரம்ப மொழிபெயர்ப்பில், "எனது விதியை அல்லாவின் கைகளில் ஒப்படைக்கிறேன்" என மொழிபெயர்க்கப் பட்டது. பின்னர், எகிப்திய புலனாய்வாளர்கள், "நான் அல்லாவை நம்புகிறேன்" என்பதே சரியான மொழிபெயர்ப்பு என திருத்தினார்கள்.

காரணம், எகிப்தின் சில பகுதிகளில் உள்ள பள்ளிவாசல்களில் பயன்படுத்தப் படும் வாக்கியமாம் இது. பள்ளிவாசலின் அதிகாரபூர்வ மதகுரு அற்ற, இதர மத வழிகாட்டுபவர்கள் உபயோகிக்கும் இந்த வார்த்தையை அவர்கள் தமது தினசரி நடவடிக்கைகளை தொடங்குமுன், அல்லாவின் மீது பாரத்தை போட்டுவிட்டு, பணியை தொடங்குவதற்காக சொல்வார்களாம்.

அப்போதும் விமானம் 33,000 அடி உயரத்தில் சீராக பறந்துகொண்டிருந்தது. இந்நிலையில், எலக்ட்ரிக் சீட் மோட்டார் இயங்கும் ஒலி பதிவாகியுள்ளது. கோ-பைலட் தமது சீட்டை நகர்த்துகிறார்.

அதிலிருந்து 27 விநாடிகளின்பின், விமானத்தின் ஓட்டோ-பைலட் சுவிட்ச் ஓ.்.ப் செய்யப்படுகிறது.

அதுவரை 'ஓட்டோ பைலட்' முறையில் பறந்துகொண்டிருந்த விமானம், இந்த விநாடி யில் கோ-பைலட்டின் கட்டுப்பாட்டில் வருகிறது. விமானத்தின் உயரத்தை லேசாக மாற்றத் தொடங்குகிறார் அவர்.

இப்படி சிறிய மாற்றம் செய்யப்பட்ட போதும், கோ-பைலட் விமானத்தை தனது கட்டுப்பாட்டில் எடுத்த நேரத்தில் இருந்து 8-வது விநாடிவரை விமானம் 33,000 அடி உயரத்திலேயே பறந்துகொண்டிருந்தது.

கோ-பைலட் அல்-பட்டோடி மீண்டும் தெளிவாக உச்சரிக்கிறார், "தவாக்கால்ட் அலா அல்லா" விமானம் கீழ்நோக்கி செல்ல தொடங்குகிறது.

கோ-பைலட் அல்-பட்டோடி மீண்டும் தெளிவாக உச்சரிக்கிறார், "தவாக்கால்ட் அலா அல்லா" வேகமாக திரும்ப திரும்ப "தவாக்கால்ட் அலா அல்லா" என உச்சரிக்கிறார். 8 விநாடிகளில் 7 தடவைகள் "தவாக்கால்ட் அலா அல்லா" என விடாது உச்சரித்தார்.

விமானத்தின் எடை சமநிலை குழம்ப தொடங்கியது. விமானம் சீராக பறப்பதற்கு இது அவசியம். அதாவது விமானத்தின் எடை சமநிலை பேணப்படவேண்டும்.

விமானம் வேகமாக கீழ்நோக்கி போகத்தொடங்கியதால், அதன் முன்பக்க எடை அதிகரித்தது. இந்த அதிகரிப்பு விமானத்தை மேலும் வேகமாக கீழே இழுத்துச் செல்லும்.

விமானம் படுவேகமாக கீழே போவதை புரிந்துகொண்டு டொய் லெட்டில் இருந்து ஹொக்பிட்டுக்கு அவசரமாக திரும்புகிறார் கப்டன் அஹ்மத் எல்-ஹமாஷி.

ஹொக்பிட்டுக்குள் பதட்டத்துடன் ஒலிக்கிறது அவரது குரல், "என்ன நடக்கிறது? இங்கே என்ன நடக்கிறது?"

(தொடரும்...)

# சென்னையில் சிதறிய ரயில்...!

நன்றி விகடன்

**இந்தியாவின்** பொருளாதாரத்தை சீர்குலைக்கவேண்டும். ஆயுதங்களை அனுப்பவேண்டும். வெடிகுண்டுகளை வெடிக்கவேண்டும் - இந்த மூன்றும்தான் பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ. திட்டங்கள் என்பார்கள். அந்த டியூட்டி மே 1ஆம் திகதியன்று காலை 7.20 மணிக்கு சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் அரங்கேறியது. இரட்டை வெடிகுண்டுகள் வெடித்ததில் ஓர் இளம்பெண் பரிதாபமாக இறந்துபோக, 15 பேர் படுகாயம் அடைந்தனர். இதன் பின்னணியில் சொல்லப்படும் பெயர் ஜாகீர் உசேன். இரண்டு நாட்களுக்கு முன்பு இலங்கையைச் சேர்ந்த ஜாகீர் உசேன் என்கிற உளவாளியை சென்னை திருவல்லிக்கேணியில் வைத்து க்யூ பிரிவு பொலிஸார் பிடித்தனர். ஆரம்பத்தில் எதுவுமே பேசாமல் மௌனம் சாதித்த ஜாகீர் உசேனிடம், சில ஆதாரங்களை பொலிஸார் காட்டியவுடன் மிரண்டுபோனார். ஒரு கட்டத்தில், "என்மீது கைவைத்தால் தமிழகத்தின் அமைதிகெடும். பார்க்கிறீர்களா?" என்று சவால்விட்டிருக்கிறார். அதையடுத்து, பொலிஸார் அன்பாக விசாரிக்க ஆரம்பித்ததும், கடகடவென விஷயத்தைக் கொட்டினாராம்.

வங்கதேசம், நேபாளம் ஆகிய நாடுகளின் எல்லைப்புறங்களை ஒட்டியுள்ள இந்தியாவின் மேற்கு வங்க மாநில மால்டா என்கிற பகுதி வழியாக கள்ள நோட்டுகளை இந்தியாவுக்குள் அனுப்பி புழக்கத்தில்விடுவார்கள். இப்போது தங்கள் செயற்பாட்டை இலங்கைக்கு மாற்றிக்கொண்டுவிட்டனர். பாகிஸ்தானில் இருந்து இலங்கைக்குக் கள்ள நோட்டுகள் வரும். அங்கிருந்து கடல்மார்க்கமாக தமிழகத்துக்குள் கள்ள நோட்டுகள் பரவுகின்றன. கடந்த சில மாதங்களில் தென்காசி, திருநெல்வேலி ஆகிய ஊர்களில் ஆரம்பித்து பல்வேறு நகரங்களில் கள்ள நோட்டுகள் புழக்கத்தில் இருப்பதாக பரபரப்பான செய்திகள் வெளியானதன் பின்னணி இதுதான். சில ஆயிரம் ரூபாய்களைப் பிடித்தனர். ஆனால், பிடிபடாதது எத்தனை லட்சங்களோ?


சென்னை விமானநிலையத்தில் இலங்கையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் வந்திறங்கினார். அவரின் செயற்பாடுகளில் சந்தேகமடைந்த அதிகாரிகள் அப்போதைய கூடுதல் எஸ்.பி-யான ஜெயக்குமாரிடம் ஒப்படைத்தனர். அந்த இளைஞரை அருகில் இருந்த மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று ஸ்கேன் செய்தபோது, புற்றுநோய் கட்டிகளைப் போல் வயிற்றில் பல கட்டிகள் இருப்பதைப் பார்த்து திடுக்கிட்டனர். பேதி மருந்தைக் கொடுத்தபோது, அந்த புற்றுநோய் கட்டிகள் ஒவ்வொன்றும் இரத்தின, மரகதக் கற்களாக வெளிவந்தன. மூன்று கோடி ரூபாய் மதிப்புள்ள இந்த இரத்தினக் கற்களை சென்னையில் ஒரு முக்கிய புள்ளியிடம் ஒப்படைக்கச் சொல்லி அனுப்பி இருக்கிறார்கள் இலங்கை வி.ஐ.பி-கள் இருவர்.

கள்ள நோட்டு, ஆயுதக் கடத்தல், போன்ற நாசகர வேலைகளை செய்யும் ஐ.எஸ்.ஐ. உளவு நிறுவனத்தின் தலைமைச் செயலகம் பாகிஸ்தான் நாட்டில் மட்டுமே முன்பு இயங்கிவந்தது. முள்ளிவாய்க்கால் நிகழ்வுக்குப் பிறகு கொஞ்சம் கொஞ்சமாக இலங்கையில் தனது கிளையைத் துவங்கிவிட்டது. இப்போது இலங்கைக்கான பாகிஸ்தான் நிர்வாகப் பொறுப்புகளில் முக்கிய அதிகாரியாக இருப்பவர்கள், பாகிஸ்தான் இராணுவத்தின் உளவுப் பிரிவில் பணியாற்றியவர்கள். அவர்களில் சிலர், தென் தமிழகத்தில் எப்படியெல்லாம் ஊடுருவலாம் என்பது பற்றி திட்டம் போட்டுக் கொடுக்கிறார்கள். அவர் களது கண் அசைவில் ஏஜென்ட்கள் தயார் செய்து தமிழகத்துக்கு அனுப்பப்படுகின்றனர்.

அந்தவகையில், 2012-ம் ஆண்டு திருச்சியில் பிடிபட்டார் தமீம் அன்சாரி. அதிராம் பட்டினத்தைப் பூர்வீகமாக கொண்ட இவர்தான் முதன்முதலில் இலங்கையில் ஐ.எஸ்.ஐ-யின் உயர் அதிகாரிகளின் பெயர்களைச் சொன்னார். அவர்களின் வழிகாட்டுதல்படி, தமிழகம் மற்றும் இந்தியாவின் வெவ்வேறு பகுதிகளில் இருக்கும் இந்திய ராணுவ நிலைகளைப் பற்றிய புகைப்படங்களை ஈ-மெயில், சி.டி-கள் மூலம் இலங்கைக்கு அனுப்ப முயன்றிருக்கிறார். அவரை, சில மாதங்கள் தொடர்ந்து தங்கள் கண்காணிப்பு வளையத்தில் வைத்திருந்த இந்திய உளவுத்துறை அதிகாரிகள், ஒரு கட்டத்தில் திருச்சியில் வைத்து பிடித்தனர். தமீம் அன்சாரிக்கு அடுத்து இப்போது அதே பாணியில் சதிவேலையில் சிக்கி பிடிபட்டிருப்பவர்தான் முகமது ஜாகீர் உசேன். இவர் இலங்கையைச் சேர்ந்தவர். திருமணம் ஆனவர்.

ஐ.எஸ்.ஐ-யின் இன்னொரு ஏஜென்ட், இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட இளைஞர்கள் 65 நபர்களைத் தேர்தெடுத்து ஸ்லீப்பர் செல்லாக மாற்றிவருகிறார் என்றும், அவர்களை அடுத்தடுத்து தமிழகத்துக்குள் அனுப்பி வைக்கப்போகிறார் என்றும் கேள்விப் பட்டோம். நாங்கள் எங்களின் ஆட்களை உசுப்பிவிட்டு தகவலுக்காகக் காத்திருந்தோம். அப்படி வந்த ஒரு தகவலில்தான் ஜாகீர் உசேனை பிடித்தோம். ஏற்கெனவே போலி பாஸ்போர்ட் வழக்கில் கைதானவர் இவர். பிறகு, இலங்கைக்குச் சென்றுவிட்டார். அங்கிருந்தபடியே, சுற்றுலா விசாவில் அடிக்கடி தமிழகத்துக்கு வந்துபோனார்.

ஒவ்வொரு முறையும் அவரின் செயற்பாடுகளைக் கண்காணித்தோம். சென்னையில் தூதரக அலுவலகங்கள், கொச்சியில் உள்ள இந்திய கடற்படை தளம். ஆகிய இராணுவ அதிமுக்கிய இடங்களுக்கு விசிட் போனார். அப்போதே எங்களுக்கு சந்தேகம். ஜாகீர் உசேன் கூடவே உளவுத்துறை அதிகாரிகள் டீம் மாறுவேடத்தில் சுற்றிவந்தனர். அவர் இலங்கையில் ஐ.எஸ்.ஐ-யின் ஏஜென்ட்களுடன் சட்டலைட் போனில் அடிக்கடி பேசினார். அவரை இலங்கையில் இருந்து ராஜ உபசரிப்புடன் சென்னைக்கு அனுப்பிவைத்ததே அங்குள்ள அதிகாரிகள்தான் என்பதற்கு நிறைய ஆதாரங்கள் சிக்கி உள்ளன. ஜாகீர் உசேன், தமிழகத்தில் உள்ள சில ஸ்லீப்பர் செல் ஆட்களைச் சந்தித்தார். இதுபோன்ற ஆதாரங்களை முழுவதுமாக சேகரித்து முடித்தபிறகு, உளவாளி ஜாகீர் உசேனை திருவல்லிக்கேணியில் வைத்து பிடித்தோம். முக்கியமாக, பெங்களூரை மையமாக வைத்து பல்வேறு முக்கிய இடங்களில் குண்டுவைத்து தகர்க்க வரைபடங்களைத் தயார் செய்திருந்தார் ஜாகீர் உசேன். அது தொடர்புடைய முக்கிய நபர்களைத் தேடிவருகிறோம். ஜாகீர் உசேன் மட்டுமல்ல. மேலும் 81 நபர்களை அடையாளம் கண்டுபிடித்து விட்டோம். அவர்களில் பலர் இலங்கையில் இருக்கிறார்கள். 17 பேர் தமிழகத்தில் இருக்கிறார்கள். இனியாவது தாங்கள் செய்வது தேசத்துரோகம், உளவு வேலை என்பதை உணர்ந்து திருந்தினால் நல்லது. இல்லை என்றால், எந்தநேரமும் அவர்களை பிடிக்கத் தயங்கமாட்டோம்" என்றார்.



இந்த விவகாரம் தொடர்பாக முஸ்லிம் அமைப்பினர் சிலரிடம் பேசியபோது, "ஏற்கெனவே தமீம் அன்சாரி கைது விவகாரத்தில் ஏகப்பட்ட குளறுபடிகள். அதையெல்லாம் மேற்கோள்காட்டித்தான் தேசிய பாதுகாப்பு சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்ட தமீம் அன்சாரி விடுவிக்கப் பட்டார். முழுவதுமாக விடுபட சட்டப் போராட்டம் நடத்திக்கொண்டிருக்கிறார். இப்போது ஜாகீர் உசேனைப் பிடித்ததாக பொலிஸார் சொல்கிறார்கள். அதன்பிறகுதான் ரயிலில் குண்டுவெடித்துள்ளது. உளவுத் துறையின் நாடகம்தான் இது. சில நாட்கள் கழித்து கருத்து சொல்கிறோம்" என்றனர்.

இது பற்றியும் உளவுத்துறையினரிடம் கருத்து கேட்டோம். "முழுக்க முழுக்க ஆதாரங்களின் அடிப்படையில்தான் நாங்கள் கைது நடவடிக்கைகளை எடுத்துவருகிறோம். இப்போதைக்கு இவ்வளவுதான் சொல்லமுடியும்" என்றனர். இந்த நிலையில் இந்த குண்டுவெடிப்பு தொடர்பாக அரசியல்ரீதியான காரணங்கள் வெளியாகி கிறுகிறுக்க வைக்கின்றன!

இப்பகுதிக்கு சிறுவர்கள், மாணவர்களிடம் இருந்து தரமான ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.



# பாப்பா முரசு

# அழகான அம்மா!

**பட்டாம்பூச்சிகளைக்** கண்டு அவற்றின் பின்னால் ஓடினான். தன் தாயை விட்டு வெகுதூரம் வந்துவிட்டதை அப்போதுதான் சிறுவன் உணர்ந்தான். யாருமே இல்லாத அப்பகுதியில் சிறுவனின் அழுகுரல் மட்டுமே எங்கும் ஒலித்தது.

"அய்யோ, வழி தெரியாம ரொம்ப வந்துட்டேனே... அம்மா.. அம்மா... எங்கம்மா கிட்ட யாராச்சும் கொண்டுபோய் விடுங்களேன்! எனக் கதறி அழுதான்.

அப்போது அவ்வழியே வந்த ஒரு உழவன், சிறுவனின் அழுகுரல் கேட்டு அவனிடம் சென்றார்.

நீ யாரு... எதுக்காக இங்க தனியா நிக்கற? நான் பட்டாம்பூச்சி பிடிக்க ஓடி வந்து அம்மாவ தொலைச்சிட்டேன்... அவங்க வயல்ல வேலை செஞ்சிட்டு வீட்டுக்கு போய்க்கிட்டு இருக்காங்க.. எனக்கு திரும்பிப் போக வழி தெரியல.. என்று சிறுவன் கூறவே, அவனை சமாதானப் படுத்திய உழவன், "சரி, பயப் படாதே... நான் உங்கம்மாகிட்ட கூட்டிகிட்டு போறேன்! உங்கம்மா எப்பிடி இருப்பாங்கன்னு சொல்றியா?" எனக் கேட்டார்.

அதற்கு "எங்கம்மா ரொம்ப அழகா இருப்பாங்க... இந்த ஊருலயே அவங்க தான்



அழகு!" எனப் பெருமையுடன் பதிலளித்தான் சிறுவன்.

சிறுவனை அழைத்துக்கொண்டு ஊரை நோக்கிச்சென்ற உழவன், எதிரில் மிகவும் அழகான பெண் நடந்துவருவதைக் கண்டார். உடனே "தம்பி, இவங்க ரொம்ப அழகாக இருக்கிறாங்க. இவங்கதானே உன் அம்மா? எனக்கேட்க, தன் அம்மா இன்னும் அழகாக இருப்பாள் எனச் சிறுவன் பதிலளித்தான்.

வாரம் ஒரு

## திருக்குறள்



இருவேறு உலகத்து இயற்கை
திருவேறு தெள்ளிய ராதலும் வேறு.

குறள்: 374

உலகின் இயல்பு இருவகைப்பட்டது, செல்வரை ஆக்கும் விதியும் அறிஞரை ஆக்கும் விதியும் வேறு வேறாம்.


# பொது அறிவு

1) தோமஸ் அல்வா எடிசன் பள்ளிக்குச் சென்றது மூன்றே மாதங்கள்தான்.
2) தோமஸ் அல்வா எடிசனுக்கு இருட்டு என்றால் பயமாம்.
3) அறிஞர்கள் சோக்ரடீசும், ஹோமரும் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள்.
4) மாவீரன் நெப்போலியனுக்கு பூனைகள் என்றால் பயமாம்.
5) மாவீரன் அலெக்ஸ்சாண்டர் காக்கை வலிப்புநோய் உள்ளவராக இருந்தவராம்.
6) அல்பேர்ட் ஐன்ஸ்டீன் தனது ஒன்பது வயதுவரையும் தங்குதடையின்றி பேசவல்லவராக இருக்கவில்லையாம், இதனால் அவரை பெற்றோர் மூளை வளர்ச்சிகுன்றியவராக கருதினார்கள்.
7) 1952 ஆம் ஆண்டு இஸ்ரேல் நாடு ஐன்ஸ்டீனுக்கு ஜனாதிபதி பதவியை வழங்க முன்வந்தது, ஆனால் அதனை ஐன்ஸ்டீன் நிராகரித்துவிட்டார்.
8) வோல்ட் டிஸ்னிக்கு(Walt Disney)எலிகளை கண்டால் பயமாம்.

- முத்துக்களின் தீவு என்று அழைக்கப்படும் நகரம் - பக்ரைன்
- தேனீக்கு இரண்டு இரைப்பைகள் உள்ளன. ஒன்று சேமிப்பு அறையாகவும். மற்றொற்று ஜீரண உறுப்பாகவும் பயன்படுகிறது.
- ஆமைக்கு பற்கள் கிடையாது.



வாத்தை தேசிய பறவையாகக் கொண்ட இரு நாடுகள் கனடா, ஜாவா.




மேகங்களின் வீடு என்று அழைக்கப்படுவது மேகாலயா.




புதினாவின் தமிழ்ப் பெயர் - ஈ எச்சக்கீரை



ஆபிரிக்கா கண்டத்தில் மட்டுமே வரிக்குதிரை காணப்படுகிறது.



கங்காருதான் அதிக தூரம் தாண்டும் மிருகமாகும். அது ஒரே தாவுதலில் 13 மீட்டர் நீளம் தாண்டிவிடும்.



இந்தியாவின் முதல் அணுமின் நிலையம் தாராப்பூரில் அமைக்கப்பட்டது.



ஈபிள் டவரின் உயரம் 300 அடி.

# கம்பியூட்டர் சில விளக்கச்சொற்கள்

C - Personal Computer.
BIOS - Basic Input Output System
MOUSE - MOst USE full (device)
CD - Compact disck.
CDR - Compact Disck Recordable.
CDRW - Compact disck Rewritable.
CDROM - Compact Disck Read Only Memory
CDRAM - Compact Disck Randem Access Memory
VCD - Video Compact Disck.
DVD - Digital versatile Disck (duetsch) or Digital Video Disck (english)
DVDR - Digital versatile Disck recordable.
DVDE - Digital versatile Disck Erasable
DVDRW - Digital versatile Disck Rewritable
DVDROM - Digital versatile Disck Read Only Memory
DVDRAM - Digital versatile Disck Read Access Memory
CRT - Cathode Ray Tube
LCD - Liquid-crystal Display
CPU - Central Processing Unit
USB - Universal Serial Bus
VIRUS - Very Important Resoures Under Size
RAM - Read Access Memory
ROM - Read Only Memory
WWW - World Wide Web
MP3 - Motion Picture Experts group layer -3
GPRS - General Pocket Radio Service



## சிறந்த வர்ணத்திற்குப் பரிசு தரும் எண்ணம்



**போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.**
மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள்.
சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி: 26.05.2014

**வர்ணம் தீட்டும் போட்டி இல.1044**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:167,
யாழ்ப்பாணம்.

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 1042**

ஆர்.பேருகா, மத்திய வீதி,
காத்தான்குடி -03.

பரிசுக்குரியவர்: 1042

பாராட்டுக்குரியவர்கள்

01. ச.அமீனா, பரந்தன், கிளிநொச்சி.
02. எஸ்.காமீலா, பேராதெனிய வீதி, கண்டி.
03. சி.பிரிந்துயனி, பண்டாரிக்குளம், வவுனியா.
04. மு.அபிநயா, கோவில் வீதி, திருநெல்வேலி.
05. இ.சாமிலி, மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய்.
07. க.அனித்தா, புகையிரத நிலைய வீதி, மன்னார்.
08. அ.சந்தியா, கல்வளை, சண்டிலிப்பாய்.

**இனி...**

அமீன் ஒரு கரம் வேகமாக இலாவகமாக இயங்கி அவளது ஆடைகளுக்கு விடுதலை கொடுத்தது.

அவள் விடுபட முயன்றாள். அமீன் அதற்கு இடமளியாமல் முழுவதுமாய் ஆக்கிரமித்தான். அவள் கழுத்தை இறுக்கிய கரம் மட்டும் அகலாமல் இருந்தது. அமீன் வியர்த்திருந்தான். அவள் இளமையால் வியந்திருந்தான்.

அற்புதன் எழுதிய

# இடி அமீன்

உண்மைத் தொடர்...

அதிர் இடி 38



**அந்த** நிறுவனங்களில் பாதிப்பேர் மொசாட் ஒற்றர்கள். ஆனால் ஒருவருக்குகொருவர் அறிமுகம் கிடையாது.

ஒருவர் சிக்கிக் கொண்டால்கூட அடுத்த வரை பற்றிய தகவல் போக வாய்ப்பே இல்லாத ஏற்பாடு.

பிரிட்டனில் உள்ள பிரபல பத்திரிகை ஒன்றின் நிருபராக தன்னை அறிமுகம் செய்து கொண்டாள் அழகி.

"இடி அமீனுடன் ஒரு வாரம்" என்ற தலைப்பில் பேட்டிக் கட்டுரை எழுதப்போகிறேன். உங்கள் ஒத்துழைப்புத் தேவை என்றாள் பேசும்போதே சிவந்த நாவால் தன் உதடுகளை வருடிவிட்டுக் கொண்டாள். அந்த செயற்பாடு இடிஅமீனை புரட்டி எடுத்தது.

பேசும்போது அவள் கால் மேல் கால்போட்டு அமர்ந்திருந் தாள். அடிக்கடி கால்களை மாற்றி மாற்றிப் போட்டுக்கொண்டாள்.

தன் எதிரில் கால் மேல் கால் போட்டுக்கொண்டு வேறு யாராவது அமர்ந்திருந்தால் அந்தக் கால் களையே முறித்து கறியாக்கி இருப்பான் அமீன்.

அழகான பெண், அதுவும் மினிஸ்கேட்டுடன் கால் மேல் கால்போட்டு அமர்ந்திருப்பதில் தனக்குள்ள இரசனையான சௌகரியம் கருதி பொறுத்துக் கொண்டான்.

அவன் கால்களை மாற்றிப் போட்டுக்கொண்ட தருணங்களில் மிகவும் அவஸ்தைப்பட்டான். அதனை அவள் கீழ்க்கண்களால் அவதானிப்புச் செய்தாள்.

இத்தனை பெரிய சர்வாதிகாரியை தன் அழகு மயக்கியதில் உள்ளூரக் கர்வமும் கொண்டாள்.

"ஒரு வாரமும் என்கூடவே நீ இருந்தாகவேண்டும். நீதான் ஒத்துழைக்கவும் வேண்டியிருக்கும்!" என்றான் அமீன்.

விஷமச் சிரிப்பொன்றையும் உதிர்த்தான். அதற்காகத்தானே வந்திருக்கிறேன் என்றாள். கிறங் கடிக்கும் பார்வையை வீசினாள்.

அன்று இரவே அவளைக் கட்டிலில் சந்தித்தான் அமீன்.

அவளது கழுத்தை தன் கரத்தால் இறுகப்பற்றிக் கொண்டு அவளது தாடையை கடித்துக் கொண்டு கால்களால் இறுக்கினான்.

அவளுக்கு மூச்சுத் திணறியது. சற்றுப்பயமும் ஏற்பட்டது. ஏதோ விபரீதமாக உறுத்தியது.

அமீன் ஒரு கரம் வேகமாக இலாவகமாக இயங்கி அவளது ஆடைகளுக்கு விடுதலை கொடுத்தது.

அவள் விடுபட முயன்றாள். அமீன் அதற்கு இடமளியாமல் முழுவதுமாய் ஆக்கிரமித்தான். அவள் கழுத்தை இறுக்கிய கரம் மட்டும் அகலாமல் இருந்தது.

அமீன் வியர்த்திருந்தான். அவள் இளமையால் வியந்திருந் தான். அப்போதும் கழுத்தை நெரித்தான்.

அவளது தலையணைக்கு அடியில் பிஸ்டல் இருந்தது..

இடி அமீன் மெய் மறந்து இருக்கையில் பிஸ்டலால் அவனது நெற்றியில் சின்னதாக பொட்டு வைக்கும் திட்டம் மனதில் பத்திரமாக இருந்தது.

ஆனால் அமீன் நடந்து கொண்ட முறை ஒரு இராட்சத மிருகத்திடம் மாட்டிக் கொண்டு விட்ட திகிலைக் கொடுத்தது.

அமீனைத் தள்ளிவிட முயன்றாள். கழுத்தை விடுவிக்க எத்தனித்தாள்.



அமீன் செயற்பாட்டால் உடன் களைத்துப்போயிருந்தது.

அதனால் பலம்கொண்டு அவனை புரட்டித் தள்ள முடியாதிருந்தது.

திடீரென்று இடியாய்ச் சிரித்த அமீன், கழுத்தைப் பிடித்த பிடியை தளர்த்தினான்.

பயந்துபோனாயா எனக்கு இப்படித்தான் பிடிக்கும். உன் கட்டுரையில் இதனையும் எழுதுவாயா? என்று கண்ணடித்தான்.

அவள் தனது கழுத்தை தடவி விட்டுக் கொண்டு அவனைப் பயத் தோடு பார்த்தாள். பயந்தால் கடமை என்னாவது? என்று மனதுக்குள் உறுத்தியது. மிகமிகக் கஷ்டப்பட்டு செயற்கையாக சிரித்துக்கொண்டு அமீனின் கழுத்தை தன் கைகளால் போர்த்து தன்னை நோக்கி சரித்து அவன் உதடுகளை தன் நாவால் இடமும் வலமுமாக வருடினாள்.

சரியான தருணம் ஒன்றுக்காக அமீனின் கிறங்கிய தன்நிலை மறக்கும் தருணத்திற்காக அவனை தூண்ட அவளுக்கு சில வித்தைகள் சொல்லிக் கொடுக்கப்பட்டிருந்தன.

கட்டிலில் ஒரு ஆளை புத்தி பேதலிக்கச் செய்வது எப்படி? என்பதை மொசாட்டின் பெண் உயரதிகாரி ஒருவர் சொல்லித்தந்திருந்தார்.

நாட்டுக்காக எதுவும் செய்யலாம். நம்மையே கொடுக்கலாம். அதனால் துணிந்து அவனை வசப்படுத்தியது. அந்த நரியை சவக்கிடங்குக்கு அனுப்பு என்றான் அந்த உயரதிகாரி.

அந்த வித்தைகளை கையாளத் தொடங்கினாள். அமீனுக்கு அவை புதிதாக இருந்தன. கண்களை மூடிக் கொண்டான். அவளிடமிருந்து சரிந்து மல்லாந்துகொண்டான்.

ஒரு கரத்தால் அவளது நெஞ்சை நீவிவிட்டுக்கொண்டே மறுகரத்தால் தலையணைக்குக் அடியில் உள்ள் பிஸ்டலை எடுக்க கைகளால் தேடினாள்.

அங்கே.. பிஸ்டலைக் காணவில்லை "திடுக்" என்றது மனது.

அமீனுக்கு சந்தேகம் வரக்கூடாதே என்று அவனை தன் வித்தையால் கவனித்த படியே பிஸ்டல் எங்கே போனது, என்று சிந்தித்துக் கொண்டிருக்க எல்லாம் முடிந்ததும் அமீன் எழுந்து தன்னை சீருடைக்குள் திணித்துக் கொண்டான்.

நிபுணியாக இருக்கிறாய். நான்தான் கற்றுக் கொடுத்திருக்கிறேன் பல பெண் களுக்கு. இன்றுதான் முதல் முறையாக ஒரு பெண்ணிடம் படித்திருக்கிறேன் என்று சிரித்துவிட்டு, "உனக்கு பரிசு தந்தேயாகவேண்டும் இந்தா" என்று அவன் நீட்டிய பொருளைக் கண்டதும் மொசாட் அழகிக்கு இதயத்துடிப்பே நின்றுவிடும்போல் இருந்தது.

அமீனைச் சுடுவதற்காக அவள் கொண்டுவந்து தலையணைக்கு கீழே வைத்திருந்த பிஸ்டல் இப்போது அமீனின் கையில் அடக்க ஒடுக்கமாக குந்தி இருந்தது. இடி அமீன் அவளது முகம் வெளிறிப்போனதை ரசித்தான்.

"இந்தா முத்தம்கொடு" என்று அவள் உதட்டுக்கு நேரே பிஸ்டலை நீட்டினான். அவள் தயங்க, தானே ஒற்றியெடுத்தான்.

எப்படி பொய் சொல்லலாம் என்று எதிர்பாராத திருப்பத்துக்கு ஏற்ற பொய்யை அவள் தேடிக்கொண்டிருக்க அமீனின் உதடுகள் ஒவ்வொரு வார்த்தையால் உதிர்த்தன.

"தற்பாதுகாப்புக்காக வைத்திருந்தேன்" என்று நீ சொல்லப்போகும் பொய்யை நம்புவதாக இருந்தால் ஜனாதிபதியாக இருக்க நான் தகுதியற்றவன். என்னை நீ சந்திக்க வரமுன்னரே உன்னைப் பற்றி வரலாறு தீர ஆராயப்பட்டுவிட்டது.

சரி தானாக வந்து மடியில் விழும் கனியை நாமாக மறுப்பானேன் என்றுதான் விளையாடிப் பார்த்தேன் என்று அமீன் , சிரித்த சிரிப்புக்கு அழகி பயத்தில் உறைந்திருந்தாள்.

அவளது மணிக்கட்டைப் பிடித்து நேரம்பார்த்த இடி அமீன் இரவு 11.35.

இது எனக்கு நல்ல நேரம். உனக்கு கெட்ட நேரம். உனது விருந்துக்கு நன்றி நன்றி நன்றி என்று மூன்றாவது முறையா சொன்னபோது பிஸ்டல் வெடித்தது.

அவளது நெற்றியின் மையத்தில் ரவை துளைபோட்டு குடைந்தது. கட்டிலில் செத்துப்போனாள், மொசாட் உளவழகி. யாருமறியாமல் அவளது பிணம் எரிக்கப்பட்டது.

இடி அமீன் சொன்னான், "அவளது சாம்பலை இஸ்ரேல் மீதுதான் தூவியிருக்க வேண்டும்". **(தொடரும்)**

## முரசு குறுக்கெழுத்துப் போட்டி

**வாசக நெஞ்சங்களே!**
**உங்கள் சிந்தனைக்குத் தீனிபோடும் வினாக்கள் அடங்கிய இப்போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.**

### குறுக்கெழுத்துப் போட்டி - 573

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | | |
| 13 | | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | | | 29 | 30 |
| 31 | 32 | | 34 | 35 | 36 |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி **26.05. 2014** க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.

அனுப்பவேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல. - 573
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்

தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 1000 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

### குறுக்கெழுத்துப் போட்டி 571- விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 கா | 2 ம | 3 ன் | 4 கூ | 5 த் | 6 து |
| 7 க | 8 னு | 9 த | 10 ன் | 11 ர | |
| 13 பு | 14 தி | 15 த் | | 17 து | 18 கி |
| 19 ட் | 20 நீ | 21 ப | 22 ம் | | 24 க் |
| 25 ட் | | | 28 ர | 29 சி | 30 சு |
| 31 ம் | 32 க | 33 ங் | 34 தா | 35 த் | 36 சு |

**இடமிருந்து வலம்**

01. நாம் பார்க்கும், கேட்கும், உணரும் செயல்களைச் சேமித்துக் கொள்வது.
04. ராதை - கண்ணனிடம் கொண்டது.
07. ஒளிச் சிதறல். எதிரொளித்தல் மூலம் நம் கண்ணுக்கு தெரியும் விம்பம். (குழம்பியுள்ளது)
15. இது, நாய் குடும்பத்தைச் சேர்ந்தது. ஆனால் குரைப் பதில்லை.
19. கவரிமா.(குழம்பியுள்ளது)
25. அண்மைச் சுட்டாய் ஒரு பெயரெச்சம். முதல் எழுத்து விடுபட்டுள்ளது.
29. தாய். (திரும்பியுள்ளது)
31. பெண்ணாமை.
34. குருத்திலை. (திரும்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

01. அமிர்தம், அமிழ்தம், அமுதம்.
02. ஓர் மீன் இனம். (குழம்பியுள்ளது)
04. பிசகு, தொடர்ச்சி. (குழம்பியுள்ளது)
06. அச்சகத்தில் பாவிக்கப்படுவதில் ஒன்று.
09. மனிதர். (குழம்பியுள்ளது)
17. சப்பாத்துக் கள்ளி.
18. அளவாய், நிதானமாய். (குழம்பியுள்ளது)
20. இந்திரனின் தேரோட்டி.

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 571 இற்கான சரியான விடைகளை அனுப்பி 1000 ரூபா பரிசுபெறும் அதிர்ஷ்டசாலி.**

எஸ்.எவ்.எம்.இஷாத், ஜின்னாநகர், திருகோணமலை.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. எம்.காவியா, பரந்தன், கிளிநொச்சி.
02. கு.அனுராஜ், புளியங்குளம், வவுனியா.
03. திருமதி என்.தவமணி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
04. சு.ஜெனித், மட்டுவில், சாவகச்சேரி.
05. தி.சாமிலி, பிரதான வீதி, மன்னார்.
06. சௌ.கம்சா, தெல்லிப்பளை, யாழ்ப்பாணம்..
07. சி.கவிந்தன், கச்சாய் றோட், கொடிகாமம்.
08. ஆர்.கமால்தீன், உடப்புசல்லாவ, நுவரெலியா.
09. ஆ.சாந்தன், ரெட்பானா, விசுவமடு.

# மீண்டும் இணையும் வெற்றி கூட்டணி!

கஜினி, ஏழாம் அறிவு ஆகிய இரண்டு வெற்றிப் படங்களை கொடுத்த சூர்யா - முருகதாஸ் ஜோடி மீண்டும் இணைய இருப்பதாக உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் வெளிவந்துள்ளது.


பிரபல தெலுங்கு படத் தயாரிப்பாளர் நல்லமலப்பு புஜ்ஜி என்பவர், தனது டுவிட்டரில், சூர்யா மற்றும் ஏ.ஆர்.முருகதாஸ் ஆகியோரை இணைத்து ஒரு படத்தினை தயாரிக்க உள்ளதாக தெரிவித்துள்ளார். இதற்கான முதல்கட்ட பேச்சுவார்த்தையில் உடன்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும் விரைவில் முறையான அறிவிப்பு வெளிவரும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். இந்த படம் தமிழ் மற்றும் தெலுங்கு ஆகிய இரண்டு மொழிகளில் தயாராகும் என அவர் தெரிவித்துள்ளார்.

சூர்யா தற்போது அஞ்சான் திரைப்படத்திலும், ஏ.ஆர். முருகதாஸ் தற்போது 'கத்தி' படத்திலும் பிசியாக இருக்கின்றனர். இந்த இரண்டு படங்களும் வரும் ஓகஸ்ட் மாதம் முடிவடைந்துவிடும் என்றும், அதன்பின்னர் இருவரும் இணைவர் கள் என்றும் எதிர் பார்க்கப்படுகிறது.

# நயனுக்கு சிம்பு கொடுத்தார் ஒரு கோடி!

நீண்ட இடைவேளைக்கு பின்னர் நயன்தாரா - சிம்பு மீண்டும் ஜோடி சேர்ந்த படம் 'இது நம்ம ஆளு'. ஆனால் இந்த படம் சில காரணங்களால் தடைப்பட்டுப் போனது. தற்போது சிம்புவின் முயற்சியால் மீண்டும் இந்த படம் தொடர உள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

சிம்புவுடன் 'இது நம்ம ஆளு' படத்தில் நடிக்க நயன்தாராவுக்கு ரூ.2 கோடி சம்பளம் பேசப்பட்டது. ரூ.1 கோடி அட்வான்ஸ் பெற்றுக்கொண்டு நடிக்க தொடங்கிய நயன்தாரா மீதித்தொகையை கொடுத்தால் மட்டுமே அடுத்தகட்ட படப்பிடிப்பிற்கு வருவதாக கறாராக கூறிவிட்டதால் படம் திடீரென தடைப்பட்டது. திடீரென ரூ.1 கோடியைப் புரட்ட தயாரிப்பாளரால் முடியாததால், இந்த படம் கைவிடும் நிலைக்கு வந்தது. பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட இந்த படம் எந்தக்காரணத்தை முன்னிட்டும் தடைப்படக்கூடாது என்ற காரணத்தால் சிம்புவே நயன்தாராவுக்கு தரவேண்டிய தொகையை கடனாகத் தருவதாக ஒப்புக் கொண்டதாகவும் தெரிகிறது. பணத்தை பெற்றுக் கொண்ட நயன்தாரா தற்போது இரண்டாவது கட்டப் படப் பிடிப்புக்கு வருவதற்கு ஒப்புக் கொண்டுள்ளார்.



கலர் கண்ணழகள்



# தாமதமாகிறான் கோச்சடையான்

சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த், சரத்குமார், ஆதி, தீபிகா படுகோனே ஆகியோர் நடித்த கோச்சடையான் திரைப்படத்தின் ரிலீஸ் திடீரென ஒத்தி வைக்கப்பட்டதாக தயாரிப்பாளர் தரப்பில் இருந்து அறிவிப்பு வெளியாகியுள்ளதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. தொழில்நுட்ப காரணமாக கோச்சடையான் படத்தின் பிரிண்ட் ரெடியாகவில்லை என்றும் அதனால் வரும் 23ஆம் திகதி கோச்சடையான் ரிலீஸ் ஆகும் என்றும் தயாரிப்பாளர் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

கோச்சடையான் ரிலீஸ் ஒத்திவைப்பு தங்களை மிகவும் வருத்தப்படச் செய்வதாக சமூக இணையத்தளங்கள் ரஜினி ரசிகர்கள் கருத்து தெரிவித்துவருகின்றனர்.

# போங்கடி நீங்களும் உங்க காதலும் திரைவிமர்சனம்

குப்பத்தில் சாதாரண குடும்பத்தில் பிறந்துவளர்ந்து சிறுசிறு திருட்டுசெய்து வாழ்ந்து வருபவர் நாயகன் ராமகிருஷ்ணன். இவர் நாயகி ஆத்மியா வீட்டிற்கு ஒருமுறை திருட செல்லும்போது, அங்கு ஆத்மியா தன்னுடைய காதலனுடன் வீட்டைவிட்டு ஓடிப்போக முயற்சிக்கிறார். திருடன் வரவால் அவர்களுடைய காதலை வீட்டில் உள்ளவர்கள் தெரிந்துகொண்டு, காதலர்கள் இருவரையும் பிரித்துவிடுகிறனர்.

இதனால் திருடனை பழிவாங்க நினைக்கும் ஆத்மியா, திருடன் ராமகிருஷ்ணனை காதலிப்பதுபோல் நடிக்கிறார். முதலில் காதலை மறுக்கும் ராமகிருஷ்ணன் ஒரு கட்டத்தில் காதலை ஏற்றுக்கொள்ளும்போது காதலனை அவமானப்படுத்துகிறார். இதைக்கண்டு ஆத்மியாவின் தோழி காருண்யா கோபம் கொண்டு ஏன் இப்படி செய்கிறாய் என்று கேட்க தோழியிடம் நடந்ததை கூறுகிறார் ஆத்மியா. தன்னுடைய காதலை அழித்தவனை பழிவாங்கத்தான் அவனை காதலித்தது போன்று நடித்ததாக கூறுகிறார். இந்த விஷயம் தெரிந்த ராமகிருஷ்ணன் அடுத்து என்ன செய்தார் என்பதுதான் மீதிக்கதை.

நல்ல பொழுதுபோக்கு படமாக அமைந்திருக்க வேண்டிய கதை. ஆனால் சொதப்பலான திரைக்கதை யால் படம் மனதில் பதியமறுக்கிறது. இயக்குனரே நாயகனாக இருந்தும் முகத்தில் தேவையான உணர்ச்சிகளை கொண்டுவரவில்லை.

காதலும், வில்லத்தனமும் கொண்ட கனமான பாத்திரம் நாயகி ஆத்மியாவுக்கு. ஆனால் அவ ருடைய முகம் வில்லத்தனத்திற்கு கொஞ்சமும் பொருத்தமில்லை. நடிப்பும் ரசிக்கும்படியாக இல்லை. இவரைவிட தோழியாக வரும் காருண்யாவின் நடிப்பு பரவாயில்லை. இருவரும் பாடல் காட்சிகளில் போட்டி போட்டுக்கொண்டு தாராளம் காட்டுகின்றனர். ஜெயப்பிரகாஷ், இமான் அண்ணாச்சி, சென்ராயன் ஆகியோர்களும் படத்தில் நடித்துள்ளார்கள். ஒருவருக்கும் சொல்லிக்கொள்ளும்படியான கேரக்டர் இல்லை. பாடல்கள் அனைத்தும் சுமார்.

படம் முடிந்து வெளியே வரும் பலர் 'போங்கடா நீங்களும் உங்க படமும்' என்று கூறிக்கொண்டே வெளியே வந்ததை கேட்க முடிந்தது.

# ஜூனில் வருகிறது கத்தி

மிகவும் எதிர்பார்க் கும் படம்தான் 'கத்தி'. ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் 'இளைய தளபதி' விஜய் இரட்டை வேடங்களில் கலக்க, இவருக்கு ஜோடியாக சமந்தா முதன்முறையாக நடிக்க இருக்கிறார். இப்போது இந்த படத்தை பற்றி ஒரு சுவையான தகவல் வெளி வந்துள்ளது. விஜய் ரசிகர்கள் ஆர்வமாக எதிர்பார்த்துக் கொண்டு இருந்த 'கத்தி' முதல் காட்சி ஜூன் மாதத்தில் வருகிறதாம். ஏற் கனவே படப்பிடிப்பின் சில புகைப் படங்கள் வெளிவந்த நிலையில், தற்போது இந்த செய்தி தளபதி ரசிகர்களுக்கு சரவெடிதான்.

# மிக விரைவில் வருகிறது 'பிசாசு'



தமிழ் சினிமாவின் முன்னணி இயக்குனர்களில் ஒருவர்தான் மிஷ்கின். படம்முழுவதும் வெளிச்சம் என்பது தெரியாமல் இருட்டிலே படத்தை எடுத்து தனக்கான ஒரு பாணியை உருவாக்கிக் காட்டியவர், ஆனால், அதைவிட ஒரு படிமேலே போய் இருண்ட மனிதர்களின் வாழ்க்கையை காட்டுபவர் பாலா, இவர்கள் இருவரும் இணைந்தால் எப்படி இருக்கும். அதற்கு நேரம் வந்துவிட்டது!

மிஷ்கின் இயக்கிய 'ஓநாயும் ஆட்டுக் குட்டியும்' படத்தை பார்த்த பாலா தனது சொந்த நிறுவனமான 'பி ஸ்ரூடியோ'க்கு ஒரு படம் செய்து தருமாறு கேட்டுக்கொண்டார். இதை தொடர்ந்து இதற்காக அவர் உருவாக்கி இருக்கும் கதைதான் 'பிசாசு' இப் படத் தில் நடிப்ப வர்கள் விபரங்கள் குறித்து விரைவில் அறிவிக்கப்படும் எனக் கூறப்படு கிறது.



மீண்டும் அம்மன்

# சவாலுக்காய் காத்திருக்கும் நயன்

அனாமிகா திரைப்படத்திற்கு பிறகு தன் சம்பளத்தை மடமடவென ஏற்றிவிட்டார் நயன்தாரா. தற்போதெல்லாம் நயன்தாரா லீட் ஹீரோக்களுடன் மட்டுமே நடிக்க ஆசைப்படுவதாகவும் தகவல் பரவியுள்ளது. இதை பற்றி நயன்தாராவிடம் கேட்டதற்கு, தான் எப்பவும் ஹீரோக்களை வைத்தோ, பணத்தை வைத்தோ படம் நடித்ததில்லை, இப்படிப்பட்ட காரணங்களை வைத்து மட்டும் நான் படங்களை ஒப்புக்கொள்வதுமில்லை என்றுகூறிய நயன்தாரா, தற்போது நான் சவாலான கதாபாத்திரங்களை ஏற்று நடிக்க பெரும் ஆவலுடன் இருந்துவருகிறேன் என்று கூறியுள்ளார்.

ஹீரோயினுக்கு முக்கியத்துவம் கொடுக்கிற கதா பாத்திரத்தில் இனி நடிப்பதாய் இல்லை எனக்கூறிய நயன் இப்போது சவாலான கதாபாத்திரத்தை எதிர்நோக்கியுள்ளார். எப்படியோ சுவாரசியமான படங்களை ரசிகர்களுக்கு கொடுத்தால் சரிதான்.

...யான்

...ன்ட் ...ால் வரும் ...ரிலீஸ் ...வளியிட்ட ...ளார். ...ந்திவைப்பு ... செய்வதாக ...ி ரசிகர்கள்

...தலும்

# தூள் பறக்கும் ஆண்ட்ரியாவின் குத்தாட்டம்!

முன்னணி நாயகிகள் குத்தாட்டம் குத்துவது, தற்போதெல்லாம் பேஸனாகிவிட்ட நிலையில் ஆண்ட்ரியாவும் குத்தாட்டத்தில் குதிக்க இருக்கிறாராம். உத்தமவில்லன் திரைப்படத்தில் நடித்துவரும் ஆண்ட்ரியா அப்படத்தை தவிர்த்து தரமணி, அரண்மனை, புதிய திருப்பங்கள் போன்ற படங்களில் சாதாரண நடிகர்களுக்கு ஜோடியாக நடித்துவருகிறார்.

ஆகையால் இப்போது முன்னணி ஹீரோக்களுக்கு குறிவைத்துள்ள ஆண்ட்ரியா விஷாலின் 'நான் சிகப்பு மனிதன்' திரைப்படத்தை பார்த்து வியந்தாரோ என்னவோ அடுத்து விஷால் நடிக்கும் பூஜை படத்தில் நடிக்க ஆண்ட்ரியா அடிபோட, அப்படத்தின் இயக்குனர் ஹரியும் ஆண்ட்ரியாவை அழைத்திருக்கிறார். ஹரி கண்டிப்பாக இரண்டாவது ஹீரோயினாக நடிக்க வைக்கத்தான் அழைக்கிறார் என்று ஆவலுடன்போன ஆண்ட்ரியாவுக்கு மிஞ்சியது குத்துப்பாட்டு மட்டுமே. விஷால், ஸ்ருதிஹாசன் ஜோடியாக நடிக்கும் பூஜை திரைப்படத்தில் ஒரு குத்துப்பாட்டுக்கு குத்து டான்ஸ் ஆடும் வாய்ப்பை கொடுக்க அழைத்திருக்கிறாராம் ஹரி. பெரிய இயக்குனர் கேட்டதால் மறுக்காமல் ஒப்புக்கொண்டுள்ள ஆண்ட்ரியா, ஸ்ருதிஹாசனைவிட இப்பாட்டில் க்ளாமர் காட்ட இருக்கிறாராம்.



மஞ்சப்பை






# தேன் கிண்ணம்

## காலம் தாழ்த்தாதே!

கே.வாலேந்திரன்,
கொள்ளுப்பிட்டி.

நீ என்னைப் பார்க்க
வந்து விட்டுப் போன
நாட்களில் எல்லாம்
எங்கள் வீட்டு வாசற்படிகள்கூட
பூத்துக் கிடக்கும்
ஆனால் இப்போ பூந்தோட்டமே
வரண்டு போய் கிடக்கிறது
நீ வராதிருப்பதனால்...

இதயம் இருப்பது
உண்மையானால்....
அந்த இதய அறைகளுக்குள்ளே
நானும் இருப்பது திடமானால்...
உடனே திரும்பி விடு....

உள்ளம் மெலிந்து உடல் உருகி
உருமாறிப் போனால்
உனக்குக் கூட - நாளை நான்
அடையாளம்
தெரியாமல் போகலாம்.

காலம் இன்னுமின்னும்
தாமதமானால் என்னை கல்லறை
சொந்தம் கொண்டாடி விடலாம்
அதற்குமுன் கடுகதியாய் வந்துவிடு...

காலை வேளையிலே
கடிதம் ஒன்று - என்
வீடு தேடி வந்தது.
நெஞ்சிலே சஞ்சலம் தாவ
அஞ்சலை என் விரல்கள்
விரைவாகப் பிரிந்தன.

முத்தான கையெழுத்துக்கள்
மடலுக்குள் சிதறி
மூன்றெழுத்தில் உதிக்கும்
காதல் வரிகளாக
வடிவம் கொண்டன.

வடிவத்தை வாசிக்கும் போது
காதல் இதயத்தை
நேசிப்பது போல்
இருந்தது எனக்கு.

முகவரி இல்லாமல்
விழித்த மடலுக்குள் - அதன்
சொந்தத்தைத் தேடும்
என் விழிகள் - மடல்
வரிகளின் முடிவிலே
குயில் என்ற
முற்றுப் புள்ளியோடு நின்றன.


மடலுக்குச் சொந்தம்
குயில் தானோ - என்
மனதுக்குள் தோன்றும்
போராட்டம் - அது.

வாரம் ஒரு தடவை வந்து சேரும்
கடிதத்துக்குள்ளே- காதல்
காவியத்தின் கருணையே தனி ரகம்.

அஞ்சல் அலுவலகத்திலே
ஒரு நாள்
மஞ்சள் உடையிலே - என்
அஞ்சல் முகவரியை
கொஞ்சம் கொஞ்சமாக
மென் விரல்களால்
எழுதினாள் ஒரு தேவதை.

அட டா, அந்த மடலுக்குச்
சொந்தக்காரி - என்
அடுத்த வீட்டு மங்கையல்லவா.
இதுவரையும் ஒரு முறையேனும் - உன்
முகவரி கூறாமல் மடலுக்குள்ளே
காதல் ராகம் பாடிய குயிலே
நீதானா அந்தக் குயில்.

இளம்பிறை யோகன்
புத்தளம்.



## நீதானா அந்தக் குயில்

# ஈழத்து எழுத்தாளர்கள்

## மன்னவன் கந்தப்பு

**(18 ஜூன் 1926 - 15 பெப்ரவரி 2004)**

முருகேசு கந்தப்பு என்ற இயற்பெயர் கொண்ட மன்னவன் கந்தப்பு ஒரு ஈழத்து எழுத்தாளர். பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியரான இவர் கவிதை புனைதல், பட்டிமன்றப்பேச்சு என்பனவற்றில் திறமை காட்டியவர். சிறந்த நகைச்சுவைப் பேச்சாளரும்கூட. முற்போக்குச் சிந்தனையாளரான இவர் பாடசாலைத் தலைமை ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர்.

கந்தப்பு யாழ்ப்பாணத்தில் கரவெட்டியில் பிறந்தவர். தமிழ் புலமையையும், கவி புனையும் ஆற்றலையும் தென்புலோலியூர் கந்தமுருகேசனாரிடம் கற்றுக்கொண்டவர். உயர்கல்வி பயிலும்பொழுதே இவரது தமிழ் ஆளுமையை அவதானித்த கலாநிதி சிவப்பிரகாசம் இவரை "மன்னவன்" என்று அழைக்கத்தொடங்கினார். பின்னர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் மாணவர்களுள் ஒருவராகவும் விளங்கினார்.

1960-1972 வரையிலான காலப்பகுதியில் இலங்கை வானொலியில் கவியரங்குகளில் பங்குபற்றி புகழ்பெற்றவர். வானொலி மற்றும் பத்திரிகை நிறுவனங்களினால் நடத்தப்பட்ட கவிதைப் போட்டிகளில் பங்குபற்றிப் பரிசில்கள் பெற்ற இவர், சிறந்த நகைச்சுவைப் பேச்சாளரும்கூட.

**கௌரவங்கள், விருதுகள்**

இந்து கலாசார அலுவல்கள் அமைச்சு 2001ம் ஆண்டில் இவருக்கு "கலைஞானகேசரி" என்ற விருதினை வழங்கிக் கௌரவித்தது.

வடமராட்சி தெற்கு - மேற்கு பிரதேசக் கலாசாரப் பேரவை 2005இல் தமது வருடாந்த கலாசார விழாவின் ஒருநாள் நிகழ்வு அரங்கிற்கு இவரது பெயரைச் சூட்டி கௌரவித்தது.



என்.எம்.ஹலீம்,
பொத்துவில் -21

## நிஜம் தானா பெண் இவள்...

பூச்சார் வடித்தெடுத்து
பூமியில் புதிதாய் உருவாகியவள்
நிலாச் சாயலில் நதி நீர் நுரை
வடித்தெடுத்து பூ இவளை
ஊறவைத்திருக்கு. போல்....

சாலை கடப்பதற்கு மரத்தடி
நின்ற நாழிகையில்
துப்பட்டா குடை சாய்ந்த
பிஞ்சுகள் யாவும் காய்ச்சலில்
கனிந்து வீழ்ந்திற்று....

மஞ்சள் தேய்த்துக் குளிக்க
வைத்து...
மருதாணி பூசி சிவக்க விட்டு
மேனியில் பஞ்ச வர்ண
சுடித்தார் அணிந்து
சாலை வந்த
மஞ்சரி இவள்...

பிஞ்சுப் பாதம் நடை
பழகிடுவதை போலவே...
அஞ்சி அஞ்சிப் போகிறாள்...

அந்தப் பக்கம் நின்றவன் - நான்
நெஞ்சுக்குள்ளே கொசுக்கடி
புரிஞ்சிக்க தெரியவில்லை...!

பற்றி முடிந்த பின்னே
பஞ்சென் கண்களுக்கு
பார்வை வந்தது...

தினம் தினம் முகச் சவரம்
செய்து வரும்...
வழி பார்க்க முடிவுகள்
என் இளமைக் கூடத்தில்...!

# என் தாய்க்குப் பின்...



என்னைப் பெற்ற
தாயிருந்தா லென்
வாய் வயிறு காயாது
வேளா வேளைக்குச்
சோறு கறியுண்டு!
காய்ச்சல் கருப்பென்றால்
கடுகு கருக்கென்றுங்
கசாயம் மருந்தென்றும்
கடவுள் நேர்த்தி யென்றுங்
காவல் நூல் என்றுங்
கனமாய்ப் பணியளிப்பாள்!
சோர்ந்து நான்
உறங்குகையில்
போர்வை விரிப்பளிப்பாள்!
அன்னையின்
முகம் பார்த்தே
இமை சோர்வேன்...
"விடிஞ்சிட்டு எழு மகனே!" என
விழித்த கண் முன்னே
அன்னையவள் தரிசனங்கள்!
இத்துணையுஞ் செய்து
எனை வளர்த்த
என்னம்மா - அவ
அண்ணன் மகளுக்கா - எனை
அடிமையாக்கிப்
போக வேண்டும்?
உழைப் பற்றால்
உணவில்லை!
உடல் சோர்ந்தால்
உதவியில்லை!
என் சேவைக் கவளில்லை!
அவள் தேவைக்கே நானாம் - இது
தாய்க்குப் பின் தாரமில்லை - மனப்
பாரமென்றே கொள்ளம்மா!

பாண்டியூர்
பொன். நவநீதன்.

## இப்பூவுலகில் யாரறிவர்?

பூக்கள்கூட எம்மால் சிறிதேனும்
காயப்படக் கூடாதென
கவலையுறுபவன் நான்.

இருந்தும் என்ன
செய்வேன் நான்
அப்போது?

இங்கே... மனங்கள்
இரும்பாகித் துருப்பிடித்துக்
கிடக்கும்போது - வெறும்
இரும்புத் துண்டு
எம்மால் மட்டும்
என்ன செய்திட
இயலும்?
அன்றி.
எம்மால் - எவ்வாறு
அடுத்தவர் வலிகளை
உணர்ந்திட முடியும்?

எஸ்ஸெம் நிலாம்,
புத்தளம்.

# கிரிக்கெட் உயர்ந்தது

**ஒரு** குடம் பாலுக்கு ஒரு துளி விஷம். ஐ.பி.எல் போட்டிகள் பல்வேறு சர்ச்சைகளுக்கு மத்தியிலும் பல இலட்சம் ரசிகர்களின் நம்பிக்கையை வென்றதொரு கிரிக்கெட் தொடர். இத்தகையதொரு போட்டியில் சர்வதேசக் கிரிக்கெட் வீரர்கள் சேர்ந்தும், எதிர்த்தும் விளையாடும் நிகழ்வில் - பொலார்ட், ஸ்டாக் மோதல் மிக அருவருப்பானதொரு செயற்பாடாக அமைந்துவிட்டது. நிகழ்ச்சியின் சரி, பிழை யாரென்பது சர்ச்சையல்ல.

இருவருமே சமமாகத் தவறு இழைத்தவர்களே. ஸ்டாக்கின் இளரத்தம் நக்கல் பார்வை, அலட்சியச் சிரிப்பு, வார்த்தையாடல்களைக் கொண்டதுதான். அதேபோல் சிலவேளைகளில் பந்துவீச வரும் பொலார்ட் ஓடிவந்து பின்னர் திடீரென்று பந்துவீசாமல் பின்வாங்குவது, அதேவேளை துடுப்பெடுத்தாடும்வேளையில் பந்து வீச்சாளர் கடுமையாக ஓடிவந்து பந்துபோட முயலும் வேளையில் பின்வாங்கிக்கொள்வது போன்றவற்றை நிறையவே கண்டுள்ளோம்.


ஆனால் மும்பை இந்தியன்ஸ், றோயல் செலஞ்ஜர்ஸ் ஆட்டத்தில் இவ்விருவரும் எல்லை மீறிவிட்டார்கள் என்பதில் எந்தக் கருத்துவேறுபாடும் இல்லை. பொலார்ட்டை இலக்கு வைத்து ஸ்டாக் அதிவேகமாகப் பந்தைச் செலுத்தியதும் (அது தவறென்று தெரிந்தும் கூட) பதிலாக பொலார்ட் துடுப்பை ஸ்டாக்கை நோக்கி எறிந்ததும் மிக மிகக் கண்டிக்கப்படவேண்டிய விடயங்களாகும்.

இத்தகைய சம்பவங்கள் இனிவரும் காலங்களில் நடைபெறாமல் இருக்க வேண்டுமென்றால் தண்டனையும் கடுமையாக இருக்கவேண்டும். கொடுப்பனவில் ஒரு சிறுவீதம் தண்டமாக அறவிடப்படும் என்பது கேலிக்கூத்தாகித்தான் இருக்கும். வார்த்தையாடல்கள் விளையாட்டில் சகஜம்தான் என்றாலும் மைதானம் போர்க்களமாக அனுமதிக்கக்கூடாது.

ஏனெனில், எந்த ஒரு கிரிக்கெட் ஜாம்பவானையும் விட கிரிக்கெட் மிக் உயர்ந்தது.



# எங்களுக்கும் தெரியும்



**மேற்கத்திய** ஊடகங்கள், மேற்கைவிடச் சிறந்தது எதுவுமே இல்லை என்பது போலவும், மற்றவை எல்லாம் சற்று கீழ்நிலை என்பது போலவும் கருத்து வெளியிடுவது ஒன்றும் ஆச்சரியம் இல்லை.

பிரேசிலில் உலகக் கிண்ணப் போட்டிகள் தொடங்கவுள்ள நிலையில் இத்தகைய சில கருத்துக்கள் வெளிவரவே அதற்கு மிக அழகான பதில்களை பிரேசில் விளையாட்டுத் துறை அமைச்சர் அல்டோ றெபெல்லோ கொடுத்துள்ளார். இவை மிக ஆழமானவையாகவும் அதேவேளை பதிலடியாகவும் அமைந்துள்ளன.

உலகக் கிண்ணப் போட்டிகள் நடைபெறவுள்ள நிலையில் கடுமையான பாதுகாப்பு சவால்கள் எதிர்கொள்ளப்படும் நிலை உண்டென்பதை ஏற்றுக்கொள்ளும். அவர் ஈராக் அல்லது ஆப்கானிஸ்தான் போன்று யுத்த சூழ்நிலையொன்று இங்கில்லை என்று கூறியுள்ளார். தொடர்ந்து இங்கிலாந்து இத்தாலி அணிகளுக்கு இடை யிலான முதலாவது போட்டி நடைபெறவுள்ள மனுஸ் நகரம் குற்றச்செயல்கள் நிறைந்த நகரம் என்று ஆங்கில ஊடகமொன்று குறை கண்டிருந்தது.

இதற்குப் பதில் அளித்த அமைச்சர், மனுஸ் நகரம் உதைபந்தாட்டத்துக்கு ஏற்ற நல்ல நகரம். அதோடு உஷ்ணம் கூடிய இடமும்தான். இங்கிலாந்துக்காரர்கள் தங்களது ஏகாதிபத்திய காலத்திலும் பின்னர் ஈராக் யுத்தத்திலும் உஷ்ணம் என்ன என்பதை அறிந்திருப்பார்கள். இது ஒன்றும் அவர்களுக்குப் புதிதல்ல என்று மறைமுக நக்கல் அடித்திருக்கிறார். தொடர்ந்து ஈராக்கில் இவர்கள் எதிர்கொண்ட எதிர்ப்புகள் போலவோ அல்லது ஆப்கானிஸ்தானில் இவர்கள் நூற்றுக்கணக்கான இளம் இராணுவ வீரர்களை இழந்தது போன்றதான நிலை பிரேசிலில் ஏற்படாதென்றும் கூறியுள்ளார்.

நாங்கள் எதைச் செய்தாலும் குறைகாண முயற்சிக்கும் ஊடகங்கள் 1972 மியூனிக் ஒலிம்பிக் கொலைகளையும் 1996 அட்லான்ரா ஒலிம்பிக் குண்டு வெடிப்புக்களையும் சுட்டிக் காட்டியுள்ளார்.

எனவே மேற்கத்திய ஊடகங்கள் தங்கள் மேதாவித்தனத்தைக் காட்ட முனைந்தால், அதே மொழியில் திருப்பவும் பதிலடி கிடைக்கும் என்பதை பிரேசில் விளையாட்டுத் துறை அமைச்சர் தைரியமாகச் செயற்படுத்தியுள்ளார்.






# இது ஒரு பார்வை

**றோய்** டயஸ் மிக அழகான, அதிரடியான துடுப்பாட்ட வீரர், அதாவது ஏறத்தாள முப்பது வருடங்களுக்குமுன் பிற்காலத்தில் மலேசியா, நேபாளம், ஓமான் கிரிக்கெட் அணிகளுக்குப் பயிற்றுனராக இருந்தவர். தற்போது என்.சி.சி கழகத்தின் பயிற்றுனராக இருக்கிறார்.

இவருடன் நடைபெற்ற நேர்காணல் ஒன்றில் அரவிந்த டி சில்வா மற்றும் குமார் சங்கக்காரா பற்றி கேட்டபோது, டயஸ் பல விடயங்களை எடுத்துக் காட்டியுள்ளார். அரவிந்த டி சில்வா மிகுந்த தன்னம்பிக்கையுள்ள வீரர். பாடசாலைக் காலங்களில் இருந்தே அதீத திறமை பெற்றிருந்தவர். எந்த நிலையில் துடுப்பாட்டத்தையும் ஏற்றுக்கொண்டு வெற்றிகரமாகச் சமாளிப்பவர். இதேவேளை குமார் சங்கக்கார மிகக் கடினமான உழைப்பாளி. அதீத திறமை கொண்டவர் என்றுகூறி இவரது கடும் உழைப்புக்கு ஒரு உதாரணம் காட்டியுள்ளார்.



பங்களாதேஷ் அணிக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் முதல் இனிங்சில் 300 ஓட்டங்களும், இரண்டாவது இனிங்சில் சதமும் அடித்து தன்னை நிரூபித்த குமார் சங்கக்காரா என்.சி.சி. மைதானத்தில் வேறு பலருக்கு பயிற்சியளித்துக் கொண்டிருந்த றோய் டயஸைச் சந்திக்க விரும்பியிருக்கிறார்.

அப்போது சங்கக்காரா என்ன செய்து கொண்டிருந்தார் என்றால், அந்தக் காலை 9 மணிவேளையில் துடுப்பாட்ட வலைப் பயிற்சி செய்து கொண்டிருந்தார். அவரின் தந்தை அதனை அவதானித்துக் கொண்டிருந்தார். இதனைக் கண்ட டயஸ் தன் பயிற்சி வீரர்களிடம் பங்களா தேசில் சாதனை படைத்த குமார் இப்படிப் பயிற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார். வேறு யாராவதாக இருந்தால் இப்படி வந்து பயிற்சி செய்து கொண்டிருக்கமாட்டார்கள். தன்னைவிட யார் இருக்கிறார்கள் என்ற மிதப்பில்தான் இருந்திருப்பார்கள் என்று ஆச்சரியத்துடன் கூறினாராம். இதனால்தான் அவர்மீது எனக்குப்பெரிய மதிப்பென்றும் கூறினாராம்.



இப்பொழுது சங்கக்காரா இங்கிலாந்தில் நிற்கிறார். சிலவேளை இதுவே இங்கிலாந்தில் இவர் விளையாடும் கடைசி டெஸ்ட் தொடராகவும் இருக்கலாம். இவர் இம்முறை இங்கிலாந்தில் நல்லதொரு பதிலை ஏற்படுத்தவேண்டும் என்று வாழ்த்துகிறார் டயஸ்.

பொதுவாக இங்கிலாந்தின் லோர்ட்ஸ் மைதானத்தில் சதம் அடிப்பது ஒவ்வொரு கிரிக்கெட் வீரனதும் கனவு. சங்கக்காரா இம்முறை அந்தச் சாதனை புரிய ஆசையாகத்தான் இருப்பார். இது அவருக்குக் கடைசிச் சந்தர்ப்பமாகவும் இருக்கலாம். இந்த லோர்ட்ஸ் கனவு நிறைவேறாமல் போனார் பலர். பிறைன் லாறா, சச்சின் டெண்டுல்கர், றிக்கி பொன்ரிங், சுனில் கவாஸ்கர் போன்றவர்களாவார்கள். சங்கக்காரா லோர்ட்ஸ் மைதானத்தில் சதம் அடித்தார் என்ற சாதனையைப் பதிவுசெய்ய வாழ்த்துவோம். டயஸூம் அதனையே கூறி வாழ்த்துகிறார்.

# தெளிவாக இல்லையே!

**டெஸ்ட்** தரவரிசையில் தற்போது முதல் நிலையைப் பெற்றுள்ள நாடு அவுஸ்திரேலியா. கடந்த ஐந்தாண்டு காலத்தில் இப்பொழுதுதான் அவுஸ்திரேலியா தரவரிசை ஒன்றைப் பிடித்துள்ளது.

ஆனால் இதில் முரண்பாடு என்னவென்றால், அண்மையில்தான் ஐ.சி.சி. யினால் தென்னாபிரிக்க டெஸ்ட் அணி சிறந்த அணியென்று பெரும் தொகைப் பணப் பரிசொன்று வழங்கப்பட்டு இருந்தது. இந்த நிலையில் அவுஸ்திரேலிய தரவரிசையை சில நியாயமான தொன்றாக ஏற்றுக் கொள்ளத் தயாரில்லை. இந்த முறைமை என்னவென்று புரியவில்லை என்பது இன்னொரு சாராரின் ஆதங்கம். என்னவாக இருந்தாலும் தரவரிசை ஒன்றைப் பெற்றமை மகிழ்வானதே என்பது பலரின் எண்ணம்.



கடந்த வருடம் 4-0 என்று இந்தியாவால் தோற்கடிக்கப்பட்டதும், 3-0 என்று இங்கிலாந்தால் தோற்கடிக்கப்பட்டதுமான அவுஸ்திரேலியா எவ்வாறு முதலிடம் பெறுவது நியாயமாக இருக்கமுடியும். பின்னதாக இங்கிலாந்தையும், தென்னாபிரிக்காவையும் டெஸ்ட் தொடரில் தோற்கடித்தமை இவர்களது தரவரிசை உயர்விற்கு உதவியிருக்கலாம் என்றாலும் முன்னதாக இங்கிலாந்துடனும், இந்தியாவுடனும் ஒரு டெஸ்ட் போட்டியில்கூட வெல்லமுடியாத அணி, தரவரிசை ஒன்றுக்கு வருவது நியாயமா என்பதே பலரதும் கேள்வியாக இருக்கிறது.

அதுபோக இலங்கை சிம்பாவே அணிகளுக்கு எதிரான டெஸ்ட் போட்டிகளை வென்றால் மீண்டும் தென்னாபிரிக்கா முதலிடம் பெறும் வாய்ப்பை பெறும். அதேவேளை பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் தொடரை அவுஸ்திரேலியா வென்றால் தரவரிசை ஒன்றைத் தக்க வைத்துக்கொள்ளும்.


எதுஎவ்வாறாயினும், டக்வேர்க் லூயிஸ் திட்டம் இன்னும் ரசிகர்களுக்குச் சரியாகப் புரிய முடியாத ஒன்றாக இருப்பது போலத்தான் அணிகளுக்கிடையிலான தரவரிசையை நிர்ணயிக்கும் புள்ளி முறைமையும் இருக்கிறது போலத் தெரிகிறது.




# திருமணத்திற்குமுன் பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும்

இன்றைய காலகட்டத்தில் திருமணம் செய்துகொள்ளும் ஆணும், பெண்ணும் கட்டாயமாக மருத்துவப் பரிசோதனை செய்துகொள்ள வேண்டியது அவசியமாகிறது. ஜாதகப் பொருத்தம் மட்டும் பார்க்காமல் மருத்துவ சோதனையை செய்து கொண்டால் வாழ்க்கை சந்தோசமாக செல்லும். திருமணத்துக்கு முன்பே மாப்பிள்ளையும் பெண்ணும் மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொள்வதன்மூலம், உடல் குறைபாடுகள் ஏதாவது இருப்பின் அவற்றை நிவர்த்தி செய்வதுபற்றி முன்கூட்டியே நடவடிக்கை எடுக்கலாம். அத்தியாவசியமான சந்தர்ப்பங்களில் திருமணத்தைத் தவிர்க்கவும் வாய்ப்பு கிடைக்கும்.

உடல் மற்றும் மனநலப் பரிசோதனைகளையும் மேற்கொள்ள வேண்டும். வருங்கால மாப்பிள்ளை திருமணத்துக்கு முன்னர் அப்படி என்னதான் பரிசோதனைகள் செய்து கொள்ள வேண்டும்? வழக்கமான உடல் பரிசோதனை, எச்.ஐ.வி. பரிசோதனை, "ஹெபடைடிஸ் பி" வைரஸ் பாதிப்பைக் கண்டறியும் ஹெச்பிஎஸ் ஏஜி(HBsAg) பரிசோதனை, ஹீமோகுளோபின் பரிசோதனை, செமன் அனாலிஸிஸ் எனப்படும் விந்தணுப் பரிசோதனை மற்றும் பீனைல் டாப்ளர் என்னும் ஆண்மை தொடர்பான பரிசோதனைகளை செய்யவேண்டும்!



# மகளுக்கு தந்தையாக அல்ல... நண்பனாக இருங்கள்



ஒரு பெண்ணின் தந்தை அவள் வாழ்க்கையில் முக்கியமான பங்கை வகிக்கின்றார். அவளுடைய குழந்தை பருவத்திலிருந்து டீன் ஏஜ் பருவம்வரை அவளை பார்த்து பார்த்து வளர்த்து வருபவர் தந்தை. ஒரு தாயை போல் தந்தைக்கும் பல கடமைகள் உள்ளன.

அவளின் வாழ்க்கைக்கு அவரே நம்பிக்கையையும், பாதுகாப்பையும் அளிக்கின்றார். பெற்றெடுப்பது தாயின் கடமை என்றாலும், தந்தையும் அதில் முக்கிய பங்கை வகிக்கின்றார். பெண் குழந்தை பிறந்த உடனேயே தாயை விட தந்தைக்குத்தான் பொறுப்புகள் கூடுகின்றன.

அவளுடைய பள்ளி முதல் வாழ்க்கை வரை, அனைத்தையும் தேர்ந்தெடுப்பதை கண்ணும் கருத்துமாக செய்து முடிப்பர் தந்தை. அதுமட்டுமின்றி தனது மகளின் வாழ்வில் ஒரு தந்தையானவர் செல்வாக்கையும், சுயமரியாதையையும், நம்பிக்கையையும் கொடுக்கின்றார். இப்போது ஆரோக்கியமான அப்பா-மகள் உறவை பராமரிப்பது எப்படி என்று இங்கு காண்போம்.

நல்ல நண்பனாக இருங்கள் மகளை தோழியாக கருதி, உங்கள் எண்ணங்களை பகிர்ந்துகொள்ளுங்கள். முக்கியமாக மகளுடைய கருத்துகளுக்கு முக்கியத்துவம் அளித்துக் கேளுங்கள். உங்கள் மகளை உங்களுக்கு சமமாக நடத்துங்கள்.

உங்கள் மகளுக்கு எதுவும் தெரியாது என்று எண்ண வேண்டாம். குழந்தைகள் இந்த நாட்களில் மிகவும் தெளிவாகவும், அறிவுபூர்வமாகவும் சிந்திக்கின்றார்கள் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.

ஒரு நடுவராக இருந்து உங்கள் மகளுக்கும், உங்கள் மனைவிக்கும் இடையில்வரும் பிரச்சினைகளை தீர்த்து வையுங்கள்.

பெண்களை பாதுகாக்கின்றோம் என்று கருதி தந்தைமார்கள் சிலநேரங்களில் தொந்தரவு கொடுப்பது உண்டு. இதனால் நீங்கள் உங்கள் குழந்தைகள்மீது சந்தேகம் கொள்ள தூண்டும். இது கண்டிப்பாக உங்கள் மகளை உங்களிடமிருந்து பிரித்துவிடும் என்பதை மறந்துவிடாதீர்கள்.

அவர்கள் இனி குழந்தைகள் இல்லை, அவர்களால் சிந்திக்கவும் செயற்படவும் முடியும் என்பதை மறந்துவிடாதீர்கள். அதிலும் செய்யும் தவறுகளில் இருந்து கற்றுக்கொள்ளட்டும். எப்பொழுதும் அவர்கள் பின்னால் நின்று போதனை செய்வதை நிறுத்துங்கள்.

அவள் உங்கள் சொந்த மகள். அவள் சிறந்தவளோ, தோல்வியுற்றவளோ உங்கள் மகள்தான். அதிலும் அவள் மீது உங்கள் கனவை செலுத்தாமல் அவளை அவளாக ஏற்றுக்கொள்ளுங்கள். நிபந்தனையின்றி அவர்களிடம் அன்பு செலுத்துங்கள்.

உங்கள் மகளின் சமூக வட்டம் கஷ்டமாககூட இருக்கலாம். அவளின் நண்பர்களின் வட்டம் உங்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தினாலும் அவர்களை ஏற்றுக்கொள்ளுங்கள்.

இளம் வயது என்பதால் சிலநேரத்தில் அவர்கள் கத்துவார்கள், கோபப்படுவார்கள். இருந்தாலும் நீங்கள் அமைதியாக இருந்து, அவர்கள் குறைகளைப் போக்கி, பொறுமையாக எடுத்துக் கூறுங்கள்.

உங்கள் கிடைக்கும் நேரத்தை, உங்கள் மகளுடன் செலவிடுங்கள். இதனால் அவர்கள் உங்களை உங்களாகவே ஏற்றுக்கொள்வார்கள் மற்றும் அன்பு செலுத்துவார்கள் என்பதில் ஐயம் இல்லை.

# மருக்கள் மறைய கை வைத்தியங்கள்



* ஆளி விதையை அரைத்து, அதனுடன் ஆளி விதை எண்ணெய் மற்றும் சுத்தமான தேன் சிறிதளவு சேர்த்து கலக்கவும். இந்த பத்தை மருவின்மீது தடவி, அதன் மேல் பண்டேஜ் ஒட்டவும். இந்த பத்தை தினமும் புதிதாக தயாரித்து உபயோகிப்பது நல்லது. இதை தொடர்ந்து செய்துவந்தால் விரைவில் நல்ல பலன் கிடைப்பதை காணலாம்.

* பூண்டு பல் ஒன்றை நசுக்கி, பாதிக்கப்பட்ட பாகத்தின் மேல் தடவுவது மற்றுமொரு மிகச்சிறந்த வைத்தியமாகும். அவ்வாறு தடவி, அதன்மேல் பண்டேஜ் ஒன்றை ஒட்டிவிடுங்கள்.

* அன்னாசிப்பழத்தை அவ்வப்போது வெட்டி, பாதிக்கப்பட்ட பகுதியின்மீது தடவிவருவது மருக்களை குணமாக்குவதற்கான சக்திவாய்ந்த மருத்துவ முறையாகும்.

* அத்திப்பழத் தண்டுகளில் இருந்து சாறு எடுத்து, அதனை ஒரு நாளில் பலமுறை, பாதிக்கப்பட்ட பகுதியின்மீது தடவிவருவது மருக்களைப் போக்குவதற்கான சிறந்த மருத்துவ முறைகளுள் ஒன்றாகும்.

## 250/= வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

**பரிசுப் போட்டி இல :-419**

**கேள்வி: திருமணத்திற்குமுன் ஆண்கள் செய்யவேண்டிய பரிசோதனைகள் எவை?**

**அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:- 21. 05. 2014**

விடையைக் கீழுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பிவைக்கவும். அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி,
பரிசுப் போட்டி இல : 419
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல - 167, யாழ்ப்பாணம்.

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

பரிசுப் போட்டி இல :- 417இற்கான விடை :- மனஅழுத்தம், பயம், அச்சம்.
பரிசுபெறும் அதிர்ஷ்டசாலி :- M.A.S.M.ரசூல், பிரதான வீதி, ஹெக்கிராவ.

419

பெயர் : ..................................

முகவரி : ..................................

தே.அ. அட்டை இல : ..................................

விடை : ..................................

கையொப்பம் : ..................................

# கூந்தல் வளர்ச்சியை தூண்டும் வெந்தயக்கீரை



தினமும் தலையில் எண்ணெய் தடவி நன்றாக வாரி, நுனிவரை பின்னல் போட்டு ரிப்பன் கட்டிக்கொள்வதால் முடி ஒரே சீராக வளர ஆரம்பிக்கும். "முடி கொட்டிவிடுமோ" என்று சரியாக வாராமல் விட்டால், முடி வலுவிழந்து வளர்ச்சி தடைப்படும். தலைமுடியை எப்போதும் நுனி வரை வாரவேண்டும்.

தலையில் வகிடு(உச்சி) எடுக்காமல் இருந்தால் முன்புற வழுக்கை விழவும், முடி கொட்டவும் ஆரம்பிக்கும். தேவையற்ற டென்ஷன்களை மனதில் ஏற்றிக்கொள்ளாமல் எப்போதும் இயல்பாக இருப்பதும் முடி உதிர்வதைத் தடுக்க உதவும். தினம் ஏதாவது ஒரு கீரையை உணவில் சேர்த்துக்கொள்ளலாம். குறிப்பாக, வெந்தயக்கீரை நல்லது.

துவையலாகவோ அல்லது சாம்பார், ரசம் இவற்றில் சேர்த்தோ சாப்பிடலாம். இதே கீரையை ஒரு கப் நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சி அதைத் தலையில் தேய்த்துச் சீயக்காய்ப் போட்டு அலசுங்கள். தலை சூப்பர் சுத்தமாகி, முடிவளர ஆரம்பிக்கும்.

அசிடிட்டி காரணமாக முடி கொட்டுவதோடு மட்டுமல்லாமல் முகத்தில் பருக்களும் வர ஆரம்பிக்கும். இந்தப் பிர்ச்சினைகளை வெந்தயக்கீரையை சாப்பிடுவதன் மூலம் போக்கமுடியும். இரத்தம் சுத்திகரிக்கப்பட்டு, முடி நன்றாக வளரத்துவங்கும். சிலருக்கு வெந்தயக்கீரை என்றாலே பிடிக்காது. அவர்கள், உருளைக்கிழங்குடன் சேர்த்துச் சாப்பிடலாம். டீன் - ஏஜில் ஈஸ்ட்ரோஜன் சுரப்பதால் தலையில் அதிகமாக எண்ணெய் சுரந்து, அடிக்கடி வியர்த்து வழியும். இதனால் தலையில் பிசுக்கு ஏற்பட்டு முடி வளர்வது தடைப்படும்.

வாரம் ஒரு முறை தலைக்கு குளிக்கும்போது, கடைசியாக வெட்டிவேர் தண்ணீரை தலைக்கு விட்டுக்கொள்ளலாம். (முதல் நாள் இரவே ஒரு லீற்றர் தண்ணீரில் வெட்டிவேரை துண்டாக்கி போட்டுவைத்து, காலையில் பயன்படுத்தலாம்.

தீவிரவாதத் தாக்குதல் நடந்த பிறகு, பா.ஜ.க அரசு தீவிரவதத் தடை சட்டம் (POTA) என்ற சட்டத்தை இயற்றியது. இந்த சட்டம் உளவு நடவடிக்கைகளை விரிவுபடுத்தியதோடு, காவல் துறைக்கும் கூடுதல் அதிகாரங்கள் வழங்கியது. இச்சட்டம் காங்கிரஸ் மற்றும் பிற கட்சிகளால் இஸ்லாமியர்களுக்கு எதிரான சட்டமாகப் பார்க்கப்பட்டது. இதனால் இந்த மசோதாவை சட்டமாக்க நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் கூட்டப்பட்டது. பின்னர் வந்த காங்கிரஸ் அரசால் இச்சட்டம் நீக்கப்பட்டது. காங்கிரஸ் அரசின் தீவிரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகள் வலுவானதாக இல்லை என்று பா.ஜ.க தொடர்ந்து விமர்சித்துவருகிறது.

### வெளியுறவுக் கொள்கை

சோவியத் ஒன்றியத்துடன் நட்புறவு பாராட்டிய காங்கிரஸ் அரசை பா.ஜ.க அடிக்கடி விமர்சித்து வந்துள்ளது. பா.ஜ.க வின் ஆட்சிக்காலத்தில் அமெரிக்காவுடனான உறவை இந்தியா பலப்படுத்திக்கொண்டது. இந்திய-அமெரிக்க உறவுகள், 2000-ம் ஆண்டு அப்போதைய அமெரிக்க அதிபரான பில் கிளிண்டனின் இந்திய வருகையின் போது மேலும் முன்னேற்றமடைந்தன. அமெரிக்காவில் செப்டம்பர் 11, 2001இல் நடந்த தீவிரவாதத் தாக்குதல்களுக்குப் பிறகு, தீவிரவாதத்தை ஒடுக்குவதிலும் அல்கொய்தா மற்றும் தலிபான் போன்ற தீவிரவாத அமைப்புகளுக்கெதிரான நடவடிக்கைகளிலும் அமெரிக்காவிற்கு இந்தியா தனது ஒத்துழைப்பை நல்கியது. இதற்குப் பிரதியாக அமெரிக்கா, இந்தியாவிற்கு முதலீடு, வர்த்தகம் மற்றும் ராணுவம் போன்ற துறைகளில் உதவியது.

இந்தியாவின் எதிரிகளாகக் கருதப்படும் பாகிஸ்தான் மற்றும் சீனா ஆகிய நாடுகளுடனான உறவுகளையும், வாஜ்பாய் பிரதமராக இருந்த போது இந்தியா மேம்படுத்திக்கொண்டது. வாஜ்பாய், 1998 இல் பாகிஸ்தான் சென்று தில்லி-லாகூர் பேருந்துப் போக்குவரத்து சேவையைத் தொடக்கிவைத்தார். 1998 அணுவெடிப்புச் சோதனைக்குப் பிறகு நலிவடைந்திருந்த இந்திய-பாகிஸ்தான் உறவுகளைப் புதிப்பித்துக்கொள்ள, இரு நாடுகளும் லாகூர் உடன்படிக்கையில் கையெழுத்திட்டன. ஆனாலும் பாகிஸ்தான் இராணுவம் இந்திய எல்லைக்குள் ஊடுருவியது.

மீண்டும் 2003ம் ஆண்டு வாஜ்பாய் போர் நிறுத்தத்தை அறிவித்து அமைதிப் பேச்சு வார்த்தைகளைத் துவக்கினார்.

### கட்சி அமைப்பு

கட்சியின் தலைவரே கட்சியில் உயர்ந்த அதிகாரம் உடையவராவார். அவரது பதவிக் காலம் மூன்றாண்டுகளாகும். அண்மையில் வெங்கையா நாயுடு மற்றும் அத்வானி ஆகியோர் இப்பதவியில் இருந்து சில சர்ச்சைகள் காரணமாக விலகினர். ராஜ்நாத் சிங் இப்பதவியில் 2006 முதல் 2009 வரை நீடித்தார். தலைவருக்கு அடுத்து துணைத் தலைவர்கள், பொதுச் செயலாளர்கள், பொருளாளர்கள் மற்றும் செயலாளர்கள் என பலர் உள்ளனர். கட்சியின் உயர்ந்த அதிகாரமுடைய அமைப்பான தேசிய செயற்குழு, நாடு முழுவதும் உள்ள பல தலைவர்களை உள்ளடக்கியது. மாநில அளவிலும் இதைப் போன்றே அமைப்புகளை பா.ஜ.க கொண்டுள்ளது.

பா.ஜ.க.வின் பல தலைவர்கள் ராஷ்டிரிய சுயம் சேவக் சங்கில் இருந்தவர்கள். விஷ்வ இந்து பரிஷத், சுவதேசி ஜகரன் மஞ்ச் போன்ற இன்ன பிற சங் பரிவார் அமைப்புகளோடு பா.ஜ.க நட்புறவு கொண்டுள்ளது.

பா.ஜ.க மகிலா மோர்ச்சா என்ற பெண்கள் அமைப்பையும், பாரதிய ஜனதா யுவா மோர்ச்சா என்ற இளைஞர் அமைப்பையும், பா.ஜ.க மைனாரிட்டி மோர்ச்சா என்ற சிறுபான்மையினர் அமைப்பையும் பா.ஜ.க உள்ளடக்கியுள்ளது.

### மாநிலங்களில் பா.ஜ.க

பா.ஜ.க, மார்ச் 2013 நிலவரப்படி ஐந்து மாநிலங்களில் (குஜராத், மத்தியப் பிரதேசம், சத்தீஸ்கர், ராஜஸ்தான் மற்றும் கோவா) பெரும்பான்மை பெற்று ஆட்சியில் உள்ளது. பஞ்சாப் மற்றும் நாகாலாந்து ஆகிய மாநிலங்களில் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இடம் பெற்றுள்ள பா.ஜ.க.வின் கூட்டணிக் கட்சிகள் ஆட்சியில் உள்ளன. ஒரிசாவை பா.ஜ.க, பாரதிய ஜனதா தளம் கட்சியுடன் இணைந்து ஆட்சி செய்தது. இதற்குமுன் பா.ஜ.க, உத்திரப் பிரதேசம், ராஜஸ்தான், அருணாசலப் பிரதேசம், உத்தராகண்ட், இமாசலப் பிரதேசம், கர்நாடகா மற்றும் ஜார்கண்ட் ஆகிய மாநிலங்களை ஆட்சி செய்துள்ளது.

### அமெரிக்க சார்பு வெளியுறவுக் கொள்கையுடன் மோடி

எவ்வாறிருந்த போதினும், மோடியின் கருத்துக்கள் உள்நாட்டு பார்வையாளர்களுக்கும் அப்பாற்பட்ட நோக்கத்தை கொண்டுள்ளது. சீனாவை மூலோபாயரீதியில் தனிமைப்படுத்த மற்றும் அதன் உயர்வை இராணுவரீதியில் தடுக்க தயாரிப்பு செய்யும் அமெரிக்க மற்றும் ஜப்பானின் உந்துதலோடு பி.ஜே.பி தலைமையிலான அரசாங்கம் மேலதிகமாக பகிரங்கமாகவும், முழுவதுமாகவும் இணைந்து நிற்கும் என்பதை அவற்றிற்கு ஒரு சமிக்ஞை காட்டுவதாக அவரது கருத்துக்கள் அமைந்திருந்தன.

இந்தியாவிற்கு வருகைதந்த அமெரிக்க தூதர் நான்சி பாவெல் உடனான அவரது சந்திப்பிற்கு ஒரு வாரத்திற்கு பின்னர் ஒருசில நாட்களில் "மோடி இந்தியாவின் தொலைதூர மற்றும் சிறிய மாநிலங்களில் மேற்கொண்ட விஜயத்தின் போது" சீனாவிற்கு எதிராக கடுமையாக சாடினார்.

அமெரிக்க அரசாங்கத்தால் ஏறத்தாழ ஒரு தசாப்தத்திற்கும் மேலாக மோடி புறக்கணிக்கப்பட்டு இருந்ததை நான்சி பாவெல் உடனான சந்திப்பு முடிவுக்கு கொண்டுவந்திருந்தது.

2011இல் மோடி முதலீட்டிற்காக தம்பட்டம் அடிக்க சீனாவிற்கு விஜயம் மேற்கொண்ட போது அவரேகூட சீன அரசாங்கத்தால் உற்சாகமாக வரவேற்கப்பட்டார். வாஷிங்டன் அதன் சீனவிரோத புவிசார் அரசியல்-இராணுவ மூலோபாயத்திற்காக இந்தியாவைக் கடிவாளமிட தீர்க்கமாக உள்ளது என்பதை பெய்ஜிங் துல்லியமாக அறிந்துள்ளதோடு, அதை தடுக்கும் நம்பிக்கையில் புதுடில்லியோடு நட்புறவை பேண முனைந்துள்ளது.

இந்தியாவின் "மூலோபாய சுய அதிகாரத்தைத்" தூக்கிப்பிடிப்பதாக வலியுறுத்தி வருகின்ற அதேவேளையில் காங்கிரஸ் தலைமையிலான அரசாங்கம் "ஓர் உலகளாவிய மூலோபாய" இந்தோ-அமெரிக்க கூட்டுறவின் பாகமாக வாஷிங்டனுடன் இராணுவ கூட்டுறவை வேகமாக விஸ்தரித்துள்ளது. மேலும் கடந்த ஆண்டில், இந்தியா அதன் பொருளாதார மற்றும் இராணுவ மூலோபாய உறவுகளை வேகவேகமாக ஜப்பானுடனும் விஸ்தரித்துள்ளது.

ஜப்பானிய பிரதம மந்திரி ஷின்ஜோ அபே 2014, ஜனவரி 26 அன்று இந்தியாவின் குடியரசு தினவிழாவில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டார். அபே தலைமையின் கீழ், ஜப்பான் இந்தியாவை தற்போதைய அமெரிக்க தலைமையிலான அமெரிக்கா, ஜப்பான் மற்றும் ஆஸ்திரேலியாவின் முத்தரப்பு கூட்டணிக்குள் ஒருங்கிணைக்க முயன்று வருகிறது மற்றும் இராணுவ - மூலோபாய ரீதியில் வாஷிங்டனை ஜப்பான் சார்ந்திருப்பதைக் குறைக்க டோக்கியோவிற்கு உதவும் வகையில் ஒரு இந்தோ-ஜப்பானிய கூட்டணியை அபிவிருத்தி செய்யவும் முயன்று வருகிறது.

### இந்து மேலாதிக்க இந்திய

மீதான அமெரிக்காவின் இராஜாங்கப் புறக்கணிப்பில் ஐரோப்பிய ஒன்றியமும் சேர்ந்திருந்தது. ஆனால் 2012இன் இறுதியில் இந்திய வணிகங்களின் மிகவும் சக்திவாய்ந்த பிரிவுகள் மோடியை அவற்றின் விருப்பமான தேசிய பிரதம மந்திரி வேட்பாளராக ஊக்குவிக்க தொடங்கியதும் அந்த நிலைமை மாறியது.

இந்திய பெருநிறுவன மேற்தட்டுகள் மத்தியில் மோடிக்கு இருக்கும் செல்வாக்கு, இந்தியா உலக பொருளாதார நெருக்கடியால் நொறுக்கப்பட்டுள்ள நிலையில், கடந்த இரண்டு ஆண்டுகளில் கூர்மையாக அதிகரித்துள்ளது. இந்தியாவின் வளர்ச்சி விகிதம் 5 சதவீதத்திற்கு கீழ் இருக்கையில், 2011இல் இருந்து அது ஏறத்தாழ பாதியாக குறைந்துள்ளது. விலை உயர்வு இரட்டை இலக்கத்திற்கு நெருக்கமாக உயர்ந்துள்ளதோடு, ரூபாய் மதிப்பு கூர்மையாக சரிந்துள்ளதோடு சேர்ந்து, அந்நாடு தேக்கநிலையில் சிக்குண்டுள்ளது.

சமூகரீதியில் பிற்போக்கான 'சந்தைசார்' சீர்திருத்தங்களின் ஒரு தொகுப்பிற்கு அழுத்தமளிக்க மற்றும் சமூக செலவினங்களின் வெட்டுக்கள் மூலமாக ஒரு பாரிய வரவு-செலவு திட்ட பற்றாக்குறையைத் தவிர்க்க பெரு வணிகங்கள் மோடியை எதிர்நோக்கி உள்ளன. இந்தியாவின் தற்போதைய கூட்டணி அரசாங்கத்தில் செல்வாக்கு பெற்ற பங்காளியாக விளங்கும் காங்கிரஸ் கட்சி, அத்தகைய அனைத்து சீர்திருத்தங்களையும் இல்லையென்றாலும், தனியார்மயமாக்கலைத் தீவிரப்படுத்துவது மற்றும் வேலைநீக்கங்கள், ஆலை மூடல்களின் மீதிருக்கும் கட்டுப்பாடுகளை வெட்டுவது உட்பட பெரும்பாலானவற்றை ஆதரிக்கிறது. ஆனால் பரந்த மக்கள் எதிர்ப்பின் முன்னால் அதனால் அவற்றை நடைமுறைப்படுத்த முடியவில்லை.

2001இல் இருந்து குஜராத் முதல் மந்திரியாக இருந்துவரும் மோடி முதலீட்டாளர்களுக்கு வரி, நிலம் மற்றும் ஏனைய விட்டுக்கொடுப்புகளை வாரி வழங்கியும், வேலை

திட்டமிட்டு என்கவுண்டர் செய்வது, அதாவது கூடுதல் அதிகாரத்தைக் கொண்டு சுட்டுக்கொல்வதில் உடந்தையாய் இருக்கும் பாதுகாப்பு படைகளை அவர் பலமாக பாதுகாத்துள்ளார் என்பதோடு பாகிஸ்தான் மற்றும் சீனாவை காங்கிரஸ் அரசாங்கம் 'சாந்தப்படுத்துவதற்காக' அவர் வழக்கமாக குற்றஞ்சாட்டிவருகிறார்.

இந்தியாவை ஒரு மலிவு- உழைப்பு தளமாக மற்றும் சீனாவிற்கு எதிராக மூலோபாய ரீதியிலான கூட்டாளியாக அபிவிருத்தி செய்ய அமெரிக்காவும், ஐரோப்பிய ஒன்றியமும் அவற்றின் முயற்சிகளைத் தீவிரப்படுத்துவதற்காக மோடி தலைமையிலான அரசாங்கத்தோடு வேலைசெய்ய அவை தயாராக இருப்பதை சமிக்ஞை காட்டிவருகின்ற அதேவேளையில், மிகவும் உணர்ச்சிகரமான சர்வதேச முதலாளித்துவ விமர்சகர்களும், மூலோபாயவாதிகளும் மோடி தலைமையிலான பி.ஜே.பி.க்கு இருக்கும் வாய்ப்பின்மீது எச்சரிக்கையை வெளிப்படுத்தி வருகின்றனர்.

அதுபோன்றவொரு அரசாங்கம் அதனாலேயே கட்டுப்படுத்த முடியாத சமூக எதிர்ப்பைக் கட்டவிழ்த்துவிடும் என்றும், அது அதிகாரத்திற்கு வருவதை பாகிஸ்தான் மற்றும் சீனா ஒரு ஆத்திரமூட்டும் விடயமாக பார்க்கக்கூடும் என்றும் அவர்கள் அஞ்சுகின்றனர்.

இலண்டனை மையமாக கொண்ட பைனான்சியல் டைம்ஸ் குறிப்பிடுகையில், காங்கிரஸின் துணைத் தலைவரும் காந்தி-நேரு குடும்ப அரசியல் வம்சத்தின் வாரிசுமான ராகுல் காந்தி அல்லது மோடியை இந்தியர்கள், இந்தியாவின் அடுத்த பிரதம மந்திரியாக தேர்ந்தெடுக்க வேண்டி உள்ளது ஒரு பரிதாபகரமானதாகும் என்று குறிப்பிட்டது. அது குஜராத் முதல் மந்திரியை மோசமான காலகட்டத்தில் விரக்தியின் பிம்பமாக வர்ணித்தது.

**மோடி பிரதமரானால் மேலும் வலுவான, அமெரிக்க மற்றும் ஐரோப்பிய சார்பு நாடாக இந்திய மாறலாம். அத்துடன் இந்திய - சீன - அமெரிக்க - ஐரோப்பிய பொருளாதார உறவு தனியார் துறையின் செல்வாக்கில் அதிகம் தங்கியுள்ளது. அதனால் தனியார் துறையை ஆதரிக்கும் மோடியின் சீன எதிர்ப்பு உணர்வு, காங்கிரஸ் ஆட்சியில் இருப்பது போலவே அவர் பதவிக்கு வந்தபின் தனித்தேயிருக்கும். நேபாளம், பூட்டான், பங்களாதேஷ் இலங்கை ஆகிய நாடுகளுடனான வெளியுறவுக் கொள்கையை விடயத்திற்கு விடயம் என்றரீதியில் அவ்வப்போது மீள்நிர்ணயம் செய்வதில் மோடி ஆர்வம் கொள்வார் எனத்தெரிகிறது. தென்னாசியாவின் சிறிய நாடுகளை பிராந்திய வல்லரசுவாத உணர்வுடனே மோடி அரசாங்கம் அனுகுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் உள்ளன.**

### பிரதம மந்திரி வேட்பாளருடன் வியாபாரம் செய்ய அமெரிக்கா தயாராகிறது

இந்தியாவிற்கான அமெரிக்க தூதர் 2014 பெப்ரவரியில் குஜராத் முதல்மந்திரியும், பாரதீய ஜனதா கட்சியின் (பி.ஜே.பி) பிரதம மந்திரி வேட்பாளருமான நரேந்திர மோடியை சந்தித்தார்.

அது தேர்தலுக்கு முந்தைய வழக்கமான சந்திப்பின் ஒரு பாகமாக நடந்ததாக அறிவித்து, ஒபாமா நிர்வாக அதிகாரிகள் அந்த சந்திப்பின் முக்கியத்துவத்தை குறைத்துக் காட்ட முயன்றுள்ளனர். ஆனால் அது இந்தியாவில் பரவலாகவும், மிகச் சரியாகவும் அமெரிக்க கொள்கையில் வெளிப்பட்ட ஒரு மாற்றமாக, இந்த ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் நடத்தப்படும் தேசிய தேர்தல்களுக்குப் பின்னால் "ஒரு பரம வகுப்புவாதியும், ஒரு சர்வாதிகாரியாக ஆகக்கூடிய" மோடி இந்தியாவின் பிரதம மந்திரியானால் அவருடன் இணைந்து வேலை செய்ய வாஷிங்டன் ஆயத்தமாகி இருப்பதற்கான சமிக்ஞையைக் குறிப்பதாக இந்திய இடதுசாரி ஆய்வாளர்களால் கூறப்பட்டது.

2002 குஜராத் படுகொலையில் மோடி அரசியல்ரீதியான மற்றும் குற்றத்தனமான பொறுப்பு வகித்தார் என்பதற்கு அங்கே சர்ச்சைக்கு இடமற்ற ஆதாரம் உள்ளது. பெரும் எண்ணிக்கையிலான இந்து அடிப்படைவாத காரியஸ்தர்கள் கொல்லப்பட்ட ஒரு ரயில் விபத்திற்கு அவர் அம்மாநில முஸ்லீம்களைக் குற்றஞ்சாட்டியதோடு, ஒரு மாநிலந்தழுவிய 'எதிர்ப்பு நாளை' அறிவித்தார், மற்றும் கலகங்கள் வெடித்த போது பொலிஸை ஒதுங்கியிருக்க உத்தரவிட்டார். மோடியின் மந்திரிகளில் ஒருவரும், அவரால் பாதுகாக்கப்பட்டவர்களில் ஒருவருமான மாயா கோத்னானிமீது கொலை குற்றத்திற்கான தீர்ப்பு வழங்கப்பட்டது.

இருந்தபோதிலும், குற்ற விசாரணையில் இருந்து மோடி தப்பித்துள்ளார். மேலும் நீதிமன்றங்கள், பொலிஸ் மற்றும் காங்கிரஸ் கட்சி தலைமையிலான மத்திய அரசாங்கத்தின் கோழைத்தனமும் மற்றும் அவை உடந்தையாய் இருந்ததாலும் அவர் தலைமையிலான மாநில அரசாங்கம் தொடர்ந்து பதவியில் இருக்க முடிந்துள்ளது. மோடிக்கு எதிரான குற்றச்சாட்டுக்களுக்கு போதிய ஆதாரமில்லை எனக்கூறி 2012இல் இந்திய உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

ஏறத்தாழ ஒரு தசாப்த காலமாக மோடி

நிறுத்தங்களை உடைத்தும், சுற்றுச்சூழல் மற்றும் ஏனைய பிரச்சினைகளை எதிர்கொண்டிருந்த போதினும் பெருநிறுவன அபிவிருத்தி திட்டங்களுக்கு வேகமாக ஒப்புதல்கள் வழங்க நிர்ப்பந்தித்தும், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பெரு வணிகங்களுக்கான கையாளாக செயற்பட்டுள்ளார்.

இந்தியாவிற்கான அமெரிக்க தூதர் 2014 பெப்ரவரியில் குஜராத் முதல்மந்திரியும், பாரதீய ஜனதா கட்சியின் (பி.ஜே.பி) பிரதம மந்திரி வேட்பாளருமான நரேந்திர மோடியை சந்தித்தபொழுது, இந்தியா மற்றும் அமெரிக்கா, ஆப்கானிஸ்தான் இடையிலான இராணுவ - மூலோபாயம் மற்றும் பொருளாதார கூட்டுறவு உட்பட பலதரப்பட்ட பிரச்சினைகளை அவர்கள் விவாதித்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

1998இல் இருந்து 2004 வரையில் பி.ஜே.பி தலைமையிலான அரசாங்கம் ஆட்சியில் இருந்த போது அமெரிக்க-இந்திய மூலோபாய கூட்டுறவிற்கு 'பலமான அஸ்திவாரங்கள்' அமைக்கப்பட்டதை அவர் குறிப்பிட்டு காட்டியதாக மற்றும் இந்தோ - அமெரிக்க உறவுகளை மேலும் வலுப்படுத்தும் அவரது கட்சியின் நோக்கத்தை வலியுறுத்தியதாக மோடியின் ஆதரவாளர்கள் தெரிவித்தனர்.

'பயங்கரவாதத்திற்கு எதிரான ஒரே உலகளாவிய அளவுகோலை' பயன்படுத்த அவர் அழுத்தம் கொடுத்திருப்பார் என்றும் கூறப்படுகிறது. இந்தியா வசமுள்ள காஷ்மீரில் ஏற்படும் கிளர்ச்சிகளுக்கு இஸ்லாமாபாத் அளித்துவரும் ஆதரவிற்கு பழிக்கு பழி வாங்க, எல்லை தாண்டிய வேட்டைகளை நடத்துவது உட்பட பாகிஸ்தானுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதில் அமெரிக்கா இந்தியாவைத் தடுத்துள்ளதாக பி.ஜே.பி நீண்டகாலத்திற்கு முன்னரே குறைகூறி உள்ளது.

எனினும், மோடியை இந்தியாவின் அடுத்த பிரதம மந்திரியாக தழுவுவதற்கான பரந்த பெரு வணிக அடுக்குகள் தயாராக இருப்பது, முதலாளித்துவ நெருக்கடியின் தாக்கத்தின்கீழ் அவர்கள் பிற்போக்குத்தனமான மற்றும் சர்வாதிகார ஆட்சி முறைகளுக்கு திரும்புகிறார்கள் என்பதை அடிக்கோடிடுகிறது. வகுப்புவாதம் மற்றும் பெரு வணிக நலன்களை அவர் ஊக்குவிப்பதற்கு அப்பாற்பட்டு, மோடி அவரது வார்த்தைகளில் இராணுவம் மற்றும் தேசிய பாதுகாப்பு உபகரணங்களுக்கு காட்டும் ஆதரவிற்காகவும் இழிபெயர் பெறுகிறார்.

### "மோடி இந்தியாவைக் காப்பாற்றுவாரா அல்லது சிதைப்பாரா?"

"நரேந்திர மோடியைக் குறித்து இந்திய முஸ்லிம்கள் அஞ்சுவதற்கு காரணங்கள் உள்ளன" என்ற தலைப்பில் எக்கோனோமிஸ்ட் இதழின் சமீபத்திய பிரசுரம் ஒரு தலையங்கம் வெளியிட்டது. முதலாம் உலக யுத்தத்தின் நூற்றாண்டைக் குறிக்கும் விதத்தில் அதற்கடுத்த வாரம் வெளியான ஒரு தலையங்கம், "முஸ்லீம்களுக்கு எதிரான ஒரு படு கொலைக்காக அவர்களைச் சாந்தப்படுத்த மறுக்கும் ஒரு இந்து தேசியவாதிக்கான" வாய்ப்பு என்பது "பாகிஸ்தானில் உள்ள அவர்களின் அண்டை நாட்டு முஸ்லீம்களோடு ஓர் அணுஆயுத மோதலுக்கான விசையின் மீது அவரது விரலை வைத்திருப்பதைப்" போன்றது என்று குறிப்பிட்டது.

பாரதிய ஜனதாக் கட்சியின் நரேந்திர மோடி இந்தியாவின் பிரதமராகுவாரா என்பது இந்திய பொதுத் தேர்தலின் முடிவுகள் இன்னும் சில நாட்களில் வெளியாகியபின் தெளிவாகும். அவர் பிரதமரானால் மேலும் வலுவான, அமெரிக்க மற்றும் ஐரோப்பிய சார்பு நாடாக இந்திய மாறலாம். அத்துடன் இந்திய - சீன - அமெரிக்க - ஐரோப்பிய பொருளாதார உறவு தனியார் துறையின் செல்வாக்கில் அதிகம் தங்கியுள்ளது. அதனால் தனியார் துறையை ஆதரிக்கும் மோடியின் சீன எதிர்ப்பு உணர்வு, காங்கிரஸ் ஆட்சியில் இருப்பது போலவே அவர் பதவிக்கு வந்தபின் தணிந்தேயிருக்கும்.

ஆனால் பாகிஸ்தான் - இந்திய உறவு மோடியின் எதிர்கால நகர்வால் பாதிப்படையும். இதற்கு மோடியின் காஷ்மீர் தொடர்பான நிலைப்பாடும் பாகிஸ்தான் தீவிரவாதிகளின் ஊடுருவலை அவர் வெறுக்கும் விதமும் காரணங்களாகும்.

நேபாளம், பூட்டான், பங்களாதேஷ், இலங்கை ஆகிய நாடுகளுடனான வெளியுறவுக் கொள்கையை விடயத்திற்கு விடயம் என்றரீதியில் அவ்வப்போது மீள்நிர்ணயம் செய்வதில் மோடி ஆர்வம் கொள்வார் எனத்தெரிகிறது. தென்னாசியாவின் சிறிய நாடுகளை பிராந்திய வல்லரசுவாத உணர்வுடனே மோடி அரசாங்கம் அணுகுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் உள்ளன.

**கிழக்கான்**

கிழக்கிலும் தோற்றுவிக்கப்படும் பாதுகாப்பற்ற சூழலுக்கு யார் காரணம் என்பதே இப்போதைக்கான கேள்வியாகும். மக்கள் சில முடிவுகளைத் தாமாகவே தான் எடுத்துக்கொள்வார்கள் என்பது சூழலைப் பொறுத்தது.

மக்களின் பாதுகாப்பு என்பது பாதுகாப்புத் தரப்பினரின் கைகளில் உள்ளது என்றாலும் மக்களும் அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும். அப்போதுதான் அது முழுமையான சாத்தியமுடையதாக இருக்கும்.

# கிழக்கிலும் தேடுதல் விஷமிகளின் நோக்கம் என்ன ?

அந்தவகையில், திருகோணமலையில் கடந்த வாரத்தில் நடைபெற்ற சில சம்பவங்கள் மக்கள் மத்தியில் இருக்கும் அச்சத்தை மேலும் அதிகமாக்குவதாகவே இருக்கிறது.

இந்த மாதம் 06ஆம் திகதி கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை மாவட்டத்தின் வெருகல் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பல கிராமங்கள் செவ்வாய் அதிகாலை முதல் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

06ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலை 2 மணி தொடக்கம் இராணுவத்தினர் சுற்றிவளைத்து தேடுதலில் ஈடுபட்டனர். 15 வயதிற்கு மேற்பட்டவர்களை தாங்கள் விசாரிக்கப்போவதாகவும் இதற்கு பொதுமக்கள் தங்கள் ஒத்துழைப்பை வழங்குமாறும் படையினர் ஒலிபெருக்கிமூலம் அறிவித்தல் விடுத்ததன் பின்னர் இந்த சுற்றிவளைப்பு இடம்பெற்றிருந்தது.

இதில், இலங்கைத்துறை, ஈச்சிலம்பற்று, புன்னையடி, கல்லடி இலங்கைத்துறை முகத்துவாரம் போன்ற கிராமங்கள் இந்த சுற்றிவளைப்புக்கு உள்ளாகியது. அே-தநேரம் பலரை மாலைவரை தடுத்து வைத்து படையினர் விசாரணை செய்ததாகவும் சில தகவல்கள் வெளியாகியிருந்தன.

அதேநேரம், அதற்கு முதல் நாள் இலங்கைத்துறை கடற்கரைப் பகுதியில் சிலர் சந்தேகத்திற்கிடமாக நடமாடியதாகவும் உடனடியாக அந்தப் பகுதியை சுற்றிவளைத்து தேடுதல் நடத்தியபோது ரீ-56 ரக துப்பாக்கி ஒன்று, 2 மகஸின்கள், 78 தோட்டாக்கள் என்பனவும் கைப்பற்றப்பட்டதாகவும் கடற்படைத் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இருந்தாலும், வெருகல் ஆறு கடற்படை முகாமில் கடமையாற்றும் வீரரொருவரின் மீது தாக்குதல் நடத்தியதுடன் ரி-56 ரக துப்பாக்கியை அவ்விடத்திலேயே போட்டுவிட்டு தப்பியோடிய மூவரை கைது செய்யும் நோக்கிலேயே தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாக கடற்படை அறிவித்தது. பொலிஸ், இராணுவம் மற்றும் கடற்படை ஆகியன இணைந்தே இந்த தேடுதல் நடவடிக்கையை வெருகல் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பல கிராமங்களில் முன்னெடுத்ததாக கடற்படையினர் தெரிவித்தனர்.

ஆனாலும், சந்தேகத்திற்கிடமான முறையில் நடந்துகொண்ட மூவரிடமிருந்த பையை சோதனைக்கு உட்படுத்த முயன்றபோதே அந்த வீரரை தாக்கிவிட்டு பையையும் அவ்விடத்திலேயே போட்டுவிட்டு தப்பியோடியதாக கடற்படை மேலும் தகவல் தெரிவித்திருந்தது.

இருந்தாலும் இதன் உண்மை நிலவரம் அதனை நடத்தியவர்களுக்கே வெளிச்சம். வெருகல் ஆற்றுப் பகுதி புலிகளுடன் இடம்பெற்ற யுத்தத்தின்போது வெருகல் ஆறு பகுதி கருணா அம்மாவின் கட்டுப்பாட்டில் இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

கிழக்கு மாகாணம் விடுதலைப் புலிகளிடமிருந்து மீட்கப்பட்டது முதல் இன்னமும் சம்பூர், மூதூர் மக்கள் அகதி வாழ்க்கையையே வாழ்ந்துவருகிறார்கள். எந்தவித காரணமும் இல்லாமல் அவர்கள் அகதி முகாம்களில் தங்க வேண்டிய நிலை ஏன் உருவாக்கப்பட்டது என்பது ஒரு கேள்வியாகவே இருந்து வருகிறது. யாரும் தம்முடைய வரலாற்றுப் பாரம்பரியமான நிலப்பரப்பை விட்டுவிட்டு இருப்பதற்கு விருப்பப்படுவதில்லை. அந்தவகையில் சம்பூர் மக்கள் தம்முடைய பாரம்பரிய நிலங்களில் வாழ்வதற்கே வேண்டி நிற்கிறார்கள்.

அந்த சம்பூர் மக்கள் 4 அகதி முகாம்களில் தற்போதும் நிர்க்கதியான நிலையிலேயே தங்கியுள்ளனர். கடுமையான வெயிலில் அந்த மக்கள் தகரங்களுக்கு கீழே இருப்பதால் அந்த முகாமிலுள்ள பலருக்கு அம்மை நோய் ஏற்பட்டுள்ளது. இங்கு குடியிருக்க முடியாமல் பல கஷ்டங்களை அனுபவிக்கின்றனர்.

மூதூரிலுள்ள வைத்தியசாலைக்குச் சென்றால், சம்பூர் அகதி முகாம்களிலுள்ள பலர் இந்த நோய்க்கு ஆளாகி வைத்தியசாலைக்கு வருவதாக வைத்தியர்கள் குறிப்பிடுகின்றனர். தங்களுக்கு எந்தவொரு உதவியும் வேண்டாம் எங்களை எமது சொந்த இடங்களுக்கு அனுப்பினால் எங்களுடைய அரைவாசி வருத்தம் குறைந்துவிடும் என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

700 குடும்பங்களைச் சேர்ந்த 3000பேர் இந்த அகதி முகாம்களில் வசித்து வருகின்றனர். இந்த முகாம்களுக்கு எந்தவொரு அரசசார்பற்ற நிறுவனமும் உத்வி செய்வதற்கு போகமுடியாது. பல்கலைக்கழக மாணவர்களுக்கு உதவவோ, பாடசாலை செல்லும் மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கவோ முடியாத நிலை இங்குள்ளது. மீன் வியாபாரியோ, உடுதுணிகள் விற்பனைசெய்யும் வியாபாரியோ இந்த முகாமுக்கு செல்ல முடியாதநிலை உள்ளது. 12 கிலோமீற்றர் தூரம் சைக்கிளில் சென்று மீனவர்கள் மீன்பிடிக்க வேண்டியுள்ளது. சம்பூர் மக்களின் சொந்த நிலத்தை அவர்களுக்கு வழங்க வேண்டியது அவசியமாகும்.

இந்த நிலையில் திருகோணமலையின் வெருகல் பிரதேசம் கடுமையான சோதனைக்குள்ளாவதற்கு யார் காரணமாக இருந்தார்கள் என்பது தெரியாவிட்டாலும், வடக்கில் கிளிநொச்சியில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தினை அடுத்து நடைபெற்றது போன்றதொரு நிகழ்வு கிழக்கில் நடந்துவிடக்கூடாது.

வடக்கைப் போலல்லாமல் கிழக்கு மாகாணமானது மூன்று இனங்களும் சம அளவுகளில் சேர்ந்து வாழும் பிரதேசமாகத் திகழ்கிறது. இதற்குக் காரணம் கடந்த கால குடியேற்றங்களாகவும் இருக்கலாம் என்பது ஒரு சிலரது கணிப்பீடு. வடக்கு கிழக்கு பிரதேசத்தில யுத்தம் நடைபெற்ற வேளைகளில் கிழக்கின் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களில் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த மக்கள் வாழ்ந்த பிரதேசங்களில்கூட கடுமையான தாக்குதல்கள் நடத்தப்பட்டு முழுமையாக வெளியேற்றப்பட்டே புலிகள் ஒழிக்கப்பட்டனர்.

அந்தவேளைகளில் திருகோணமலை மாவட்ட மக்கள் தமது சொந்த இடங்களில் இருந்து உயிரை மட்டும் கைகளில் பிடித்துக் கொண்டு வெளியேறி மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் தற்காலிகமாகத் தங்கியிருந்தனர். அவ்வேளைகளில் அவர்கள் பட்ட துன்பங்கள் கொஞ்சமல்ல, அதே போன்று மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரைப் பிரதேச மக்கள் ஆட்லறி, மற்றும் தாக்குதல்களால் முழுமையான துடைக்கப்பட்டு வெளியேற்றப்பட்டே மீளக் குடியேற்றப்பட்டனர்.

30 வருங்களுக்கும் மேலாக பல இடம்பெயர்வுகளைச் சந்தித்த மக்கள் இறுதியில் கொடுமையான இடப்பெயர்வைச் சந்தித்தனர். பின்னர் அவர்கள் குடியேற்றப்பட்டாலும், அவர்களுடைய இடங்களில் இருந்த பாவனைப் பொருள்கள் கூட இல்லாத நிலை அவர்களுக்கு ஏற்பட்டது. ஆனாலும் திருகோணமலை மாவட்டத்தின் சம்பூர் மக்கள் அனைவரும் தம்முடைய சொந்த இடங்களில் குடியேற முடியாத நிலை தோன்றியது. அது இன்னமும் தீரவில்லை.

அதற்கு சம்பூர் அதியுயர் பாதுகாப்பு வலயமாக மாற்றப்பட்டது காரணமாகச் சொல்லப்பட்டாலும், இன்னமும் அதற்கான எந்த ஏற்பாடும் இல்லை என்றாலும், தாக்குதல் நடத்தப்பட்டது வேறு காரணத்துக்காக இருந்தாலும், பின்னர் அது பொருளாதார மேம்பாட்டுக்குரிய பிரதேசமாகவே அறிவிக்கப்பட்டது. ஆனாலும் அதற்கான எந்த வேலைகளும் இதுவரை நடைபெறவில்லை என்பது அந்த மக்களது கேள்வியாக இருக்கிறது. அதனையும் தாண்டி அவர்களது வேண்டுகோள் தேவைக்குரியதை எடுத்துவிட்டு மிகுதியான நிலப்பரப்பில் எங்களை குடியமர விடுங்கள் என்பதாகவே இருக்கிறது.

இந்த குடியமர்த்தப்படாத மக்களுக்கு கடந்த பல வருடங்களாக எந்தவிதமான உதவிகளும் வழங்கப்படவில்லை. அது நிறுத்தப்பட்டு மேலும் இன்னல்களில் விடப்பட்டுள்ளனர் என்றே அவர்கள் சொல்கின்றனர்.

யாரையும் சிரமப்படுத்தி அவர்களுடைய தேவைகளை இல்லாமல் செய்துவிடலாம் என்ற விடயத்தில் இந்த இடத்தில் மக்களிடம் தோற்றுப்போக வேண்டிய நிலை உருவாகியிருக்கிறது. சாதாரணமாக எல்லாவிதமான மகிழ்ச்சிகளையும் அனுபவித்துக் கொண்டிருந்தவர்களுக்கு சிரமங்களையும் கட்டாயங்களையும் கொடுத்து பணியவைத்துவிடலாம் என்றாலும், சம்பூர் மக்களைப் பொறுத்தவரையில் இது சாத்தியப்படாமல் போனதற்கு அவர்கள் இதற்குமுன்னர் அனுபவித்த கொடுமைகள் உதவியாக இருக்கின்றன.

இவ்வாறு திருகோணமலை மாவட்டத்தினைப் பொறுத்தவரையில் பல இன்னல்கள் சார்ந்த பிரச்சினைகள் தொடர்ந்துகொண்டிருக்கையில் இப்போது உருவாக்கப்பட்டிருக்கும் சில விசமிகளின் செயல் காரணமாக மேலும் மேலும் சாதாரண மக்களே பாதிக்கப்படப் போகின்றனர் என்பதே வெளிச்சம்.

இவ்வாறான செயல்கள் மக்களை பாதிக்காத வகையில் பார்த்துக் கொள்ள வேண்டியது பாதுகாப்புத் தரப்பினரின் வேலையாக இருக்கிறது. திருகோணமலைதான் இலங்கையில் நடைபெற்ற யுத்தத்தினை முடிவுக்கு கொண்டுவர மாவிலாறிலிருந்து தொடக்கத்தைத் தந்திருந்தது. ஆனாலும் திருகோணமலையில் ஏற்பட்டிருக்கும் பாதுகாப்பைக் கேள்விக்குள் நிறுத்தும் விடயம் கடந்த வாரத்துடன் முடிந்துபோனதாகவே இருக்கட்டும் என்பது மக்களது மனக் குமுறலாகும்.

# கிளின்டனின் நாடகத்தை அம்பலமாக்கும் மோனிகா

பில் கிளின்டன் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்தபோது, அவருடன் செக்ஸ் சர்ச்சையில் அடிபட்ட மோனிகா லெவின்ஸ்கி, அந்த விவகாரத்தில் நிஜமாக என்ன நடந்தது என்பதை, சஞ்சிகை ஒன்றின் அடுத்த இதழில் இருந்து தொடராக எழுதவுள்ளார். அமெரிக்க வெள்ளை மாளிகையில் 1990களில் பில் கிளிண்டன் அதிபராக இருந்தபோது, சக்தி வாய்ந்தவராக வளைய வந்த அவரின் உதவியாளர் மோனிகா லெவின்ஸ்கி.

தற்போது 40 வயதாகும் மோனிகா, Vanity Fair சஞ்சிகையின் அடுத்த இதழில் இருந்து இந்த வாழ்க்கை தொடரை எழுத தொடங்குகிறார்.

premium-id இந்த தொடர் பற்றிய சில ஹைலைட்டுகளை ஏற்கனவே அந்த சஞ்சிகை வெளியிட்டுள்ளது. அதில் மோனிகா, "பில் கிளின்டன் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த போது, என்னை உபயோகித்துக் கொண்டார் என்பது உண்மைதான். அவரது பதவியை (ஜனாதிபதி) அதற்காக அவர் உபயோகித்துக் கொண்டார்.

ஆனால், அந்த செக்ஸ் விவகாரத்தால் எனக்கு ஏற்பட்ட பாதிப்பைவிட, அதன்பின்னர் ஏற்பட்ட பாதிப்பே அதிகம்.

இந்த விவகாரம் வெளியாக போகிறது நிலையில், ஜனாதிபதியின் ஆட்கள் அதை தடுப்பதற்காக எனக்கு ஏற்படுத்திய பாதிப்பும், எதிர்க்கட்சியினர் தமது அரசியலுக்காக என்னை உபயோகித்துக்கொண்டதால் ஏற்பட்ட பாதிப்புமே அதிகம் என்று எழுதியுள்ளார்.



இவர் இப்படி எழுதியுள்ளதால், வரப்போகும் தொடரில் பரபரப்பான "திரைக்குப் பின்..." அரசியல் சம்பவங்கள் இடம் பெறலாம் எனப் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த தொடர் பற்றிய பரபரப்புக்கு மற்றொரு காரணம், அமெரிக்காவில் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் பில் கிளிண்டனின் மனைவி ஹிலாரி கிளின்டன் போட்டியிட ஆயத்தமாகிறார். அப்படியான நிலையில் இந்த தொடர், அவரது ஜனாதிபதி ஆசைக்கு உலை வைக்குமா என்று தெரியவில்லை. தொடரில் மோனிகா என்ன எழுதப் போகிறார் என்பதில்தான் அது தங்கியுள்ளது.

இந்த செக்ஸ் விவகாரம் 1990-களில் நடைபெற்றது என்றாலும், ஜனாதிபதி தேர்தல் என்று வரும்போது அதனால் பாதிப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றே வாஷிங்டன் போஸ்ட் உட்பட பிரபல மீடியாக்களில் அரசியல் ஆய்வாளர்கள் எழுதிவருகிறார்கள்.

இவ்வளவு ஆண்டுகள் கழித்து, இந்த விவகாரத்தை ஒரு தொடராக எழுத மோனிகா கிளம்பியுள்ளார் என்றால், அதன் பின்னணியில் "ஏதோ" விவகாரம் உள்ளது என்று அடித்துச் சொல்லலாம்.

எதற்கும், Vanity Fair சஞ்சிகையின் அடுத்த இதழ் வரட்டும், மோனிகா என்ன எழுதுகிறார் பார்க்கலாம்.

# உறவுக்குள் மணம் முடித்தால் பாதிப்பு!

தலசீமியா நோய் குழந்தைகளுக்கு பிறவியிலேயே வருகிறது. தலசீமியா பாதித்த குழந்தைகளின் இரத்தத்தில் ஹீமோகுளோபின் அளவு குறைவாக இருக்கும்.

இந்நோய் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, தலசீமியா நோய் என்பது குழந்தைகளுக்கு பிறவியிலேயே ஏற்படும் ஒருவிதமான இரத்தச்சோகையாகும். தலசீமியா பாதித்த குழந்தைக்கு இரத்தத்தில் ஹீமோகுளோபின் அளவு குறைவாக இருக்கும். இதனால், சுவாசிக்கும் ஒட்சிசன் நுரையீரலில் இருந்து மற்ற பகுதிகளுக்கு செல்வதில் தடை ஏற்படுகிறது.

அதற்காக, குழந்தைக்கு ஹீமோகுளோபின் அளவை அதிகரிக்க 6ஆவது மாதத்தில் இருந்து ஒவ்வொரு மாதமும் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து இரத்தம் ஏற்றிக் கொண்டே இருக்கவேண்டும். குழந்தைக்கு மாதம் மாதம் இரத்தம் ஏற்றுவதால், உடலில் பலவிதமான பிரச்சினைகள் வருகின்றன. மேலும் இரும்புச்சத்து அதிகரிப்பதால் மஞ்சள் காமாலை உள்ளிட்ட பல தீவிர நோய்களும் வருவதற்கு வாய்ப்புள்ளது.

அம்மா, அப்பா வம்சாவழியில் யாருக்காவது தலசீமியா நோய் இருந்தால் குழந்தைக்கும் இந்நோய் வருகிறது. முக்கியமாக சொந்த உறவுகளில் திருமணம் செய்வதால் குழந்தைகள் தலசீமியா நோயினால் பாதிக்கப்படுகின்றனர்.

அதனால், பெண்கள் கர்ப்ப காலத்தில் பரிசோதனை செய்து கருவில் இருக்கும் குழந்தை தலசீமியா நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதா என்பதை கண்டு பிடிக்கலாம்.

தலசீமியா பாதிப்பு இருப்பது உறுதி செய்யப்பட்டால், குழந்தை வேண்டாம் என நினைப்பவர்கள் கருக்கலைப்பு செய்துவிடலாம்.

குறைபாட்டுடன் குழந்தையை பெற்றுக்கொண்டு வாழ்நாள் முழுவதும் கஷ்டப்படுவதைவிட, கருக்கலைப்பு செய்து விடுவது நல்லது. தலசீமியா நோய்க்கு எலும்பு மஜ்ஜை மாற்றுஅறுவைச் சிகிச்சையே சிறந்த தீர்வாகும்.


# தோள் மூட்டு வலிக்கிறதா?



இருபது சதவீத நீரிழிவு நோயாளிகள் தோள்பட்டை வலியால் அவதிப்படுகின்றனர். அதற்கு காரணம், நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கு சுற்றுப்பட்டை தசையில் செல்லும் இரத்தப்போக்கு குறைவதே காரணம். எனவே முதல் சிகிச்சை நீரிழிவு நோயை கட்டுப்பாட்டில் கொண்டுவருவதாகும். இவ்வாறு செய்வதால் நோய் மோசமாவதை தடுக்கலாம்.

நீரிழிவு நோய் கட்டுப்பாட்டிற்கு பின்னும் வலி தொடர்ந்து இருப்பவர்களுக்கு, மூட்டு நுண்துளை சிகிச்சையில், வானொலி அதிர்வு அலைகள் கொண்ட கருவிகள் மூலம், உள்ள நவீன சிகிச்சை அளித்தால் தோள்மூட்டு வலி குணமாகும்.

# வலுவிழக்கும் எதிர்ப்பு மாத்திரைகள்...



உலகம், அன்ரிபயோடிக்ஸ் எனப்படும் நோய் எதிர்ப்பு மருந்துகளின் காலத்துக்குப் பிந்தைய ஒரு காலத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது என்று உலக சுகாதார நிறுவனம் எச்சரித்திருக்கிறது. இத்தகைய ஒரு காலகட்டத்தில், மக்கள் சாதாரண தொற்றுக்களாலும், சிறிய காயங்களாலும் உயிரிழக்கக்கூடிய ஒரு நிலை மீண்டும் உருவாகும்நிலை வரலாம் என்று அது கூறுகிறது.

சூப்பர் பக்ஸ் எனப்படும் நோயை உண்டாக்கும் கிருமிகள், உருமாறி, மிகவும் சக்திவாய்ந்த அன்ரிபயோடிக்ஸ்களிடமிருந்துகூட தப்பித்துக்கொள்ளும் நிலையை எட்டியிருப்பதாகவும், இது இப்போது உலக அளவில் ஒரு பெரும் அச்சுறுத்தலைத் தோற்றுவிப்பதாகவும், உலக சுகாதார நிறுவனம், அன்ரிபயோடிக்ஸ் செயலற்றுப்போகும் நிலை குறித்து வெளியிட்டுள்ள முதல் உலகளாவிய அறிக்கையில் கூறுகிறது.

இத்தகைய நோய் எதிர்ப்பு மருந்துகளை தேவைக்கதிகமாக பரிந்துரைப்பதும், நோயாளிகள் இத்தகைய மருந்துகளை உட்கொள்ளப் பரிந்துரைக்கப்பட்ட காலம் முழுவதும் உட்கொள்ளாமல் இடையில் நிறுத்துவது போன்ற, துஷ்பிரயோகங்களும் இதற்குக் காரணம் என்று அது கூறியது.

இதனால் இந்த நோய் எதிர்ப்பு மருந்துகள் செயலிழப்பது என்பது, எதிர்பார்த்ததைவிட மிகவும் வேகமாக நடந்துகொண்டிருக்கிறது என்று அது கூறியது. புதிய நோய் எதிர்ப்பு மருந்துகள் விரைவாக உருவாக்கப்படவேண்டும் என்று கூறும் உலக சுகாதார நிறுவனம், இவைகள் எப்படிப் பயன்படுத்தப்படுகின்றன என்பதைப் பார்க்க, மேலும் சிறந்த கண்காணிப்பு முறைகள் அவசியம் என்று கூறுகிறது.







"அம்மா அம்மா... அண்ணா! அண்ணா...!" என்று அழைத்தபடி வீட்டினுள் நுழைந்தாள் கமலா. "யாரையும் காணோம்? எங்க போய்த் தொலஞ் சாங்கனு தெரியலையே" என்ற

# மனநிறைவு



இ.சாக்குலின் சுபாசினி

முணுமுணுத்துக்கொண்டே தான் வீட்டின் பின்புறமுள்ள கொல்லைப் பக்கமாக வந்த கமலாவைப் பார்த்து வாம்மா எப்ப வந்த? என ஒரு குரல் அழைக்க, குரல்வந்த திசையை நோக்கினாள் கமலா. அங்கே துணி களை அலசிக் கொண்டிருந்த தன் அண்ணன் ராமுவைப் பார்த்து. எங்கண்ணா அம்மாவையும், அண்ணியையும் காணோம்? எங்க போய்ட்டாங்க?

இவன் அமைதியாக துவைத்த துணிகளை நீரில் முக்கித் துணியைப் பிழிந்து கொண்டிருந்தான். அடிக்கடி தான் மாமியாரிடம் சண்டை போட்டு விட்டு தான் பிறந்த வீட்டுக்கு வரும் வாயாடிக் கமலா, வழக்கம்போல தன் புகுந்த வீட்டுப்புராணம் பாட ஆரம்பித்தாள். கதவருகே நின்றபடி "அண்ணா என் மாமியாரோட தொல்லயத் தாங்கமுடியல. எப்ப பாத்தாலும் ஏதாவது ஒரு வேல சொல்லிட்டே இருக்காங்க. எனக்கு அந்த வீட்ல இருக்கவே பிடிக்கல..

இராமுவும் சற்றுச் சலிப்போடு அவளைப் பார்த்து, என்னம்மா உனக்கும் மாப்பிள்ளைக்கும் ஏதாவது சண்டையா? என்றவனிடம் அதெல்லாம் ஒண்ணுமில்ல. நீரிழிவு நோய் வந்த அவங்க அம்மாவத் தான் பாத்துக்க முடியல. நானே அவங்களுக்கு எல்லா வேலையும் செய்ய வேண்டியிருக்கு. நான் என்ன அவங்களுக்கு வேலைக் காரியா? பேசாம அவங்கள ஏதாவது முதியோர் இல்லத்துல சேர்த்துடலாம்னு எங்க வீட்டுக்காரர்கிட்டச் சொன்னேன். எங்க வீட்டுக்காரரு, இதக் காதுல வாங்குற மாதிரி தெரியல. நீயே பாத்துக்கனு சொல்லிட்டாரு. என்ன பண்றதுன்னே தெரியலண்ணா.

கமலாவின் குணம் பற்றி அனைவருக்குமே தெரியும். இராமு கமலாவிடம், "சரிம்மா உன் பிரச்சனையை என்கிட்ட விட்டுடு நான் பாத்துக்கிறேன்" என்றவனைப் பார்த்து ரெண்டுபேரையும் ரொம்ப நேரமா காணோமே என்றாள் கமலா. அண்ணி வேலைக்குப் போயிருக்காம்மா, "அப்போ அம்மா? எங்க போயிருக்காங்க? என்றவளிடம், குரல் தழுதழுக்க, ராமு சொன்னான் "எம்மா இதச் செஞ்சுட்டேன்னு கோபப்படாத" அண்ணா என்னாச்சு சொல்லுணா... அது வந்து... போன வாரம்தான் அம்மாவ நான் முதியோர் இல்லத்துல சேத்தேன், என்றவுடன் அவனை வெறுப்புடன் பார்த்து கமலா சொன்னாள். "ச்சீ... நீயெல்லாம் ஒரு மனுசனா? உன்னப் பெத்த பாவத்துக்கு அவங்கள இப்படி உசுரோட சாகடிச் சிட்டியே... அம்மா இல்லாத வீட்டுல எனக்கென்ன வேல"?

உன்ன என்னோட அண்ணன்னு சொல்லவே வெக்கமா இருக்கு, இனி இந்த வீட்டுக்கும் வரமாட்டேன், உம் மூஞ்சிலையும் முழிக்கமாட்டேன். எனக்கூறி கோபமாகச் சென்றவளைப் பார்த்து "கோபமான ராமு" நில்லு... நீ அங்க என்னா பண்ணிட்ருக்க, நீ பண்ணா சரி நான் பண்ணா தப்பா ? உனக்கு ஒரு ஞாயம் எனக்கு ஒரு ஞாயமா? என்றதும் அவள் கன்னத்தில் ஓங்கி அறைந்தது போலிருந்தது.

கோபத்துடன் வீட்டை விட்டு வெளியேறி தெருவில் வேகமாக நடந்துபோகும் போது மனதில் நினைத்துக்கொண்டாள். இனி செத்தாலும் எம் மாமியா வீட்லதான், எங்கண்ணன் பண்ண தப்ப, எம்மாமியாருக்கு நான் பண்ணமாட்டேன். இவ்வாறு தனக்குள் பேசியவாறே தன் வீட்டுத்தெரு முனையைக் கமலா தாண்டும்போது, அவளைப் பார்த்தவரே வீட்டுக்குள் வந்தனர். கமலாவின் அண்ணியும், அம்மாவும்.

தூரத்தில் சென்ற கமலாவைப் பார்த்துவிட்டு வந்த ராமுவின் அம்மா ராமுவிடம். டேய் ராமு, கமலா இங்க என்ன விசயமா வந்தா? எதுக்கு இவ்ளோ வேகமாப் போறா.. நீ ஏதாவது சொன்னியா? என்றதும் தங்கச்சி அங்கேயே இருந்து சந்தோசமா இருக்கணும் நெனசுத்தான் சில விசயத்தச் சொன்னேம்மா என நடந்ததைக் கூறினான்.

அதைக்கேட்ட அம்மா "இனியாவது அவ அந்த வீட்டுல நிம்மதியா இருக்கணும்" என்கண்ணில் வந்த நீரைத் துடைத்துக் கொண்டு புன்னகித்துக்கொண்டே வீட்டுக்குள் சென்றாள். இராமுவின் முகத்தில் எதையோ சாதித்துவிட்ட மனநிறைவு பொங்கியது.




**மிகவும்** வசதியான முதியோர் இல்லம் அது. கணவன், மனைவிக்கென்று தனித் தனியாக அறைகள், கட்டில், சோபா என்ற எல்லா வசதிகளும் இருந்தது. அறைக்கே வந்து உணவு பரிமாறும் வசதியும் உண்டு. பின்னே ஒருத்தருக்கு 6 இலட்சம் ரூபாய் என்று இரண்டுபேருக்கும் 12 லட்சம் ரூபாய் டெபோசிட்டும் அறைக்கே உணவு வரும் வகையில் ஏற்பாடு செய்து அதற்காக மாதம் 6000 ரூபாய் என்று 12000 ரூபாயும் மகன் பணம் கட்டி அல்லவா இந்த முதியோர் இல்லத்தில் சேர்த்துவிட்டு இருக்கிறான்.

கைநிறைய கல்லும், தங்கமுமாக வளையல்கள், கழுத்தில் 4 சங்கிலி, இருப்பில் பட்டு புடவை என்று இருக்கும் தன் மனைவி சியாமளா ஏன் அழுது கொண்டே இருக்கிறாள் என்றுபுரியாமல், சதாசிவம் அவளையே வெறுமையாய் பார்த்துக் கொண்டிருந்தார். பரிமாறிய உணவைக்கூட சாப்பிடாமல் உனக்கு என்ன குறை வந்துவிட்டது என்று அவளைப் பார்த்துக்கேட்டார்.

சட்டென்று அழுதுகொண்டே அவரை நிமிர்ந்து பார்த்த சியாமளா, ஏங்க நான் ஏன் அழறேன்னு உங்களுக்கு தெரியாதா? அல்லது தெரியாத மாதிரி நடிக்கிறீங்களா என்றாள். நம்ம பையன் 5 பெட்ரூம் வைச்சு பெரிய பங்களா கட்டி இருக்கான். கிரஹப்பிரவேசம் பண்ணினான். நாமும் தானேகூட இருந்தோம். அவ்வளவு பெரிய வீட்டிலே உங்களுக்கு தங்க இடம் கிடையாது என்கிற மாதிரி இங்கே கொண்டுவந்து விட்டுட்டு போய்ட்டானே? என்னங்க பையன் இவன். இவன் இந்த நிலைமைக்குவர எவ்வளவு நாம கஷ்டப்பட்டு இருப்போம் என்றாள்.

சதாசிவம் நிதானமாக, நம்ம பையனை நல்ல நிலைமைக்கு கொண்டு வரணுங்கிறது நம்ம எண்ணம், அதுக்காக நாம பாடுபட்டோம். என் சம்பாத்தியமே நிறைய வந்தும் நான் சொல்லச்சொல்ல கேட்காமல் நீயும் வேலைக்குப் போய் சம்பாதிச்சே. பையனுக்காக ஏகமாக செலவழிச்சே. ஆனா பெத்த வங்களா அவங்கிட்டே இதையெல்லாம் சொல்லி சண்டையா போடமுடியும். அப்படியே அவனத் திட்டினாலும் அவனுக்காக நாம உழைச்சதெல்லாம் வீணாப் போயிடாதா. அப்படியும் அவன் என்ன நம்மை அநாதை இல்லத்துல விட்டிருக்கானா என்ன? நல்ல வசதியான முதியோர் இல்லத்துலே தானே விட்டுருக் கான், சும்மா அழுதுண்டு இக்காமே சாப்பிடு என்றார் சதாசிவம்.

# கொடுத்ததும் கிடைத்ததும்



என்னதான் நீங்க சமாதானம் சொன்னாலும் எனக்கு மனசு கேட்கலீங்க. எப்படியெல்லாம் வளர்த்தேன், எப்படி எல்லாம் சௌரியம் பண்ணிக் கொடுத் தேன் என்று மீண்டும் புலம்ப ஆரம்பித் தாள். சரி... சரி... நீ இப்ப சொல்றே அவன் நினைக்கிறது என்னனு தெரியலையே என்றார் சதாசிவம்.

மறுநாள் சாயங்காலம் பையன் ரகு வந்தான். வந்தவன் அப்பாவிடம் ஒரு போன் நம்பரைக் கொடுத்தான். அப்பா இது டிரைவரோட நம்பர். அம்மாவும், நீங்களும் எங்காவது கோவில். ஹொஸ்பிட்டல் என்று போகணும்னா போன் பண்ணி கார்ல சௌரியமாய் போய்ட்டு வாங்க. டிரைவருக்கு எல்லாம் பணம் ஒன்றும் கொடுக்க வேண்டாம். அதெல்லாம் நான் பாத்துக்கிறேன் என்றான். அதுவரை சும்மா இருந்த சியாமளா சுர்ரென்று கத்த ஆரம்பித் தாள். ஏண்டா! என்ன நினைச்சுக்கிட்டிருக்கே, பெரிய இவ்ன்டா நீ! பணம் கொடுக்கறனாம் பணம், நாங்க பாக்காத பணமா என்று பேசிக் கொண்டுபோனவளை ரகு தடுத்து நிறுத்தினான். ஸ்டொப், ஸ்டொப் அம்மா நான் சொல்றத கொஞ்சம் கேளு என்றான். என்னடா பெரிசா சொல்லப்போறே என்றவளை கையமர்த்தி பொறுமை, பொறுமை என்று சொல்லி சிரித்தான்.

பிறகு நிதானமாக, உன் மனதை தொட்டுச்சொல்லு, உன்னை வசதி இல்லாத அநாதை இல்லத்திலா கொண்டு வந்து விட்டுருக்கேன்? இங்க நீ எந்த பொறுப்பும் இல்லாம நிம்மதியா இருக்கலாம். கூப்பிட்ட குரலுக்கு ஆள் என்கிற மாதிரி வசதியான முதியோர் இல்லம் இது. உன்னை மாதிரியே கணக்குப் பார்க்காம செலவு செய்றேம்மா அப்புறம் ஏன் கோபம் என்றான்.

அதற்கு சியாமளா, நீ சரியான படிச்ச முட்டாள்டா. பணமாடா பெரிசு. வயசான காலத்துலே, ஒபிஸ்லேர்ந்து வந்து பக்கத்துலே உட்கார்ந்து "அம்மா சாப்பிட்டியான்னு" கேட்கிற வார்த்தை எனக்கு கிடைக்கலியேடா என்றாள். அப்படி வா வழிக்கு என்ற ரகு இதே கதைதானே எனக்கும் நடந்தது. பணத்தாலே எல்லா சௌரியமும் பண்ணிக்கொடுத்தே. ஆனால் ஆசையாய் ஒரு நாள், ஒரு வாய் சோறு ஊட்டிவிட்ருப்பியா. தலைவாரி டிரஸ் போட்டு விட்டிருப்பியா. ஒவ்வொரு வேலையையும் நான் செய்யும்போது எனக்கு அமுதா பாட்டியின் முகம்தான் கண்ணுக்குத்தெரியுது. உன்முகம் இல்லையேம்மா என்றவன் சியாமளாவின் மடியில் தலைவைத்து அழ ஆரம்பித்தான்.


சியாமளாவுக்கு, சதாசிவம் என் சம்பளமே போதும் நமக்கு ஒரு பையன் அவனுக்கு பாசத்தை ஊட்டிக் கவனித்து வளர்த்தால்போதும் என்ற எவ்வளோவோ சொல்லியும், தனியா பணம் வேணும், என் குழந்தைக்கு நான் செலவு செய்யணும் என்று சொல்லி வீம்பு பிடித்துக்கொண்டு வேலைக்குப் போனது கண்முன்னால் வந்தது.

ரகு அப்பொழுது, அம்மாவாகிய நீ எனக்கு வசதிகள் செய்துதருவதாக நினைத்து பாசத்தை கொடுக்க மறந்துட்ட. அந்த தப்பை நானும் செய்ய விரும்பல. இதை நான் உங்களுக்கும் செய்யமாட்டே என் குழந்தை களையும் பாசத்திற்காக ஏங்க விடமாட்டேன். அதனால்தான் நன்றாக படிச்சும் வேலைக்குப் போகாத யமுனாவை கல்யாணம் பண்ணிக்கிட்டேன். என் வேலை களையும் என் குழந்தை களையும் பாசத்துடன் நல்லா பாத்துக்கிறேன். நெனச்சுப்பாரு சொல்லச் சொல்ல கேட்காம வேலைக்குப் போனி யேம்மா. அப்போ நான் தவிச்சத உனக்கு சொன்னா புரியாதுனு தான் இப்படி ஒரு காரியத்தை நான் செஞ்சேன். ரகு, சரி சரி கிளம்புங்கோ யமுனா எல்லாருக்கும் சமைச்சு வச்சுக்கிட்டு காத்திருப்பாள். கூடவே உன் பேரக்குழந்தைகளும்தான் என்றான். போகிற வழியில் யமுனாவோட அப்பா, அம்மாவையும் அழைச்சுக்கிட்டு போகலாம் என்றான். வீட்டிற்குப்போனதும் கீழே இருக்கிற இரண்டு பெட்ரூமில் ஒன்று உங்களுக்கு. மற்றொன்று யமுனாவோட அப்பா அம்மாவுக்கு, மாடியிலே எங்களுக்கு, இரண்டாவது குழந்தை களுடையது, மூன்றாவது விருந்தினர்கள் வந்தால் தங்க என்றான்.

சந்தோசமான சியாமளா, டேய் ரகு இத்தனை நாளாக நான் கொடுக்காத பாசத்தை இப்ப வட்டிபோட்டு ஒருத்தர் பாக்கியில்லாம கொடுக்கப் போறேன்டா என்றாள்.

சதாசிவத்துக்கு காஞ்சி பெரியவாள் சொன்ன 'ஸ்தீரி தர்மம்' நினைவுக்குவந்தது. குடும்பத்துக்கு வேண்டிய பொருளை கொண்டுவருவது புருசனுடைய கடமை. கொண்டுவரும் பொருளை வைத்து குழந்தைகளையும், புருசனையும், பராமரிப்பது ஸ்தீரிகளின் தர்மம். அதை விடுத்து ஒபீசுக்குப் போகிறேன் என்று அங்கேயும் ஒழுங்காக வேலைசெய்யாமல், வீட்டிலும் வேலை சரியாக செய்யாமல் இருப்பது ஸ்தீரிகளுக்கு வேண்டாம் என்றது நினைவுக்குவர சிறிய புன்னகையுடன் தன் அறைக்கு ஓய்வெடுக்கச் சென்றாள்.

— ஜெயாசுந்தரம் —



அளவெட்டி - ப.உதயகுமார்.

# கூட்டமைப்பால் அழிக்கப்படும் தமிழர்களின் எதிர்காலம்

**முப்பது** வருட கால யுத்தம் முடிவுக்குவந்த நாளும்கூட, இந்த நாட்களின் பின்னர் வடக்கு - கிழக்கில் படிப்படியான மாற்றங்கள் உண்டாகி, கடைசியாக இருந்த இராணுவ நிலைகளும் அகற்றப்பட்டு, வீதிகூட இல்லாமல் காணப்பட்ட புகையிரதப் பாதைகள் செப்பனிடப்பட்டு பளையில் இருந்து யாழ்ப்பாணம்வர புகையிரதம் கூட தயாராகிவிட்டது.

இந்த மாற்றங்களின்மூலம் வடக்கு, கிழக்கு மக்கள் யுத்தமற்ற ஒரு பிரதேசத்தில் வாழும் நிலையினைப் பெற்றார்கள். மக்கள் மனங்களில் மகிழ்ச்சி காணப்பட்டது. எந்த நேரத்திலும் எந்த இடத்துக்கும் போய்வரக் கூடியதான வழிமுறைகளும் தோன்றியிருந்தன.

இந்த நிலைகள் கூட்டு அரசியல் பிழைப்பு நடாத்தும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு பெரும் தலையிடியினைக் கொடுத்தது! இப்பவும் கொடுத்துக் கொண்டிருக்கின்றது. ஏனென்றால், தமிழ் மக்களிடையே இப்படியானதொரு மாற்றம் வந்தால் தங்களின் அரசியல் பணியைச் செய்ய முடியாதுபோகும் என்பது அவர்களின் எண்ணமாகும்.

குழம்பிய குட்டையில் மீனைப் பிடித்துப் பழகிப் போய்விட்ட கூட்டமைப்பினருக்கு அமைதி என்ற சொல் "அலர்ஜி" யானது! ஆனால் இவர்களின் உள் நோக்கமென்ன?, எதற்காக அலைகின்றார்கள்?, அலைந்து கொண்டிருக்கின்றார்கள்? இவர்கள் எதிர்பார்க்கும் தீர்வுதான் என்ன?? இவர்கள் எதை விரும்புகின்றார்கள்.

தமிழ் மக்களுக்காக அரசியல் செய்கின்றோம் என்று சொல்லிக் கொண்டு தம் குடும்பத்து உயர்வினை, தம் உறவினர்களின் உயர்வினை மட்டுமே கருதிச் செயற்பட்டுக் கொண்டிருக்கும் கூட்டமைப்பினரின் தப்புத்தாளங்களை வாக்காளர்கள் சிந்திக்கவேண்டிய தருணம் இது!

புலம்பெயர் நாடுகளில் வாழும், வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய புலம் பெயர்ந்தவர்களின் வழிகாட்டலில்தான் கூட்டமைப்பு செயற்படுகின்றது. புலம் பெயர் தமிழர்களுக்கு இலங்கையில் அமைதிவரக் கூடாது என்பது அவர்களின் ஆசையும், கனவுமாக இருந்துவருகின்றது.

இலங்கை மண்ணிலே அமைதி நிலவு-மானால் அது புலம்பெயர்வாளர்களை இலங்கைக்கு படையெடுத்துவரச் செய்து விடும் என்பது அவர்களின் பயம். ஒரு காலத்தில் புலிகளுக்கு பெருமளவு நிதியைக் கொடுத்து, இல்லை அள்ளிக்கொடுத்து இலங்கையில் யுத்தம் நடாத்தி வெற்றியடைந்தவர்கள் இவர்கள் என்பதை ஒவ்வொரு தமிழனும் ஏற்றுக்கொள்ள வேண்டும். இவ்வாறான நோக்கம்கொண்ட புலம்பெயர் தமிழர்கள் சாடிக்கு ஏற்ற மூடிபோல கூட்டமைப்பை இப்போது பயன்படுத்தி வருகின்றார்கள். இலங்கை அரசு என்ன கேட்டாலும் போகவேண்டாம், காலத்தைக் கடத்துங்கள் - உங்களை ஒவ்வொரு தேர்தல்களிலும் வெற்றிபெறச் செய்வோம்" என்பது புலம்பெயர்வாளர்களின் ஆலோசனை.

இதில் உண்மையும் இல்லாமல் இல்லை. ஒவ்வொரு தேர்தல்களிலும் பின்னால் வெளிநாடுகளில் உள்ளவர்களின் பணம் இங்கே செல்வாக்குச் செலுத்திவருகின்றது! குடிபானங்களாகவும், ரூபா நோட்டுக்களாகவும் பரிமாறப் படுவதனால் கூட்டமைப்பு இலகுவாக வெற்றி பெற்றுவருகின்றது.

இதுஇவ்வாறிருக்க, புலம்பெயர் தமிழர்களின் இன்னொரு நயவஞ்சகமான சதிவேலையை அரசாங்கம் முறியடித்துள்ளது! அதாவது புலிகளை மீள உருவாக்கி, உயிர்கொடுத்து, அந்தப் பெயர் மட்டும் தமிழ் பகுதிகளில் ஊசலாடினால்போதும் என்பது அவர்களின் விருப்பமாகும். அதனால்தான் கோபி, அப்பன், தேவியன் ஆகியோருடைய வழிநடத்தல்மூலம் வடக்கு, கிழக்கிலேயே மீண்டுமொரு யுத்தமுனையைத் திறக்க விரும்பினார்கள். மிகவும் இரகசியமான முறையிலே நடந்தேறிய இந்த நாடகம் பளையில் துண்டுப் பிரசுரம் கொடுத்த போது பிடிபட்ட இருவர்மூலமாக அம்பலத்துக்கு வந்தது!

மிகத் துல்லியமாக செயற்பட்ட அரச படைகள் காட்டுப்பகுதியில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார்கள். இவர்கள் மூவரும் கொல்லப்படுவதற்கு முன்பு சுற்றிவளைப்புகள், திடீர் சோதனைகள், கைதுகள் என்பன நடந்தது! இதைத்தான் கூட்டமைப்பும் புலம்பெயர்வாளர்களும் சிந்தித்தார்கள். இப்படி நிலைமை உண்டாகவேண்டும். மீண்டும் இராணுவம் தமிழர்களை பந்தாடவேண்டும். மோதல் உருவாகவேண்டும். அப்போதுதான் இந்த விடயங்களைத தூக்கி வைத்துக் கொண்டு அறிக்கைவிட முடியும். இதன் மூலம் தாங்கள் வாழலாம் என்பதை கூட்டமைப்பும் புலம்பெயர் தமிழர்களும் கங்கணம்கட்டி நிற்கின்றனர்.

நிலைமை இவ்வாறு சென்று கொண்டிருக்கும்போது, கூட்டமைப்பு இனி என்ன சொல்லி மக்களை ஏமாற்றப் போகின்றது! ஜெனிவாவிலே இவர்கள் போட்ட விதை விருட்சமாகி, இலங்கைக்கு வரமுடியாது என்று கறுப்பு பட்டியலிடப்பட்ட அந்த 426 தமிழர்களும் இவர்களால் காட்டிக் கொடுக்கப்பட்டவர்களே. இவர்கள் அரசுக்கு எதிராகச் சொல்லிவரும் ஒவ்வொரு விடயங்களும் அது தமிழர்களுக்கு மாலையாக விழும் என்பதற்கு இது நல்ல உதாரணமாகும்.

இப்போது வடக்கு மாகாண சபை முதலமைச்சரின் பெயரை எதிர்க்கட்சியின் ஜனாதிபதி பொதுவேட்பாளராக நிறுத்தப் போவதாக ஒரு செய்தியைக் கிளப்பி விட்டுள்ளனர்.

இதேவேளை அரசுடன் எதிர்காலமதில் பேச்சுவார்த்தைகள் இடம்பெறுமானால், அது மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தேவை என்பதை சுரேஸ் பிரேமச்சந்திரன் கூறிவருகின்றார். மறுபுறத்தே கூட்டமைப்பின் தலைவர் அவர்தான் பழுத்த பழம் இலங்கை ஜனாதிபதியுடன் இரகசியமாக கை கோர்த்துக்கொண்டு தனக்கும், தன் உறவுகளுக்கும் வேண்டியதை ஜனாதிபதிமூலமாக பெற்றுவருகின்றார். மறுபுறத்தே தமிழர்களை நம்பவைக்க அரசைக் கண்டித்து அவ்வப்போது அறிக்கை விட்டும் வருகின்றனர்.

இதுஇவ்வாறிருக்க, தமிழர்களின் ஏகோபித்த வாக்குகளினால் வெற்றி பெற்று வடக்கில் முதல்வன் பதவியை ஏற்றுக்கொண்ட முதலமைச்சர் இப்போது தமிழ் மக்களை அடியோடு கையை விட்டுவிட்டார். அவர் பிரசாரத்தின்போது பேசிய வார்த்தைகள், கொடுத்த வாக்குறுதிகள் காற்றிலே பறந்துவிட்டது. பதவிவந்த பின், சுகபோக வாழ்க்கை வந்தபின்பு அவர் தான் எதற்காக வந்தேன் என்பதை மறந்துவிட்டு அறிக்கை விட்டு வருகின்றார்.

* ஆளுநரை மாற்றவேண்டும்.
* செயலாளரை மாற்றவேண்டும்.
*மாகாண சபையை நடாத்திச் செல்ல அரசு தடை போடுகின்றது!

என்பதுதான் இவர் வடக்கின் முதலமைச்சரான பின்பு பேசிவரும் விடயமாகும். ஆளுனரை மாற்ற வேண்டுமென்று வெளியில் தன்னை நம்பி வாக்குப் போட்டவர்களுக்கு சொல்லிக்கொண்டு, ஏ.சி. போட்ட விமானத்தில் ஓசிப் பயணம் செய்வதற்கு ஆளுனரிடம் அனுமதியும் பெற்றுள்ளார். கொழும்பு செல்லும் இவரும் அரச தரப்புக்களுடன் நல்ல பிள்ளையாகவே நடந்துகொள்கின்றார்.

அண்மையில் மாங்குளம் - தருமபுரம் பகுதிகளில் நடந்தேறிய பாடசாலை திறப்பு விழாவிலே அரச தரப்புடன் இணைந்து செயற்பட்டும் உள்ளார்.

அரசியலுக்கு அதுவும் கூட்டமைப்புக்குள் வருவதற்கு முன்பு நம்பியவரை இப்போது நம்பமுடியாமல் உள்ளது. காரணம் என்னவென்றால், கூட்டமைப்பினர் எல்லோருமே ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்தான் என்பதும் நிரூபணமாகியுள்ளது.

தமிழர்களுக்கு இறுதித்தீர்வு என்றோ ஒரு நாள் வரும். அதையும் சர்வதேசம் பெற்றுத்தரும். இதை இப்படிச் சொல்பவர் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா கூறுகின்றார். சர்வதேசம், அமெரிக்கா, இந்தியா, ஜெனிவா, தென்னாபிரிக்கா, என்று கூறுகின்றனர். தவிர எந்த நாடும் உதவமாட்டாது என்பது எல்லோருக்குமே தெரியும்.

இப்போது அமெரிக்கா மட்டும் துள்ளிக் குதிக்கின்றது. அதுவும் சீனா, இலங்கையில் காலூன்றுமானால் தனது எதிர்பார்ப்புக்கு ஆபத்து உண்டாகிவிடுமோ என்று அமெரிக்க சண்டியன்கள் அஞ்சுகின்றனர். இந்தியா கடைசிவரை உதவ முன்வராது! எனவே இனிமேலும் சர்வதேசம் வருமென்று இந்த கூட்டமைப்பினர் நம்புகின்றனர்.

இதுஇவ்வாறிருக்க, கூட்டமைப்பின் நிர்வாக கட்டுப்பாட்டிலுள்ள வலி. வடக்கு பிரதேச சபையின் உப தவிசாளர் சஜீவனும் பெரும் புரளியை உண்டு பண்ணிவருகின்றார். வலி. வடக்கிலே மீளக்குடியமர்ந்தோர் நலன்களுக்கென்று மீள்குடியேற்றச் சங்கம் செயற்பட்டுவருகின்றது. அதன் தலைவராக கூட்டமைப்பு சாயம் பூசப்பட்ட ஒருவரே செயற்பட்டு வருகின்றார். ஆனால் உப தவிசாளர் சஜீபன் தானேதான் மீள்குடியேற்ற சங்கத்தின் தலைவர் என்று தனக்குத் தானே பட்டம் சூட்டி ஜெனிவாவிலும் பட்டையை கிளப்பியுள்ளார்.

இடம்பெயர்ந்தவர்கள் எப்போது மீண்டும் ஊருக்குப் போகலாம் என்று ஏங்கிக் கொண்டிருக்க, இவர்களோ சுயநலவாதிகளாக மக்களை ஏமாற்றிவருகின்றனர். ஆக ஒட்டுமொத்தமாக பார்த்தால், கூட்டமைப்பு அரசியல்வாதிகள் எங்கே போகின்றனர்?, எதைச் செய்கின்றனர்? என்பது தெளிவாகிவிட்டது.

தமிழ் மக்களின் எதிர்காலம் என்பது கூட்டமைப்பினரால் அழிவுக் குள்ளாக்கும் காலமாகவே கருத வேண்டும்.

(04 ஆம் பக்கத் தொடர்ச்சி....)

## புலம்பெயரும் குற்றவாளிகள்...

இவர் புத்தளம் பகுதியில் வீடொன்றில் வாடகைக்கு இருந்ததாகவும், வாகனச் சாரதியாக இருந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சுரேஷ் என்பவரே தனது கணவர் எனவும் கூறியுள்ளார்.

எனினும், வன்னியில் போர் இடம்பெற்ற காலப் பகுதியில் போராளி ஒருவரை திருமணம் செய்திருந்த உதயகலா, அவர் போரில் காயமடைந்து கோமா நிலையில் இருந்தபோது இந்தியாவுக்கு சிகிச்சைக்கு அனுப்பப்பட்டார்.

இந்தியாவில் அவர் இயக்க உறுப்பினர் எனத் தெரியவந்ததும் சிறையில் அடைக்கப்பட்டார். பின்னர் வன்னியில் உள்ள தொழில்நுட்ப நிறுவனமொன்றின் நிறுவனரை காதலித்து திருமணம் செய்துகொண்டார்.

இவருக்கு முதல் திருமணத்தின்மூலம் ஒரு குழந்தையும், இரண்டாவது திருமணத்தின் மூலம் இரண்டு குழந்தைகளும் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இவ்வாறான சமூகவிரோதிகளும் இன்று அகதிகள் எனும் பெயரால் நாட்டைவிட்டு புலம்பெயர்ந்து செல்கின்றனர். ஆனால் அவர்கள் செல்லும் நாடுகளில் தம்மை அப்பாவிகள் போலவும், தம்மீது கொடுமைகள் கட்டவிழ்த்துவிடப்படுவதாகவும் வாக்குமூலம் வழங்குகின்றனர்.

இலங்கையில் மீண்டும் புலிக்கதை பேசப்படுவதும், வடக்கு, கிழக்கில் மர்மநபர்கள் நடமாட்டத்தைவிட்டு சுற்றிவளைப்புக்கள்செய்து இளைஞர், யுவதிகளை கைதுசெய்து விசாரிப்பதும், தமிழ் மக்களிடையே மீண்டும் யுத்த காலத்தை நினைவுபடுத்துவதோடு, அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது. கடந்தவாரம் திருகோணமலை மூதூரில் இடம்பெற்ற சுற்றிவளைப்புக்களும் விசாரணைகளும் கிழக்கு மாகாணத்தில் யுத்தகாலத்தில் நடந்ததைப்போல் நடைபெற்றுள்ளது.

இவ்வாறான நிலைமைகளானது தமிழ் மக்களை நாட்டைவிட்டே ஓடச்செய்யும் நிழல் யுத்தமா என்ற சந்தேகக் கேள்விகளை தோற்றுவித்துள்ளது. இது மாதிரியாக யுத்த காலத்தில் நடந்த சம்பவங்களிலேயே பல இளைஞர், யுவதிகள் கொலை செய்யப்பட்டதும், காணாமல்போனதும் நடந்துள்ளது. அத்தகைய சம்பவங்களைத்தான் தற்போது ஆணைக்குழுக்கள் அமைத்து விசாரித்துக் கொண்டிருக்கின்றோம்.

இந்த நிலையில் அதையே ஒத்த சம்பவங்கள் மீண்டும் நடைபெறுவது தமிழ் மக்களை பீதியில் ஆழ்த்தியுள்ளது. ஒரு பக்கம் காணாமல் போனவர்கள் தொடர்பாக விசாரணை, மறுபக்கம் காணாமல்போன காலத்தை ஒட்டிய செயற்பாடுகள் என்று சிந்திக்கச் செய்யும் செயற்பாடுகளாகவே இவை காணப்படுகின்றன.

இவ்வாறான சூழலிலேயே புலம்பெயர்ந்து போகின்றவர்கள் ஒட்டுமொத்தமாக அரசுமீதும், படைகள்மீதும் குற்றச்சாட்டுக்களை கூறுகின்றரோ என்றும் எண்ணத் தோன்றுகின்றது. எனவே இவ்விடயத்தில் குற்றச்சாட்டுக்களுக்கு இடமளிக்காதவண்ணம் யுத்தத்துக்குப் பின்னரான அமைதியை அதற்குரிய அர்த்தத்தோடு பாதுகாப்பது அவசியமாகிறது.





# முதல் படி

1+1 = 01

"கூட்டல் கணக்கு
பிழையாக இருக்கிறதே?"
என்றாள் அருந்ததி
மாறன் உதட்டில்
புன்னகை வெளிச்சம்!

"கூட்டல் கணக்கல்ல
கூடல் கணக்கு" என்றான்
அருந்ததிக்கு முகத்தில் வெட்கம்
சிவப்பு சாயம் பூசியது!

"புதுக் கணக்கெல்லாம்
போடுகிறீர்களே!"
எங்கு கற்றீர்கள்?

"கற்றது நேற்றிரவு கல்லாத மீதி
இன்றிரவு" பொய்யாக அவள்
காதைப் பொத்தினாள்.

நேற்றுத்தான் மண நாள்!
மாலைகளை மட்டுமல்ல
மனங்களையும் மாற்றிக்
கொண்ட நாள்!

என் மனம் உனக்கு
உன் மனம் எனக்கு
மனங்களின் இடப்பெயர்ச்சி!

நேற்றுப் பகல் மண நாள்!
நேற்றிரவு மழை நாள்!
திருமேனி தோளில் சாய
உருவாகும் வெட்கம் பாய
இரு மேனி மோதித்தேய
பெருமழை மனதில் பெய்யும்!

"விளக்கத்தை அறிவதற்கு
விளக்கை அணைப்பது
வழக்கத்திற்கு மாறானது!
படிப்பதற்கு வெளிச்சம்
வேண்டாமோ" என்றான்!

"இங்கு கண்களே விளக்குகள்!
வேறு விளக்கு வேண்டாம்!
புத்தியில் வெளிச்சம் உண்டு
வேறு வெளிச்சம் வேண்டாம்"

அவள் விளக்கம் புதிதாக இருந்தது!
பள்ளியறை என்று ஏன் பெயர்
வைத்தார்கள் என்று கேட்டான்.

"ஏன் வைத்தாரோ எவர் அறிவார்?
என்றாள் தெரியாததது போல
படிப்பதற்கு பாடம் படிப்பதற்கு
கற்பதற்கு கலைகள்
கற்பதற்கு என்றான் குறுநகையோடு!

"ஆசான் யாரோ அவர் தான் நீரோ?"
குறும்போடு நெஞ்சில் சாய்ந்தாள்!
இந்தப் பள்ளிக்கு இருவருமே
புதுமுகம் இப்போதுதானே அறிமுகம்!

"அனுபவமே இங்கு ஆசான்!
அனுதினமும் இங்கு பாடம்!
கற்றுத்தர யாருமில்லை
கற்றுக் கொள்வோம்!
பற்றும் பெருநெருப்பில்
வேள்வி செய்வோம்"

நெஞ்சில் சாய்ந்தவளை
கொஞ்சி குதூகலித்தான்!
குத்தும் மீசை அவளை
குறுகுறுக்க வைத்தது!

"குத்துகிறது கொஞ்சம்
குறையுங்கள்" என்றாள்
மீசையை திருகியபடி! எனக்கும்
தான் குத்துகிறது என்றான்!

அவன் கண்கள் சென்ற திசையும்
குறு நகையும் அவன் சொன்னதில்
அர்த்தம் சொல்லாமல் சொல்லின!
"வெட்கம் கெட்ட முரடா" என்றபடி
விலகி முறைத்தாள் "கொலை
கார கண்கள் உயிர் வரை சென்று
ஊடுருவும் கண்கள்" வசமிழந்து
வர்ணித்தான்!

"அத்தனை பயங்கரமாவா
இருக்கிறேன் அப்படியானால்
என்னை மணக்க ஏன்
இசைந்தீர்!" கோபம் குடியேறியது.

"நான் என்ன சொல்லிவிட்டேன்!
நீ ஏன் பிணங்குகிறாய்?
உன் கண்களை வியந்தேன்
நீ கவலை கொள்வானேன்?" —

இந்தக் கேலிதானே வேண்டாம்
பயங்கரமானவள் என்று பழிப்புக்
காட்டிவிட்டு கதையை மாற்ற
வேண்டாம்.

நீ என்ன பேயா என்னை
மிரட்ட - என்னது என்னது
பேய் என்றா - உம் வாய்
உரைத்தது போய் வருகிறேன்.

"புறப்படுவது போல எழுந்தவளை
புயல் வேகத்தில் தடுத்தான்!
என் கண்ணே என்மேல்
கோபப்படாதே!" உமது கண்
உம்மிடம்தானே இருக்கிறது! கண்
மட்டுமல்ல என் எல்லாமே
உன்னிடம்தான்.

சுற்றிவளைத்து என்னை திருடி
என்கிறீர்? உம் கண் என்ன
குருடோ? நானோ திருடி?"

"சரியம்மா நான்தான் திருடன்!"
நீர்தான் திருடனா அப்படியானால்
நான்தானே திருடன் மனைவி!"
அவள் முகத்தைத் திருப்பிக்
கொண்டாள் - ஏதோ பேச்சுக்கு
சொன்னேன்! ஏடா கூடமாகி
விட்டது! என்று கெஞ்சினான்.

அது என்ன ஏடாகூடம்? விளக்கும்
பார்க்கலாம் - யாருக்குத் தெரியும்
வாயில் வந்தது சொல்லிவிட்டேன்.

"வெந்ததைத் தின்று வாயில்
வந்ததைப் பேசும் பொறுப்பற்ற
மனிதரோ நொந்து போனேன்
வந்து வாய்த்தீரே!"
எதைச் சொன்னாலும் வாயால்
உதைக்கிறாளே! என் செய்யலாம்?
மாறன் யோசித்தான்!

அம்மா மகாராணி சரணம்!
சரணம்! வாயாடி வென்றுள்ளோன்
உன்னோடு என்னால்
வாயாடி வெல்ல முடியாது!

"தோற்றுவிட்டேன் ஏற்றுக்கொள்!
தூற்றாதே கண்மணி போற்றி
போற்றி" இவள் இதழ்களில்
வெற்றிப் பெருமிதம்!
நெற்றியால் முட்டினாள்
நெஞ்சினை வருடினாள்!

ஊடாமல் கூடுவதில் இன்பம்
இல்லை என்று நினைத்தாள்
அந்த இரகசியத்தை
சொல்லாது மறைத்தாள்!

இடை நோகாதோ என்று
எழில் தாங்கினான்! காதல்
போர்க்களத்தில் படை
நடத்தினான்!

விளக்கு அணைத்திருந்த
போதும் விளக்கம் தெரிந்தது!
முதலில் தீ மூழ்கிவிட்டால்
திருப்பாற்கடல்! முத்துக்
குளித்தது போல் தேகம்
வியர்த்து தெப்பமாய் நனைந்தது!

வெற்றி வீரனாய் வினா
தொடுத்தான் கற்றது நலமா?

"வெட்கம் நிறைந்த
புன்னகையுடன்
அருந்ததி கூறினாள்;
வெற்றி உமக்கே என்னை
வென்றது நீரே! ஊடலில்
தோற்றீர் கூடலில் ஜெயித்தீர்!
தோல்வியே வெற்றியின்
முதல் படி அந்தப் படி
அமைக்கவே ஊடலாய்
நடித்தேன்!"

**"உடலில் தோற்றவர் வென்றார் அது மன்னும்
கடலில் காணப்படும்"**

குறள் : 1330 – அதிகாரம் :133





**சிந்தியா! நாட்டில் குற்றச்செயல்கள் அதிகரித்துவருகிறதே. இதை தடுக்க நடவடிக்கை எடுப்பது யார்?**

**எம்.சாமிலி, திருநெல்வேலி.**

மத விவகாரங்களுக்கு தனியான பொலிஸ் படை அமைக்கப்பட்டதுபோல் பாலியல் வல்லுறவு, போதைப்பொருள் தடுப்பு, கொள்ளை, கொலை, கடத்தல், மோசடி எனத் தனித்தனியாக படைப் பிரிவுகள் அமைக்கப்படவில்லையே.

படைவீரர்கள், காவல்துறையினர் எனக் குற்றவாளிகளாக பலரும் தொடர்புபடுகின்ற சம்பவங்கள் நாட்டில் இடம்பெறுவதால் இப்படி ஒரு கேள்வி உங்களுக்கு தோன்றியுள்ளது.

**சிந்தியா! முதலமைச்சர் விக்கினேஸ்வரனின் நிலை மத்தளம் போன்று இருக்கின்றது போல் தெரிகிறதே?**

**ஆர்.ரொசான், வவுனியா.**

அவர் கால்கள் இல்லாத நாற்காலியில் அமர்ந்திருப்பதாக சில தினங்களுக்கு முன்னர் பரிதாபத்தோடு கூறியிருந்தார். படித்தவர், கௌரவமானவர். தனக்கு உடைந்த நாற்காலிதான் கொடுக்கப் பட்டிருப்பதாக புரிந்துகொண்டால் அதை தூக்கி வீசிவிட்டு மரியாதையை காப்பாற்றி இருக்கவேண்டாமோ. நொண்டிக் குதிரையில ஏறியிருக்கும் முடவன்போல், உடைந்த கதிரையில ஏன் வம்படியாக இருப்பான்? யாரும் கேட்டால் பதவிக்காகவோ, நாற்காலிக்காகவோ நான் அரசியலுக்கு வரவில்லை என்று ஒரு உணர்ச்சி ஏற்றும் கதை ஒன்றையும் கூறிக்கொள்கின்றார் என்றெல்லாம் அவரது கூட்டமைப்புச் சகாக்களே கேலியாக பேசுகின்ற நிலையில், அவர் புலிவாலைப் பிடித்த கதையாக கூட்டமைப்புக்குள் இருக்கின்றார்.

ஐயா மாகாண சபைக்குள்ளே நுழைந்தால் கூட்டமைப்பு பிரதிநிதிகள் முன்னால் வந்திட்டார் என்றுதான் கூறுகிறார்களாம்.

**சிந்தியா! தெரிவுக்குழுவில் பங்கு பற்றும் எண்ணம் கூட்டமைப்பிடம் துளியேனும் இருப்பதுபோல் தெரியவில்லையே...?**

**எம்.எம்.இமான், புத்தளம்.**

அதில் சந்தேகம் இல்லை. தமிழ் மக்களின் பிரச்சினை தீர்ந்துவிடக்கூடாது என்பதில் எவ்வளவு உறுதியோ? அவ்வளவு உறுதியாக இருக்கின்றார்கள். தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் இன்றைய நிலையில் பேசக்கூடிய தளமாக தெரிவுக்குழுவே இருக்கின்றது.

அதையும் கூட்டமைப்பு கையை விட்டுவிட்டு விடுவார்கள். தனிநாடு, இணைந்த வட கிழக்கு, இப்போது மாவட்டத்தில் பாராளுமன்றப் பிரதி நிதித்துவம், நாளை கிராம உத்தி யோகத்தர் பிரிவில் உறுப்புரிமை என தமிழ் மக்களை கோவணங்களோடு, நடுத்தெருவில் நிறுத்தும்வரை கூட்டமைப் பின் அரசியல் போக்கு ஓயாது.

**சிந்தியா! முஸ்லிம்களின் பிரச்சினைகள் கவனிக்கப்படாமல் இருந்தால், தீர்வை வெளியே தேடும் நிலை ஏற்படுமென அமைச்சர் றிஷாட் பதியூதீன் தெரிவித்துள்ளாரே...?**

**இ.கவின், கிளிநொச்சி.**

பிரச்சினைகளுக்கு உரிய இடத்திலிருந்து தீர்வை வெளியே தேடுவோம் என்பது வாழ்வியல் தத்துவம். அமைச்சரின் துணிச் சலான பேச்சு அது. முஸ்லிம்களுக்கு எதிராக இந்த நாட்டில் எதுவுமே நடக்காதது போல் இருப்போரின் கவனத்தை பிரச்சினைகளின் பக்கம் திருப்பும் எச்சரிக்கை கலந்த பேச்சு அது.

முஸ்லிம்களுக்கு எதிராக நடைபெறுகின்ற பிரச்சினைகளில் தம்மை சண்டியர்கள்போல் படம் காட்டி சில தலைவர்கள் ஊமையாகிப் போயுள்ள நிலையில் அமைச்சர் றிஷாட்டின் சமகால செயற்பாடுகள் முஸ்லிம் மக்களிடையே ஆறுதலைக் கொடுப்பதாக உள்ளதாக கூறப் படுகின்றது.

**சிந்தியா! மோடிக்கு பிரதமராகும் வாய்ப்புக் கிட்டுமா?**

**மு.கஜேந்திரா, மாத்தளை.**

எனக்கு மோடி மீதோ, ராகுல் மீதோ விருப்பு வெறுப்பு எதுவுமில்லை. ஆனால் நடந்துள்ள பாராளுமன்றத் தேர்தலில் மோடி கடுமையாக உழைத்துள்ளார். 523 பாராளு மன்ற உறுப்பினர்களுக்கான தெரிவுக் காக நாடு தழுவியவகையில் மோடி 447 தொகுதிகளில் பிரசாரங்களில் ஈடுபட்டுள்ள 5593 மக்கள் சந்திப்புக் கூட்டங்களில் கலந்து கொண்டுள்ளார். தேனீர் கடை தொடக்கம் வாகனத் தொடரணி ஊர்வலம் வரை மக்களைச் சந்திக்கச் சென்றுள்ளார்.

வறுமையான குடும்பத்திலிருந்து பல தடைகளையும், புறக்கணிப்புக்களையும் எதிர்கொண்டு இன்று பிரதமர் வேட்பாளராக உலகின் இரண்டாவது பெரிய தேர்தலாக கருதப்படும் இந்திய பாராளுமன்றத் தேர்தலை எதிர்கொண்டதோடு, மோடி என்ற பெயரை முழு இந்தியப் பரப்பெங்கும் பரப்பியுள்ளார். இந்த உழைப்புக்கு வெகுமதி இருக்கவே செய்யும்.



**சிந்தியா! உலகக் கிண்ண கால் பந்தாட்ட தொடருக்கான அணியில் இருந்து அனுபவ வீரர்களான ரொனால்டீனோ, கார்ஹா நீக்கப் பட்டமை குறித்து?**

**த.சமீன், தெஹிவளை.**

கடந்த சில உலகக் கிண்ணப் போட்டிகளில் பிரேசில் அணியின் பாரிய தூண்களாக விளங்கியவர்கள் ரொனால்டீனோ மற்றும் கார்ஹா ஆகியோர்.

இறுதியாக பிரேசில் அணி உலகக் கிண்ணத்தை வென்றபோது இவ்விருவரின் பங்களிப்பும் முக்கியத்துவம் வாய்ந்தமை யாக இருந்தன. ஆனால் தற்போது அவர் களின் வயதுகாரணமாக ஏற்பட்ட திறன் தொய்வு நீக்கத்துக்குக் காரணமென்று சொல்லப்படுகிறது.

ஆனால், தேர்வாளர்களின் விருப்பு வெறுப்பும் ஆதிக்கம் செலுத்தியது என்ற விமர்சனங்களும் இல்லாமல் இல்லை. எப்படியோ வாய்ப்புப் பெற்ற புதியவர்கள், இந்த மூத்தவர்களின் இடத்தை நிரப்புவார்களா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

# காதிலை பூ கந்தசாமி

"நான் சொல்வதெல்லாம் பொய் பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை."

**வணக்கமுங்கோ. அண்மைய சில நாட்களாக அலரிப்பூ மாளிகை ரொம்பவும் பரபரப்பாக இருக்குதுங்கோ. ஏன் இந்தப் பரபரப்பு எண்டு தெரியாமல் எனக்கெண்டால் நிம்மதியாக தூக்கம் வராது எண்ட காரணத்தினாலை நம்முடைய குருவியைப் பிடிச்சு விசயத்தைக் கேட்டனுங்கோ.**

குருவி என்ன சொன்னிச்சுது தெரியுமோ, அலரிப்பூ மாளிகைக்கு தேர்தல் காச்சல் பிடிச்சிட்டுதாமுங்கோ. கொழும்பில டெங்குதானே அதிகமாகப் பரவுது எண்டாங்கள். அலரிப்பூ மாளிகைக்கு பிடிச்சது தேர்தல் காச்சல் எண்டு எப்புடி உறுதியாகச் சொல்லுறீர் எண்டு கேட்டனுங்கோ.

அதுக்கு குருவி சொல்லுது, குட்டையில நுளம்பு கூடினால்தானே டெங்கு பரவும். கோட்டையில அமைச்சர்மாரும், எம்.பிமாரும் அடிக்கடி இரவுபகலாக கூடி டினம் எண்டால் தேர்தல் காச்சல்தானே பிடிக்கும்.

ரெண்டு வருசத்துக்கு பொதுத் தேர்தல் எதுவும் இல்லை எண்டு சொன்ன ஜனாதிபதி, எதிர்க்கட்சிகள் கேட்டால் எந்தத் தேர்தலுக்கும் அரசு தயார் எண்டு சொன்னவர். ஜனாதிபதி அப்புடிச் சொன்னதும் எதிர்க்கட்சிகளும் பதிலுக்கு, ஜனாதிபதிக்கு முடியுமாக இருந்தால் இந்த வருசமே ஜனாதிபதித் தேர்தலையும், பாராளுமன்றத் தேர்தலையும் நடத்தட்டுமே. நாங்கள் தயாராகத்தான் இருக்கிறம்.

அரசாங்கத்தின்ர வீழ்ச்சி ஆரம்பமாகி விட்டது. ஜனாதிபதிக்கு தைரியம் இருந்தால் தேர்தல் அறிவிப்பைச் செய்யட்டும் பார்க்கலாம் சவால்விட்டிருக்கினமுங்கோ.

எதிர்க்கட்சிகளின் அந்தச் சவால் அலரிப்பூ மாளிகைக்குள்ள எதிரொலிப்புச் செய்திருக்குதுங்கோ.

எதிர்க்கட்சிகளுக்கு நாட்டில் வேலையில்லை. ஆகையாலை அவர்கள் எப்பவும் சவால்விடுவினம், தேர்தலுக்கு தயார் எண்டுவினம். ஆளுங்கட்சியாகிய நாங்கள் அப்படிச் செய்யமுடியுமோ, ஆரம்பிச்ச வேலைகள் அப்புடியே கிடக்குது. தேர்தலுக்கு தயாராகிற நிலைமை இப்போதைக்கு இல்லை எண்டதாலை அவசரப்படாமல் கொஞ்சம் நிதானமாக முடிவுசெய்தால் நல்லது எண்டு பரவலாக எம்.பி.மாரும், அமைச்சர்களும் ஆலோசனைகள் சொல்லினமாமுங்கோ. அதில சிலபேருக்கு என்ன பயம் எண்டால் பாருங்கோ, பாராளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்டால் இண்டைக்கு இருக்கிற நெருக்கடியான நேரத்தில இருக்கிற பதவியைத் தக்கவைக்கிறதே பெரும்பிரச்சனையாக இருக்குமெண்ட கவலை இருக்குதாமுங்கோ.

அப்புடியெண்டால் முதலில ஜனாதிபதி தேர்தலை நடத்துங்கோ. அதில எதிர்க்கட்சிகள் பொது வேட்பாளரை தெரிவுசெய்து களத்தில இறக்கிறதில தங்கட மண்டையை உடைச்சுக் கொள்ளுவினம். நாங்கள் பரவலாக வேலை செய்வோம் நீங்கள் ஈசியாக மீண்டும் ஜனாதிபதியாக தெரிவாகிவிடுவீர்கள் எண்டும் ஆலோசனைகள் சொல்லப்படுகுதாமுங்கோ.

எதிர்க்கட்சிகள் அரசியல்ரீதியாக பலமாக இல்லை எண்டது தெரிஞ்ச விசயம். எண்டாலும் இந்த அரசாங்கத்துக்கு எதிராக சதி செய்யிறதுக்கு சில வெளி நாட்டு சக்திகள் தருணம் பார்த்துக் கொண்டு இருக்கிறதாலை, உந்த எதிரிக் கட்சிகளை வடிவேல் சொல்லுமாப்போலை கொஞ்சம் கேர்புல்லாகத்தான் கேண்டில் பண்ணவேணுமெண்டும். சகோதரர்கள் அலேட் அடிக்கினமாமுங்கோ.

இந்த தலையிடியில அலரிப்பூ மாளிகை ரொம்பப் பரபரப்பாக இருக்கேக்க தானுங்கோ, வெளியாலை எதிரிக்கட்சிகள் ஒரு தெனாலிராமன் பகிடிக்கதை ஒன்றை சொல்லிக்கொண்டு இருக்கினமுங்கோ.

போனவாரம் ராவய பத்திரிகையில் குசேல் பெரேரா எண்டவர் எழுதிய செய்தியில் ஜனாதிபதி தேர்தலில் எதிர்க் கட்சிகள் பொது வேட்பாளர் ஒருவரை தேடிக் கொண்டிருக்கிறார்கள். பொது வேட்பாளர் ஒருவரைத் தேடும் படலத்துக்கு முடிவு கட்டவேண்டுமாக இருந்தால், தற்போதைய வடமாகாண முதலமைச்சர் விக்கினேஸ் வரனை பொதுவேட்பாளராக நிறுத்தலாம் என்று ஒரு ஆலோசனையை முன்வைத்திருந்தார்.

அந்தக் கருத்தை சீரியஸாக எடுத்துக் கொண்டு சுமந்திரன் எதிர்க்கட்சிகளிடம் பகிரங்கமாக விக்கியை பொதுவேட்பாளராக விருப்பமா என்றும், விருப்பம் இல்லாவிட்டால் ஏன் விருப்பமில்லை என்பதையும் தெளிவுபடுத்துங்கள் என்றும் கேட்டு இருக்கின்றார்.

சுமந்திரனுக்கு பக்கவாத்தியமாக மனோவும் விக்கியை ஏன் பொது வேட்பாளராக நிறுத்தமுடியாது? கேட்டிருக்கின்றார்.

இந்தக் கதைகளை கேள்விப்பட்ட விக்கி தனக்கு நெருக்கமானவர்களிடம், இவங்கள் எதையாவது உளறிக்கொண்டு இருக்கட்டும் என்றுதான் இருந்தேன். இந்த நாதாரிகள் என்னைப்பற்றி பேச முன்னர் என்னிடம் கேட்டிருக்கலாமே. மக்களிடம் கேட்காமலே மக்களின் பெயரால் கருத்துச் சொல்வார்கள். அதுபோல் இப்போது என்னிடம் கேட்காமலே என்பெயரால் இவர்கள் கருத்துச் சொல்கின்றார்கள் என்று கவலைப்பட்டிருக்கின்றாருங்கோ.

வடக்கில் தமிழ் மக்கள் வாக்களிப்பார்கள் என்பதும், எத்தனை வாக்குகள் விழுந்தாலும் தன்னை முதலமைச்சராக்கி விடுவார்கள் என்பதை ஏற்கெனவே நிச்சயப்படுத்திக்கொண்டுதானுங்கோ விக்கி மாகாண சபைத் தேர்தலுக்கே போனவருங்கோ.

அதே மாதிரி ஜனாதிபதி தேர்தலுக்கும் மாயாஜாலம் நிகழ்ந்துவிடாது என்பதை விக்கி நன்றாகத் தெரிந்து வைத்திருக்காருங்கோ. விக்கியை கூட்டமைப்பை விட்டு தூக்குவதற்கு திட்டம் தீட்டுவதுபோல் சூ மந்திரம் போடுகின்றார்கள் போலையும் இருக்குதுங்கோ. மிஸ்டர் விக்கி விளையாட்டாக இருந்தாலும் கொஞ்சம் அலேட்டாக இருங்கோ. இவங்கள் மோசமானவங்களிலேயே மிக முக்கியமானவங்கள் அவ்வளவு தானுங்கோவ்.

**"யாவும் கலப்படமற்ற கற்பனை"**

# சத்ரபதி சிவாஜி



உண்மையானதோர் பக்தனின் மனம் வருந்தக் கூடாது என்று. கானகத்தில் ஒரு மரத்தடியில் சிவாஜிக்கு தரிசனம் அளித்தார் ராமதாசர். அவருக்கு 'ஸ்ரீராம் ஜெயராம், ஜெய ஜெயராம்' என்ற மந்திரத்தைக் கூறி தீட்சையும் அளித்தார். அப்போது சிவாஜி, "குருதேவா! நான் அனைத்தையும் துறந்துவிட்டு. உங்களோடு உங்களுக்குச் சேவை செய்தே என் வாழ்நாளைக் கழிக்க விரும்புகிறேன். அதற்கு அனுமதி அளியுங்கள்!" என்று கூறினார்.

குரு ராமதாசர் பொய்க்கோபத்துடன். " இதற்காகவா என்னைக் காண வந்தாய்? நீ ஒரு கரும வீரன், ஷத்திரியன், நாட்டையும் நாட்டு மக்களையும் காப்பது உன் கடன். பசுக்களுக்கும் பிராமணர்களுக்கும் தொண்டு செய்வதையே ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தி உனக்குக் கட்டளையிடுகிறார். அருச்சுனனுக்குக் கண்ணன் போர்க்களத்தில் உபதேசித்த பகவத்கீதையின் உபதேசங்களை நினைவில் வைத்துக்கொள். போர்வீரனுடைய கடமையிலிருந்து விலகாதே. கர்மயோகம் பழகு" என்றுகூறி சிவாஜியை ஆசிர்வதித்து அனுப்பினார் ராமதாசர்.

ஆனாலும் சிவாஜியின் மனம் ராஜபோகங்களில் ஈடுபாடு கொள்ளவில்லை. ஆகவே தம் இராஜ்ஜியம் முழுவதையும் ராமதாசரின் பாதங்களில் தத்தம் செய்துவிட்டதாக ஒரு பத்திரத்தில் எழுதி. அதை குரு ராமதாசரின் ஜோல்னாப் பையில் போட்டார்.

தொடரும்...

# இந்தவாரம் உங்கள் பலன்

(15.05.2014 தொடக்கம் 21.05.2014 வரை)

## மேடம்

வங்கிகளின்மூலமாக எதிர்பார்த்து இருந்த கடன் உதவித்தொகைகள் கிடைக்கும். கணவன்– மனைவி உறவுகள் சுமாராகக் காணப்படும். வெளி நாடுகளில் வசிக்கும் உறவினர்கள் மற்றும் நணபர்களிடம் இருந்து நல்ல செய்திகள் வந்துசேர வாய்ப்பு உள்ள காலமாகும். புதிய தொழில்களை ஆரம்பம் செய்வதை சற்றுத் தள்ளிப்போடுவது நல்லது. விளையாட்டுத்துறை சார்ந்தவர்கள் மிகவும் கவனமுடன் நடந்துகொள்வது நல்லது. விவசாயம் செய்பவர்கள் கவனமுடன் இருப்பது உகந்ததாகும். பெண் சம்பந்தமான காதல் விசயங்களில் நல்ல செய்திகள் வந்துசேரும். பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.

## இடபம்

தடைப்பட்டுவந்த திருமணம் போன்ற சுபகாரியங்கள் நடைபெற வாய்ப்பு உள்ளது. காதல் சம்பந்தமான விசயங்களில் நல்ல செய்திகள் வந்துசேரும். தெய்வத் தொண்டுகளைப் பிரியமுடன் செய்து நற்பெயர் எடுப்பீர்கள். புதிய கடன்களை வாங்கிப் பழைய கடன்களை அடைப்பீர்கள். சமுதாயத்தில் பழுதுபட்ட ஆலயங்களைத் திருத்திக் கட்டுவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். நண்பர்களால் காரணமற்ற பொருட்செலவுகள் வந்துசேரலாம். உடம்பில் வாயு, வயிறு போன்ற உபாதைகள் வந்துபோகலாம். நண்பர்களின் வீட்டுச் சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக நீண்டதூரப் பயணங்களை மேற்கொண்டு மனமகிழ்ச்சி அடைவீர்கள். கணவன் – மனைவி இடையே இருந்துவந்துள்ள கருத்து வேறுபாடுகள் இன்னும் சற்றுக்கால தாமதமாகவே தீரும்.

## மிதுனம்

வீடு, வாகனங்களை வாங்குவதற்கும் மற்றும் தொழிற்சாலைகளின் அபிவிருத்திக்காக நீண்டகாலமாக வங்கிகளில் இருந்து எதிர்பார்த்து இருந்த கடன் உதவித் தொகைகள் கைக்கு வந்துசேரும் காலமாகும். விவசாயம் செய்பவர்களுக்குச் சுமாரான நற்பலன்களைச் செய்யும். நண்பர்களால் ஒரு சிலருக்கு ஆதாயங்களை அடைவீர்கள். காதல் விசயங்களில் எதிர்பார்த்த செய்திகள் சற்று. காலதாமதமாகவே கிடைக்கும். ரேஸ் லோட்டரிமூலம் திடீர் தனவரவுகள் ஏற்படலாம். வெகுகால்மாகப் பிரிந்துபோன கணவன் – மனைவி உறவுகளில் இருந்துவந்துள்ள மனக்கசப்புகள் தீர்ந்து ஒன்றுசேர வாய்ப்பு உள்ளது. கணவன் – மனைவி உறவுகளில் நல்ல மனமகிழ்ச்சி உண்டாகும்.

## கடகம்

தாயின் உடல்நிலை பாதிப்புக்களால் ஏற்பட்டு வந்துள்ள மருத்துவச் செலவ்கள் குறையும். உறவினர்களின் வீட்டுச் சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக நீண்டதூரப் பயணங்களை மேற்கொள்ளுவீர்கள். வழக்கு விசயங்களில் எதிர்பார்த்த சாதகமான தீர்ப்புகள் கிடைக்க இன்னும் சற்றுக் காலதாமதம் ஆகலாம். புதிய கடன் வாங்கினால் திருப்பிச் செலுத்த இயலாமற் போகுமாகையால் புதிய கடன்கள் வாங்குவதை தவிர்க்கவும். உற்றார் மற்றும் உறவினர்களிடம் இருந்து எதிர்பார்த்த ஆதாயங்கள் கிடைக்க இன்னும் சற்றுக் காலதாமதம் ஆகலாம். வேலை இல்லாதவர்களுக்குப் புதிய வேலை வாய்ப்புக்கள் கிடைக்கும். கணவன் – மனைவிக்கிடையில் அந்நியோந்நியம் அதிகரிக்கும்.

## சிங்கம்

காதல் விசயங்களில் மிக எச்சரிக்கையுடன் இருக்கவும். நீண்டகாலமாகத் தடைப்பட்டு வந்த சகோதர சகோதரிகளின் திருமணம்போன்ற சுபகாரியங்கள் நிறைவேறும் காலமாகும். புதிய தொழில்களை ஆரம்பம் செய்வதற்கான வங்கிக் கடன்கள் கைவந்து சேரும். குடும்பத்தில் பல காலமாக ஏற்பட்டுவந்துள்ள மருத்துவச் செலவுகள் சற்றுக் குறையக்கூடிய காலமாகும். ஆடம்பர அலங்காரப் பொருட்களை வாங்குவதற்காக புதிய கடன்களை வாங்குவீர்கள். தேவையில்லாமல் மற்றவர்களின் விசயங்களில் தலையிட்டு வீண் மனக்குழப்பங்கள் அடைய வேண்டாம். கணவன் – மனைவி உறவுகள் சுமாராகக் காணப்படும்.

## கன்னி

தாயின் உடல்நிலை பாதிப்புகள் இன்னும் சிலகாலம்வரை நீடிக்கும். திடீர் அதிர்ஷ்டம் மூலமாகப் பணம் பொருட்கள் வந்துசேரலாம். உடல்நிலையில் கண், காதுகளில் கவனம் தேவை. விசயங்களில் தலையிட்ட வீண் மனச்சிக்கலை விலைக்கு வாங்கவேண்டாம். குடும்பத்தில் சுபகாரிய நிகழ்ச்சிகளை நடத்துவதற்காக புதிய கடன் வாங்குவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். பங்காளிகளுடன் சேர்ந்து புதிய கூட்டுத்தொழில்களைச் செய்வதற்கான முயற்சிகளைத் தள்ளிப்போடவும். கணவன் – மனைவி உறவுகளில் இருந்துவந்துள்ள கருத்து வேறுபாடுகள் தீர்ந்து மனநிறைவுகளை அடைவீர்கள். பிள்ளைகளால் பொருள் வரவுகளும் மனநிம்மதியும் கிடைக்கும்.

## துலாம்

புதிய தொழில்களை ஆரம்பம் செய்யப் போட்டு இருந்த திட்டங்கள் நிறைவேறக் கூடிய காலமாகும். மற்றவர்களுக்காக உதவிசெய்வதாக எண்ணி சிக்கலில் மாட்டிக் கொள்ளாதீர்கள். பொருளாதாரத்தில் இருந்துவந்துள்ள நெருக்கடிகள் மாறிச் சிறிது முன்னேற்றமான சூழ்நிலை உண்டாகும். குலதெய்வ ஆலய வழிபாடு செய்து வருவதற்கான முயற்சிகளைச் செய்வீர்கள். தந்தை – மகன் உறவுகளில் வெகு காலமாக இருந்து வந்துள்ள கருத்து வேறுபாடுகள் தீர்ந்து மிக ஒற்றுமையுடன் காணப்படுவார்கள். விட்டுப்போன பழைய உறவுகள் மீண்டும் துலங்க வாய்ப்பு உள்ளது. உடம்பில் இரத்த சம்பந்தமான உபாதைகள் வந்துபோக வாய்ப்புகள் உள்ள காலமாகும். புதிய கடன் வாங்கிப் பழைய கடன்களை அடைக்க வாய்ப்பு உள்ளது.

## விருச்சிகம்

அண்டை அயல் வீட்டுக்காரர்களுடன் மிகவும் கவனமாகப் பேசிப்பழகுதல் நல்லதாகும். தந்தை – மகன் உறவுகளில் சிற்சில காரணமில்லாத பிரச்சினைகள் வந்துபோகலாம். குடும்பத்தில் சகோதர சகோதரிகளின் சுபகாரிய நிகழ்ச்சிகள் நடைபெறும். விளையாட்டுத் துறையைச் சார்ந்தவர்களுக்கு நற்பெயரும் மற்றும் புகழும் உண்டாகும். வெகுகாலமாக வராத கடன்கொடுத்து இருந்த பணம் மற்றும் பொருட்கள் நண்பர்களின் உதவியால் திரும்ப வீடு வந்துசேரும். நீண்டகாலமாகப் பிரச்சினைகள் உண்டாகிப் பிரிந்துபோன கணவன் – மனைவி இருவரும் திரும்ப ஒன்றுசேர வாய்ப்பு உள்ள காலமாகும். மாணவர்கள் கல்வியில் பரிசுகள் மற்றும் பாராட்டுக்களை பெறுவார்கள். பெண்களும் பாராட்டுக்களும் கிடைக்கும்.

## தனுசு

மற்றவர்களை நம்பிப் பணம்கொடுத்து ஏமாற்றம் அடையவேண்டாம். உடல் நிலையில் வாய், வயிறு, முதுகுவலி போன்ற சில உபாதைகள் வந்துபோகலாம். புதிய ஆடை அணிகலன் வாங்குவதைத் தள்ளிப்போடவும். பிள்ளைகளால் எதிர்பார்க்காத சில தொல்லைகளும் மருத்துவச் செலவுகளும் ஏற்படலாம். ஒரு சிலருக்குச் சொத்துக்களை விற்பதன் மூலம் பணம் வந்துசேரும். செய்தொழில் சம்பந்தமாகப் புதிய கூட்டு முயற்சிகளைச் சிறிது தள்ளிப்போடுதல் உகந்ததாகும். தொலைதூரப் பயணங்களைத் தள்ளிப் போடுதல் நல்லதாகும். திருட்டுப்போன பொருட்கள் திரும்ப வீடு வந்துசேரும். வேலை இல்லாதவர்களுக்குப் புதிய வேலைவாய்ப்புகள் தேடிவரும். எச்சரிக்கையுடன் கையாளுதல் நல்லது.

## மகரம்

புதிய ஆடை அணிகலன்களை வாங்குவதற்காக புதிய கடன்களை வாங்குவீர்கள். வீடுமற்றும் வாகனங்களைப் பழுது பார்க்கும் பொருட்டு பொருட்செலவுகள் உண்டாகலாம். நாட்பட்ட தீராத வியாதிகள் தீருவதற்காகப் புதிய மருத்துவர்களின் உதவிகளை நாடுவீர்கள். மாணவர்கள் கல்வியில் நினைத்த கல்லூரிகளில் பயிலும் வாய்ப்புகள் கிடைக்கும். குடும்பத்தில் திருமண விசயமாக காரணமில்லாத சிற்சில மனக்கசப்புகள் வந்துபோகும். குழந்தைகளுக்குப் பரிசுகள் மற்றும் பாராட்டுதல்கள் கிடைக்கலாம். வராத கடன்கொடுத்து இருந்த பணம் மற்றும் பொருட்கள் காவல்துறையினர்களின் உதவியால் திரும்பக் கிடைக்கும்.

## கும்பம்

உற்றார், உறவினர்கள் மற்றும் நண்பர்களின் எதிர்பாராத திடீர்வரவுகளால் பணம் மற்றும் பொருட்செலவுகள் ஏற்படும். வேலையில்லாத படித்தவர்களுக்குப் புதிய வேலை வாய்ப்புகள் வந்துசேரும். விளையாட்டுத் துறை சார்ந்தவர்கள் பரிசுகள் மற்றும் பாராட்டுக்களையும் சலுகைகளையும் பெறுவார்கள். மாணவர்களுக்கு கல்வியில் மிகுந்த கவனமுடன் பயின்றுவருதல் நல்லது. பழைய கடன்களை அடைத்துவிட்டுப் புதிய கடன்களை வாங்குவீர்கள். தொழிற்சாலைகள் மற்றும் இருப்பிடங்களை மாற்றி அமைப்பதற்கான முயற்சிகளில் சற்றுப் பின்னடைவுகள் ஏற்பட்ட போதிலும் பிரயாசையின் பேரில் இடங்களை மாற்றி அமைப்பீர்கள்.

## மீனம்

விவசாயம் செய்பவர்களுக்கு சுமாரான விளைச்சல்மூலம் நற்பலன் அடைவார்கள். கணவன் – மனைவியின் உறவுகளில் வெகுகாலமாக இருந்துவந்த கருத்து வேறுபாடுகள் தீர்ந்து மனநிம்மதி அடைவீர்கள். காணாமற்போன பொருட்கள் திரும்ப கை வந்துசேரும். திடீர் அதிர்ஷ்டமாகிய ரேஸ், லோட்டரி போன்றவற்றின் மூலமாக தனவரவுகள் உண்டாகலாம். தீராத நாட்பட்ட நோய்கள் தீருவதற்காக புதிய மருத்துவர்களின் உதவிகளை நாடிச்செல்லுவீர்கள். உறவினர்களால் எதிர்பாராத பொருட்செலவுகள் உண்டாகக் கூடிய காலமாகும். வெளிநாடு சென்று வருவதற்கான முயற்சிகளுக்காக மற்றவர்களை நம்பிப் பணம் பொருட்களை கொடுத்து ஏமாற்றம் அடையவேண்டாம்.

Regd. as a News paper at the G.P.O.(QD/86/NEWS/2012)

இந்த வினோத குட்டியின் இரகசியத்தை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டாமா...?

மெக்ஸிகோவிலுள்ள ரேனோஸா மிருகக்காட்சி சாலையில் வரிக்குதிரைக்கும், கழுதைக்கும் இடையே இடம்பெற்ற அரிய இனக்கலவி மூலம் கழுதை போன்ற உடலையும் வரிக்குதிரை போன்ற கால்களையும்கொண்ட விநோத குட்டியொன்று பிறந்துள்ளது.

ரேயஸ் என்ற பெண் வரிக்குதிரைக்கும் அருகிலிருந்த பண்ணையொன்றைச் சேர்ந்த இக்னேசிபோ என்ற கழுதைக்குமிடையில் ஏற்பட்ட இனக்கலவி மூலம் பிறந்த குட்டிக்கு கும்பா எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

ஏற்கனவே கடந்த வருடம் இத்தாலியில் வரிக்குதிரைக்கும் கழுதைக்கும் இடையிலான இனக்கலவி மூலம் குட்டி ஒன்று பிறந்தமை உலகளாவிய ரீதியில் பரபரப்பாக பேசப்பட்டமை குறிப்பிடத்தக்கது.






Registered as a News Paper in Sri lanka

இலவச இணைப்பு

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு - 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 வைகாசி 01 வியாழக்கிழமை (15.05.2014) பக்கங்கள் IV ஓசை - 226

### அரசியலுரிமைப் பிரச்சினைக்கு தீர்வு கிட்டினால்

## நில அபகரிப்பு, படைக்குவிப்பென எவரும் நீலிக்கண்ணீர் வடிக்க முடியாது



### அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

தமிழ் பேசும் மக்களின் அரசியலுரிமைப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு கிடைத்துவிட்டால் இங்கு நில அபகரிப்பும், படைக்குவிப்பும் நடக்கின்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நீலிக்கண்ணீர் வடிக்க வேண்டிய அவசியம் இருக்காது என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் பேசும் மக்களின் அரசியலுரிமைப் பிரச்சினைக்குத் தீர்வு காண நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிற்கு வாருங்கள் என நான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை. நோக்கி தொடர்ச்சியாக பகிரங்க அழைப்பு விடுத்து வருகின்றேன்.

இறுதியாக நான் விடுத்த அறிக்கைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் விடுத்திருந்த பதிலறிக்கையில், சுயலாப அரசியல் சேற்றில் ஊறிப்பெருத்த அவர்களது பொய் முகங்களே தெரிகின்றன.

எமது மக்கள் நலன் சார்ந்து

IV ஆம் பக்கம் பார்க்க

### பொது வேட்பாளராக அமெரிக்கத் தூதுவர்

**விவசாய அமைச்சர் ஆலோசனை**

(கொழும்பு)

நடைபெறவுள்ளதாகக் கூறப்படும் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக நிறுத்த இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் மிசேல் சிஸன் மிகவும் பொருத்தமானவர் என விவசாய அமைச்சர் மகிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிகள் பொதுவேட்பாளராக நிறுத்த எண்ணியிருக்கும் நபர்களை விட தகுதிகளில் அவர் முன்னணியில் இருப்பதாகவும் அவர்

IV ஆம் பக்கம் பார்க்க



# பிரச்சினைக்கு உள்நாட்டில் தீர்வு தவறின் லிபியா, எகிப்து நிலை

### எச்சரிக்கிறார் அமைச்சர் டியூ

(கொழும்பு)

இலங்கைப் பிரச்சினையை நாமே தீர்த்துக் கொள்ளவில்லை என்றால் பிரச்சினை அதிகரிக்கும் என்றும் லிபியா, எகிப்து நிலைமைகள் இதனையே சுட்டிக்காட்டுவதாகவும் சிரேஷ்ட அமைச்சர் டியூ. குணசேகர எச்சரித்துள்ளார்.

இலங்கையின் பிரச்சினை ஒன்று தற்போது வெளிநாடுகளுக்கு சென்றுள்ளது. எமது அரசியல் தலைவர்கள் இந்தப் பிரச்சினையை தீர்க்க வெளிநாடுகளுக்கு செல்கின்றனர். நாட்டின் அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்தால், இந்தப் பிரச்சினையை எம்மால் தீர்க்க முடியும். நாட்டின் சுதந்திரத்திற்குப் பின்னர், தேசியப் பிரச்சினை தொடர்பில் தீர்வைக் காண நாட்டில் சகல அரசியல் கட்சிகளுக்கும் தெரிவுக் குழு ஒன்றுக்கு வர முடியாது போயுள்ளது.

நாட்டின் தேசியப் பிரச்சினை தொடர்பாக பொது இணக்கத்திற்கு வந்து உரிய அரசியல் அமைப்பு மாற்றங்களைச் செய்து மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியும். இதனைச் செய்ய முடியாத காரணத்தினால், அந்தப் பிரச்சினை ஒவ்வொரு இடங்களுக்கு சென்றுள்ளது. அத்துடன் தேசியப் பிரச்சினை தற்போது சர்வதேச மயமாகியுள்ளது.

இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணாது போனால், சர்வதேச சக்திகள் நாட்டுக்குள் பிரவேசிக்கும். அதனை தடுக்க முடியாது போகும்.

இதனை நாம் லிபியாவிலும், எகிப்திலும், சிரியாவிலும், கிரிமியாவிலும், ஆப்கானிஸ்தானிலும், ஈராக்கிலும் பார்த்துள்ளோம். இதன் காரணமாக அண்மைக் கால வரலாறு அனுபவங்களை கவனத்தில் கொண்டு தேசிய ஐக்கியத்தை ஏற்படுத்த முயற்சிக்க வேண்டும்.

IV ஆம் பக்கம் பார்க்க

## தடைக்கான ஆதாரங்களை எதிர்பார்க்கும் ஐரோ. ஒன்றியம்

(கொழும்பு)

தீவிரவாதத்துடன் தொடர்புடையவர்கள் என்று இலங்கை அரசாங்கத்தினால், தடைசெய்யப்பட்டுள்ள தனிநபர்கள் மற்றும் புலம்பெயர் அமைப்புகள் தொடர்பான ஆதாரங்களை வெளியிடவில்லை என்றும், அத்தகைய ஆதாரங்களை இலங்கை அரசிடம் இருந்து எதிர்பார்ப்பதாகவும், ஐரோப்பிய ஒன்றியத்தின் கொழும்புக்கான தூதுவர் டேவிட் டலி தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசின் தடைப்பட்டியல் தொடர்பான ஐரோப்பிய ஒன்றியத்தின் நிலைப்பாடு

IV ஆம் பக்கம் பார்க்க

## விசாரணை பிரதிநிதிகள் மாத இறுதியில் நியமனம்?

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை, இந்த மாத இறுதியில் இலங்கை தொடர்பிலான விசாரணை நடாத்தும் ஆணைக்குழுவிற்கான பிரதிநிதிகளை நியமிப்பார் என தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை மாநாட்டில் இலங்கை தொடர்பில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

இதற்கு அமைவாக இந்த மாத இறுதியில் விசாரணை நடாத்தும் ஆணைக்குழுவிற்கான பிரதிநிதிகளை, நவநீதம்பிள்ளை பெயரிடவுள்ளார்.

எதிர்வரும் மாத முதல் வாரமளவில் விசாரணைப் பணிகள் ஆரம்பமாகும் என தெரிவிக்கப்படுகிறது.

ஆணைக்குழு தொடர்பிலான சகல தகவல்களையும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை இலங்கை அரசாங்கத்திற்கு

IV ஆம் பக்கம் பார்க்க

## இலங்கை மீது அழுத்தங்கள் ஏன்? விளக்குகிறார் அமைச்சர் கெஹலிய



(கொழும்பு)

போரை நிறுத்துமாறு பல நாடுகளிடமிருந்து அழுத்தங்கள் வந்தபோதிலும் அவற்றை ஜனாதிபதி நிராகரித்த காரணத்தாலேயே இன்று இலங்கை பல்வேறு அழுத்தங்களை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய போது அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாட்டைப் பிளவுபடுத்த நினைக்கும் சில குழுக்களின் மனோநிலையில் மாற்றம் ஏற்படும்.


இலங்கை தொடர்பாக எதிர்மறையான விம்பத்தைக் கொண்டுள்ளவர்களுடன் பேச்சு நடத்துவதற்கு, ஒரு மூலோபாயம் வகுக்கப்பட்டுள்ளது.

போரின் இறுதிக்கட்டத்தில், பல்வேறு நாடுகளிடம் இருந்து போரை நிறுத்துமாறு கடுமையான அழுத்தங்களை அரசாங்கம் எதிர்கொள்ள நேரிட்டது.

சில நாடுகள், முன்கூட்டியே

IV ஆம் பக்கம் பார்க்க

## சுவாமி சித்ரூபானந்தா அமரத்துவம் அடைந்தார்



(யாழப்பாணம்)

பருத்தித்துறை, ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தின் ஸ்தாபகரும் அதனை நெறிப்படுத்தி வந்தவருமான சுவாமி சித்ரூபானந்தா (வயது - 77) நேற்றுப் பிற்பகல் ஆச்சிரமப் பணியில் ஈடுபட்டிருந்த சமயம் அமரத்துவம் அடைந்தார்.

அவரின் இறுதிக் கிரியைகள் இன்று காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளன. 1970 ஆம் ஆண்டு துறவறம் பூண்டு சிறிய கொட்டகையில் தமது ஆச்சிரமத்தை அவர் தொடக்கி வைத்தார். அப்போது அவரது இயற்பெயர் பி.இரத்தினசபாபதி. 1975 இல் வடஇந்தியாவுக்கு திருத்தல யாத்திரை சென்ற அவர்

IV ஆம் பக்கம் பார்க்க

## வெளிநாடுகளில் பணியாற்றும் இலங்கைப் பணியாளர் நிலை ஆராய வருகிறார் ஐ.நா. பிரதிநிதி

வெளிநாடுகளில் பணியாற்றும் இலங்கையர்கள் பணிகளில் சேரும் போது பல்வேறு துஷ்பிரயோகங்களுக்கு உட்படுவதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகளின் புலம்பெயர்ந்தோரின் மனித உரிமைகளுக்கான விசேட பிரதிநிதி பிரான்ஸிஸ் க்ரிபீன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

IV ஆம் பக்கம் பார்க்க

# தூக்கில் தொங்கிய நிலையில்
## யுவதியின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

தூக்கில் தொங்கிய நிலையில் யுவதி ஒருவரின் சடலம் நேற்று இணுவிலில் மீட்கப்பட்டுள்ளது.

இணுவில் கிழக்கு, இணுவிலைச் சேர்ந்த திருச்செல்வம் நேத்திரி (வயது-19) என்ற யுவதியே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த யுவதி பேத்தியாருக்கு உதவியாக அவரது வீட்டில் நீண்ட காலமாக வாழ்ந்து வந்துள்ளார். க.பொ.த. உயர் தரம் பயின்று விட்டு காப்புறுதி நிறுவனம் ஒன்றில் வேலை செய்துள்ளார்.

நேற்றுக் காலை முகம் கழுவிவிட்டு வீட்டில் இருந்துள்ளார். பேத்தியாரும், சகோதரனும் கோவிலுக்குச் சென்று விட்டு வீடு திரும்பிய போது யுவதி தூக்கில் தொங்கிய நிலையில் இருப்பதைக் கண்டதாக விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

சடலம் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டு மரண விசாரணையின் பின்னர் நேற்று மாலை உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டதுடன் இத்தூக்கு சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (இ)

□ □ □ □ □

## இளம் குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

மதுபோதையில் குடும்பத்தினருடன் சண்டையிட்ட இளம் குடும்ப ஸ்தர் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் இச்சம்பவம் அச்செழுப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

ஒரு பிள்ளையின் தந்தையான யோகராசா ஜெகதாஸ் (வயது-23) என்ற குடும்பஸ்தரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு மது போதையில் வீடு வந்த குடும்பஸ்தர் மனைவியுடன் தகராறில் ஈடுபட்டதுடன், மிரட்டியும் உள்ளார். இதனால் மனைவி வீட்டுக்கு வெளியே ஓடி மறைந்ததுடன் சிறிது நேரம் கழித்து வீட்டினுள் நுழைந்த போது கணவன் தூக்கில் தொங்கிய நிலையில் கண்டு மீட்டதாக மனைவி பொலிஸ் விசாரணையின் போது தெரிவித்துள்ளார்.

சடலம் நேற்று மாலை பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்ட நிலையில் அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர். (இ)

# பயணிகள் பேருந்துச் சேவை இரவு நேரம் விஸ்தரிப்பு

(யாழ்ப்பாணம்)

வெசாக் கொண்டாட்டத்தை முன்னிட்டு பயணிகளுக்கான பஸ் சேவைகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபையின் யாழ்சாலையினர் தெரிவித்தனர்.

நேற்று ஆரம்பமான வெசாக் கொண்டாட்டத்தை முன்னிட்டு நேற்று இரவு மக்களின் வரவுக்கமைவாக சேவைகள் நள்ளிரவு வரை நீடிக்கப்பட்டுள்ளது. துரையப்பா விளையாட்டரங்கப் பகுதியிலிருந்து இச்சேவைகள் இடம்பெறுவதாகவும், பிரதான மார்க்கங்களுக்கான சேவைகள் பயணிகள் வரவுக்கமைவாக இடம்பெறுவதாகவும், இரு நாட்களுக்காக யாழ். படைத்தரப்பினரால் விண்ணப்பிக்கப்பட்டிருந்ததுடன், அது மக்களின் வரவுக்கமைய 20 ஆம் திகதி வரை நீடிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# உயிர்கூட்டில் வலியெடுக்கும் நெஞ்சகலா நினைவலைகள்
## உதயன் எம்.பி. அனுதாபம்



என்தாய் மண்ணில் என் உறவுகள் ஒரேதினமான மடிந்த இந்த நாள் என்னும் என் உயிர் கூட்டில் வலிக்கிறது. நீலக்கடல் அலையெல்லாம் குருதிச் சிவப்பாய் கொந்தளித்த காலம். அது மரண ஓலமும் கண்ணீர் ஆறுகளும் என் தாய் மண்ணை நிரப்பிய காலம் ஆண்டிற்கு ஒருமுறை வருடங்கள் கழிய வைகாசி பிறப்பெடுக்க எம் கண்களும் கலங்குகின்ற காலமாய் மாறுகின்றது என குமுதினி சம்பவத்தின் 29 ஆவது வருட நினைவு தினத்தை முன்னிட்டு ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

எப்படி மறப்போம் எதை மறப்போம். துடிதுடித்த அந்தக் கணங்களை எல்லாம் எப்படி மறந்து போகும் எவ்வாறு மறைந்து போகும். கல்வெட்டிலே நாமங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் அவர்கள் நினைவுகள் ஒவ்வொன்றும் எம்மூச்சோடு கலந்து இருக்கிறது.

இன்னும் சுமக்கிறாள் எங்களை ஏற்றி இறக்குகிறாள். ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எண்பத்தைந்தாம் ஆண்டு வைகாசி மாதம் 15 ஆம் திகதி நெடுந்தீவில் ஏற்றியவர்களை குறிகட்டுவானில் சுகப்பிரசவம் செய்ய முடியவில்லை என்று இன்னும் அழுகிறாள்.

எல்லாம் வல்லவனே எம்படைப்பின் மூலமே அவர்கள் ஆத்மா சாந்தியடைய என்னும் உன்னை வேண்டுகின்றோம்.

## கருத்துரையும், கலந்துரையாடலும்

சமூக விஞ்ஞான படிப்பு வட்டம் நடத்தும் கருத்தரங்கு இன்று பிற்பகல் 3.30 மணிக்கு திருநெல்வேலி செயற்திறன் இயக்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் 'இன்றைய சமூக பொருளாதார பிறழ்களும் சமூக காரணிகளும்' என்ற தலைப்பில் தொடக்கவுரை யினை வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் க.சிவகரன், கருத்துரையினை யாழ்.பல்கலைக்கழக சமூகவியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணன் ஆற்றவுள்ளனர். இக்கருத்துரையினைத் தொடர்ந்து கலந்துரையாடலும் இடம்பெறும். இதில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு சமூக விஞ்ஞான படிப்பு வட்டம் அழைத்துள்ளது.


## சிறு விளம்பரங்கள்

### வேலைவாய்ப்பு

நிரந்தரமான தொழில், நிரந்தரமான சம்பளத்துடன் 24,000.00 - 38,000.00 வரை. வருகை தரும் தினமே சேர்த்துக்கொள்ளப்படுவர். (உற்பத்தி பொதியிடல், மேற்பார்வையாளர்) சாப்பாடு, தங்குமிட வசதியுண்டு. 18 - 55 வயது வரையான ஆண், பெண்களும், குழுக்களாகவும் இணைந்து கொள்ளலாம். தொ.பே-0710854068.

□ □ □ □ □

விமான நிலையம் (தனியார்) பகுதிக்கு சுத்திகரிப்பாளர், பாதுகாப்பாளர், பெக்கிங் 18 - 55 வரையான ஆண், பெண் தேவை. சம்பளம் 18,000.00-35,000.00 வரை. தங்குமிடம், உணவு, பயிற்சி வழங்கப்படும். வேலை தேடி அங்கும் இங்கும் அலையாமல் இன்றே அழையுங்கள். தொ.பே-0775964299 (R/348)

□ □ □ □ □

### டயானா பிளாஸ்ரிக்

*ரீசைக்கிள் (மீள் சுழற்சி)*

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
021 222 8680,
077 592 5088.
(C/3395)



### இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி நடாத்தும் இயல் இசை நாடகவிழா - 2014

**15.05.2014 இரண்டாம் நாள்**

நேரம் : பி.ப 4.00 மணி

இடம் : இலங்கைவேந்தன் கலைக்கல்லூரி
63, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.

**பிரதம விருந்தினர்**
திரு.வே.க.கணபதிப்பிள்ளை
(அதிபர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை)

நாச்சிமார் கோவிலடி "பிரபா" குழுவினர் வழங்கும்
மங்கல இசை

நாதஸ்வரம்: திரு.சி.பிரபாகரன், திரு.ச.சந்திரகுமார்
தவில்: திரு.ச.கரி, திரு.கு.கோகுலன்

மங்கல விளக்கேற்றல்
தேவாரம் : செல்வி பிரியங்கா இராசலிங்கம்
ஆசியுரை : வண.கலைமாணி மீகஹஜந்துரே சிறி விமல தேரர் (ஸ்ரீ நாக விகாரை - யாழ்ப்பாணம்)

வாழ்த்துரை : திரு.அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை

☆ சைவச் சிறுவர் இல்ல மாணவ மாணவிகள் வழங்கும்
யோகக்கலை

குரலிசை
பாட்டு : திரு.தவநாதன் றொபேட்
வயலின் : திரு.அ.ஜெயராமன்
மிருதங்கம் : திரு. க.கஜன்
கடம் : திரு.நா.மாதவன்
கஞ்சிரா : திரு.நா.சிவசுந்தர்
முகர்சிங் : திரு.சி.செந்தூரன்
தம்புரா : திரு.க.ரஜீவன்

☆ "பரத கலாகேந்திரம்" மாணவிகள் வழங்கும்
நாட்டியாஞ்சலி

நட்டுவாங்கம் : திருமதி. வசந்தி குஞ்சிதபாதம்
பாட்டு : திரு. சி.விவிஷன்
வயலின் : திரு.அ.ஜெயராமன்
மிருதங்கம் : திரு.க.நந்தகுமார்

☆ லி.அனிருத்திரனின் மாணவர்கள் வழங்கும்
கிண்கிணிநாதம்

நட்டுவாங்கம் : திரு.லிங்கராஜா அனிருத்தன்
பாட்டு : திரு. சி.விபிஷன்
வயலின் : திரு.அ.ஜெயராமன்
மிருதங்கம் : திரு.G.கண்ணதாஸ்

◆ கலைஞர்கள் கௌரவிப்பு
◆ பிரதம விருந்தினர் உரை
◆ கலைவேந்தன் ம. தைரியநாதன் குழுவினர் வழங்கும் மயான காண்டம் (இசை நாடகம்)
◆ நன்றியுரை

அனுசரணை
ஸ்ரீ மீனாட்சி நகையகம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

(C/3679)



அனைவருக்கும் பகிரப்பட்ட, விஸ்தரிக்கப்பட்ட, சமனான பரிசமைப்பு

### நியத்த ஜய
உத்தியோகபூர்வ முடிவு

வெற்றி வாரம் - 255
திகதி - 2014.05.13
வர்ணம் - மஞ்சள்

வெற்றி இலக்கங்கள்: 28 42 49 53 | ஆங்கில எழுத்து: K

பரிசுத் தொகை ரூபா. 18,615,960/- வெல்லப்படவில்லை

| பரிசு வகை | பரிசுத் தொகை ரூ. | வெற்றியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பரிசுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுக்கு | 1,000,000/- | 01 | 1,000,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 50,000/- | 07 | 350,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்களுக்கு | 1,000/- | 200 | 200,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 1,000/- | 335 | 335,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்களுக்கு | 60/- | 9366 | 561,960/- |
| ஏதேனும் 1 இலக்கம் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 40/- | 4873 | 194,920/- |
| ஏதேனும் 1 இலக்கத்திற்கு | 20/- | 121605 | 2,432,100/- |
| ஆங்கில எழுத்திற்கு | 20/- | 17617 | 352,340/- |
| நான்கு இலக்கங்கள மற்றும் ஆங்கில எழுத்து பொருந்துவதன் மூலம் | 18,615,960/- | - | - |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | | | 5,426,320/- |

எதிர்வரும் வெள்ளிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசுத்தொகை ரூபா. 18,854,000/-

2014.05.16ம் திகதி வெள்ளிகிழமை அடுத்த சீட்டிழுப்புக்கு செல்லுப்படியாவது நீல வர்ண டிக்கட்களாகும்
வெற்றி பெறும் டிக்கட்கள் 6 மாதத்திற்கு செல்லுப்படியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை.
யூனியன் ப்லேஸ், கொழும்பு - 02.
தொ.பே: 011 2333546/47
web : www.dlb.lk
(C/3673)

# வாழ்வில் யதார்த்தமாக மாறியுள்ள ஆசிய நாடுகளில் சித்திரவதை

## சர்வதேச மன்னிப்புச் சபை விசனம்

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், சீனா உட்பட ஆசிய நாடுகளில், சித்திரவதை வாழ்வில் யதார்த்தமாக உள்ளதெனவும் இதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் சர்வதேச மன்னிப்புச்சபை கூறியுள்ளது.

சித்திரவதை என்பது ஆசிய நாடுகளில் பரவலாக காணப்படுகின்றது. இந்தப் பிரச்சினை ஒரு சர்வாதிகார நாடுகளுடன் மட்டுப்படுத்தப்பட்டதாக இல்லை. இது இந்தப் பிராந்தியம் முழுவதற்கும் உரியதாக உள்ளது என சர்வதேச மன்னிப்புச்சபையின் ஆசிய - பசுபிக் பணிப்பாளர் ரிச்சர்ட் பெனர்ட் கூறியுள்ளார்.

ஆசிய நாடுகளில் சித்திரவதையை முடிவுக்கு கொண்டு வருவதற்கான தமது பொறுப்பை பேச்சுடன் நிறுத்திவிடக் கூடாது எனவும், சர்வதேச ஒப்பந்தங்களில் கையொப்பமிடுவது முக்கியமானதே. ஆனால் அது மட்டும் போதுமானது அல்ல. அதை செயல் மூலமும் வெளிப்படுத்த வேண்டும் எனவும் "சித்திரவதையை நிறுத்து" எனும் பிரசார இயக்கத்தை ஆரம்பித்து வைத்த சந்தர்ப்பத்தில் அவர் கூறியுள்ளார்.

சீனா, இந்தியா, இந்தோனேசியா, மலேசியா, பாகிஸ்தான், இலங்கை, வியட்நாம் போன்ற நாடுகளில் ஒப்புதல் வாக்கு மூலம் பெறவும், செயற்பாட்டாளர்களை செயற்படவிடாமல் தடுக்கவும், சித்திரவதை பயன்படுத்தப்படுகின்றது என இந்த நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

மியன்மார், நேபாளம் போன்ற நாடுகளில் சித்திரவதையில் இருந்து தப்பிக்கொள்ள கப்பம் கொடுக்க முடியாத ஏழைகளிடம் பணம் பெற்றுக் கொள்ள சித்திரவதை பயன்படுத்தப்படுகின்றது.

கடந்த 5 வருட காலத்தில் உலகில் குறைந்தபட்சம் 141 நாடுகளில் சித்திரவதையும் வேறு மோசமான வழிகளும் பயன்படுத்தப்படுவதாக சர்வதேச மன்னிப்புச்சபை மேலும் குறிப்பிட்டுள்ளது.

பல ஆசிய - பசுபிக் நாடுகளில் சித்திரவதையின் பயன்பாடும் வேறு கொடூரமான மனிதத்தன்மையற்ற அல்லது கேவலப்படுத்தும் தண்டனைகள் சாதாரணமானவை எனவும், அவை உயர்மட்ட குற்றச்செயல்களுக்கு உரிய தண்டனை எனவும் பலரால் ஏற்றுக்கொள்ளப்படுவதாக சர்வதேச மன்னிப்புச்சபை கூறியுள்ளது.

ஐ.நா.வில் 1984 ஆம் ஆண்டு சித்திரவதைக்கு எதிரான ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டு 30 வருடங்கள் கழிந்த பின்னரும் குறைந்தபட்சம் 23 ஆசிய, பசுபிக் நாடுகளில் தற்போதும் சித்திரவதை இடம்பெறுகிறது என சரவதேச மன்னிப்புச்சபை மேலும குறிப்பிட்டுள்ளது.

# அனைத்து பல்கலை மாணவர் ஒன்றியம் பதிவுசெய்யப்பட்ட சங்கம் அல்ல

## உயர்கல்வி அமைச்சர் விளக்கம்

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் என்பது நாட்டிற்குள் பதிவுசெய்யப்பட்ட சங்கம் அல்ல. அத்துடன் தேசத்துக்கு மகுடம் கண்காட்சி பல்கலைக் கழகத்திற்கு நன்மைகள் கிடைக்கும் ஒன்று என்பதால், அதனை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது என உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

வயம்ப பல்கலைக்கழகத்தில் அண்மையில் நடத்தப்பட்ட தேசத்துக்கு மகுடம் கண்காட்சி காரணமாக இந்தப் பல்கலைக்கழகத்திற்கு 15 மில்லியன் ரூபாவுக்கும் மேல் கிடைத்தது.

இதனால் ருஹுணு பல்கலைக்கழகத்தில் நடத்தப்படவுள்ள கண்காட்சியை தடுக்க அமைச்சு இடமளிக்காது. அப்படிச் செய்ய முயற்சித்தால், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் மாணவர்களும், அவர்களின் பெற்றோரும் ஓடி ஒழிய தற்போதே இடங்களை தேட ஆரம்பிக்க வேண்டும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# கடந்த நான்கு மாதத்தில் மட்டும் கொழும்பில் 52 பேருக்கு எயிட்ஸ்

(கொழும்பு)

கொழும்பு மாவட்டத்தில் கடந்த ஜனவரி மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரை 52 எயிட்ஸ் நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டதாக பாலியல் நோய் மற்றும் எயிட்ஸ் தடுப்புத் திட்டத்தின் பணிப்பாளர் மருத்துவர் சிசிர லியனகே தெரிவித்துள்ளார்.

இவர்களில் அதிகளவானோர் ஆண்கள் எனவும் அவர்களில் 15 மற்றும் 25 வயதுக்கு உட்பட்டவர்களே அதிகளவில் இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

கடந்த வருடம் முழுவதும் நாட்டில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வு பிரசாரங்களை முன்னெடுத்த போதும், இந்த வருடத்தின் முதல் நான்கு மாதங்களில் எயிட்ஸ் நோயாளிகள் அதிகரித்துள்ளனர் எனவும் லியனகே குறிப்பிட்டுள்ளார்.

# முதிரைமர யன்னல் திருட்டு; இருவருக்கு விளக்கமறியல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளை பிரதேசத்தில் வீடொன்றில் இருந்து முதிரை மரத்தினால் செய்யப்பட்ட யன்னல்களை திருடிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரையும் எதிர்வரும் 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதவான் மா.கணேசராஜா கடந்த திங்கட்கிழமை உத்தரவிட்டார்.

கடந்த ஒரு மாதத்திற்கு முன்னர் முள்ளியவளை பிரதேசத்திலுள்ள வீடொன்றிலிருந்து முதிரை மரத்தினால் செய்யப்பட்ட யன்னல்களை குறித்த சந்தேக நபர்கள் இருவரும் திருடிச் சென்றதுடன் அதனை முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பகுதியிலுள்ள நபர் ஒருவருக்கு விற்பனை செய்துள்ளனர்.

இதுதொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் குறித்த திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் குறித்த இருவரையும் கடந்த ஞாயிற்றுக் கிழமை கைதுசெய்துள்ளதுடன், அவ்விருவரையும் மறுநாள் திங்கட்கிழமை நீதிமன்றில் ஆஜர் செய்த போதே பதின்நான்கு நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

# வவுனியா இளைஞன் மட்டு.வில் சடலமாக மீட்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நாவலடி கடற்கரையில் நேற்று இளைஞர் ஒருவரின் சடலம் கரையொதுங்கியுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் மட்டக்களப்பு தனியார் வங்கியொன்றில் காசாளராக கடமை புரியும் வவுனியாவைச் சேர்ந்த எம்.லதீஸன் (வயது - 23) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.


குறித்த இளைஞரின் மரணம் தொடர்பாக காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

### அகதியெனக் கூறி தமிழகம் சென்ற

# இலங்கைத் தம்பதியினரை கைதுசெய்ய நடவடிக்கை

தமிழகத்திற்கு அகதியாக வந்த இலங்கைத் தமிழர்கள் இருவரை (தம்பதி) கைதுசெயய, இன்டர்போல் பொலிஸாரின் உதவியை இலங்கை அரசாங்கம் நாடியிருப்பதாக இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

முல்லைத்தீவுப் பகுதியிலிருந்து கடந்த 5 ஆம் திகதி தனுஷ்கோடி அரிச்சல்முனை பகுதிக்கு 2 தனித்தனிப் படகுகளில் இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த 5 சிறுவர்கள் உட்பட 10 பேர் அகதிகளாக வந்தனர். இலங்கை இராணுவத்தினரால் எங்கள் உயிருக்கு அச்சுறுத்தல் இருக்கிறது. இதனால் உயிர் பிழைப்பதற்காகவே அகதிகளாக இராமேஸ்வரம் வந்தோம் என்று அவர்கள் தெரிவித்திருந்தனர்.



முன்னதாக, அகதிகளாக வந்த கதிர்வேலு தயாபரராஜா மற்றும் அவரது மனைவி உதய கலா ஆகிய இருவரும் பல்வேறு பண மோசடியில் ஈடுபட்டதாக இலங்கையிலுள்ள பல பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் செய்யப்பட்டு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மட்டக்களப்பு, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் சாவகச்சேரி ஆகிய நீதிமன்றங்களில் பிடிவிறாந்துகளும் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

தற்போது, இந்த தம்பதியர் தஞ்சம் கோரி தமிழகத்திற்கு வந்துள்ள செய்தி, இலங்கையிலுள்ள ஊடகங்களில் படத்துடன் வெளியாகின. இதனைப் பார்த்த இந்தத் தம்பதியினரால் பாதிக்கப்பட்டவர்கள் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் மீண்டும் புகார் அளித்தனர். இதனைத் தொடர்ந்து,

பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்து தயாபரராஜா, உதய கலா தம்பதியினரை இன்டர்போல் பொலிஸாரின் உதவியுடன் கைதுசெய்து இலங்கைக்குக் கொண்டு வரும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர் என்றும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



வெசாக் தினத்தை முன்னிட்டு யாழ். மாவட்ட பாதுகாப்புப் படைத் தலைமையகம் யாழ். நகரில் ஏற்பாடு செய்த நிகழ்வில் நேற்றிரவு புத்தரின் உருவச்சிலையை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, படைத்தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேரா ஆகியோர் திறந்து வைப்பதையும், புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்கு கல்வி ஊக்குவிப்பு நிதி வழங்கப்படுவதையும், நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் காணலாம். (25)

# நில அபகரிப்பு...

நான் விடுத்திருக்கும் அழைப்பை அரசாங்கத்தின் சிந்தனைக்கு செயல்வடிவம் கொடுப்பதாகக் கூறும் சுரேஷ் பிரேமச்சந்திரன்,

இந்தியப்படை இங்கு நிலை கொண்டிருந்த வேளை அதிகார மிடுக்கில் அவர் விடுத்த அறிக்கைகள் யாவும் இந்திய அரசின் சிந்தனைக்கு செயல் வடிவம் கொடுப்பதற்காக விடுக்கப்பட்ட அறிக்கைகள் என்று அர்த்தமா?

அல்லது, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் ஆட்சிக் காலத்தில் இன்றைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கீழ் கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சின் ஆலோசகராக சுரேஷ் பிரேமச்சந்திரன் தொழில் புரிந்தபோது அவர் விடுத்த அறிக்கைகள் யாவும் அன்றைய சந்திரிக்கா அரசின் சிந்தனைக்கு செயல்வடிவம் கொடுக்க விடுக்கப்பட்ட அறிக்கைகள் என்று அர்த்தமா?

அல்லது அவர் அன்று கூறிய கருத்துக்கள் யாவும் அவர் சார்ந்திருந்த அரசுகளின் ஊதுகுழல் அறிக்கைகளா?

போர் நடந்த போது, போர் முடிவடைந்தால் அரசியலில் இருந்து ஒதுங்குவேன் என்று நான் கூறியதாக, கனவு கண்டவர் போல் பொய் கூறி புலம்புகிறார் சுரேஷ் பிரேமச்சந்திரன்.

ஆகாயத்தை பிளந்து சென்று சூரியனையும் சந்திரனையும் பிடித்து பூமிக்கு கொண்டு வருவேன் என்று வாக்குறுதி கொடுத்தவன் நான் அல்ல.

இந்த வெட்டி வீரப்பேச்சுக்களால் எமது மக்களை நடு வீதிக்கு கொண்டு வந்து நிறுத்தியவர்களும் நாம் அல்லர்.

நடைமுறைசட சாத்தியமான வழிமுறைகள் குறித்து சிந்தித்து செயற்பட்டவர்கள் நாம் என்பதும், நடந்தேற முடியாத கோரிக்கைகளை முன்வைத்து, வாக்குகளுக்காக வாக்குறுதிகளை அள்ளி வழங்கி, எமது மக்களை அழிய கொடுத்துவிட்டு ஓடிப்போனவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் என்பதும் உலகறிந்த உண்மை.

யுத்தத்தின் பின்னர் மட்டுமல்ல, அழிவு யுத்தம் நடந்த காலத்திலும் எமது மக்களின் அவலங்களை துடைக்க மக்களை கைவிட்டு எங்கும் ஓடிப்போகாமல் உழைத்தவர்கள் நாம்.

இன்று நேற்றல்ல, இந்தியப் படை காலத்தில் வடக்கு, கிழக்கில் இருந்து சுரேஷ் பிரேமச்சந்திரனின் அதிகார வன்முறைக்கு அஞ்சி, கொழும்பு நோக்கி ஓடி வந்த எமது இளைஞர், யுவதிகளை கொழும்பில் புனர்வாழ்வு முகாம்கள் அமைத்து அவர்களை பாதுகாத்து, அநீதிகளை அன்றும் தட்டிக்கேட்டவர்கள் நாம்.

மங்கள முனசிங்க காலத்தில் தெரிவுக்குழுவில் எதுவும் நடக்கவில்லை என்பது உண்மை. அந்த சூழலும் வேறு. ஆறு மாத கால அவகாசம் வழங்கி, அரசாங்கம் இன்று அழைக்கிறது.

நானும் கலந்து கொள்ளும் இந்தத் தெரிவுக் குழுவில் பங்கெடுக்க வாருங்கள் என்றுதான் அழைக்கிறேன்.

அதில் தீர்வு கிட்டவில்லை என்றால், அரசாங்கம் நீதியாக நடந்து கொள்ளவில்லை என்றால், தெரிவுக் குழுவில் இருந்து மட்டுமல்ல அரசில் இருந்தே நானும் வெளியேறத் தயார் என்றே கூறுகின்றேன்.

அதன் பின்னர் அரசாங்கம் மீது வைக்கப்படும் விமர்சனங்களை நானும் ஏற்றுக்கொள்வேன். நானும் விமர்சனங்களை முன்வைப்பேன்.

அறுபது ஆண்டுகளாக உரிமைகள் இல்லை என்று இருந்த நாம் ஆறு மாதங்கள் மட்டும் முயன்று பார்ப்பதில் ஏன் தயக்கம் என்றுதான் கேட்கிறேன்?

மங்கள முனசிங்க காலத்தில் தெரிவுக்குழுவில் எதுவும் நடக்கவில்லை என்று கூறும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருப்பவர்கள், டட்லி - செல்வா, பண்டா - செல்வா காலத்தில் இருந்தே நாடாளுமன்றத்தில் இருந்து வருகின்றார்கள்.

நாடாளுமன்றத்தின் ஊடாக அன்று அரசியலுரிமைப் பிரச்சினைக்குத் தீர்வு கிட்டவில்லை என்பதற்காக, இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நாடாளுமன்றத்தை பகிஷ்கரித்தார்களா? இல்லையே.

அது போலவே மங்கள முனசிங்க காலத் தெரிவுக்குழு தோல்வியில் முடிந்திருந்தாலும், இன்றைய தெரிவுக் குழுவையும் எமது மக்களுக்காகப் பயன்படுத்தி முயன்று பார்க்க ஏன் தயக்கம்?

31 பேர்கள் இருக்கும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் 3 தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் மட்டும் இருப்பதால் எதைச் சாதிக்க முடியும் என்று கேட்கும் சுரேஷ் பிரேமச்சந்திரன்,

225 உறுப்பினர்கள் இருக்கும் நாடாளுமன்றத்தில் 14 தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் இருந்து எதைச் சாதிக்கலாம் என்று எண்ணுகின்றார்?

அரசியல் தீர்வு கிடைத்துவிடும் என்ற அச்சம் காரணமாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பொய்யான காரணங்களை கட்டவிழ்த்து வருகின்றது.

நிரந்தர அரசியல் தீர்வின் ஊடாகவே அவர்கள் நீலிக்கண்ணீர் வடிக்கும் நில அபகரிப்பையும், படையினர் நிலை கொண்டிருப்பதையும் முழுமையாக நிறுத்த முடியும்.

நான் தனியொரு அமைச்சராக இருந்து யுத்தத்தின் பின்னர் பெருமளவிலான நிலங்களை அரச படைகளிடம் இருந்து மீட்டு எமது மக்களிடம் கொடுத்திருக்கிறேன்.

இடம்பெயர்ந்த மக்களை அவர்களது சொந்த இடங்களில் முடிந்தளவு மீள்குடியேற்றம் செய்திருக்கிறேன்.

படையினர் நிலை கொண்டிருந்த காவலரண்கள் மற்றும் முகாம்கள் பலவற்றை அகற்ற முடிந்திருக்கின்றது.

யாழ். பல்கலைக்கழகத்திற்கு உரித்தான விவசாய மற்றும் பொறியியல் பீடம் அமைக்கப்படுகின்ற கிளிநொச்சி அறிவியல் நகரிலுள்ள பாரிய நிலப்பரப்பை மீட்டுக் கொடுக்க முடிந்துள்ளது.

இவைகளைக் கண்டு தாம் அரசியல் நடத்துவதற்கான மக்களின் அவலங்கள் யாவும் தீர்ந்து வருகின்றனவே என்று அச்சப்படுகின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர்,

நிரந்தர அரசியல் தீர்வு கிடைத்து விட்டால் அனைத்துப் பிரச்சினைகளும் சுலபமாகவே தீர்ந்து விடும் என்று தமது அரசியல் இருப்பை எண்ணி கலங்கி நிற்கிறார்கள்.

இரண்டு வருடங்களுக்கு முன்னரே அரசாங்கம் அறிவித்த போது நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்று வந்திருந்தால் அண்மையில் நடந்து முடிந்ததாக அவர்கள் கூறும் சுற்றி வளைப்புகளோ, சில கைது நடவடிக்கைகளோ இங்கு நடந்திருக்க வேண்டிய சம்பவங்களும் இடம்பெற்றிருக்காது.

இதுவரையில் நிரந்தரத் தீர்வையும் எட்டியிருக்கலாம். அநீதிகளைத் தட்டிக்கேட்பதென்பது, அவைகளை தடுத்து நிறுத்தவே அன்றி, எமது மக்கள் மீது அவலங்களை மேலும் சுமத்துவதற்காக அல்ல.

13 ஆவது திருத்தச்சட்டத்தை துஷ்பிரயோகம் செய்தவர்களும், அதை உதாசீனம் செய்தவர்களும் இன்று அதையே ஏற்றுக்கொண்டு வர முடியும் என்றால், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களை மத்திய அரசின் அதிகாரப் பறிப்பு என்று கூறியவர்கள், இன்று அதே மத்திய அரசோடு இணைந்து மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் பங்கெடுக்க வந்திருப்பது இதய சுத்தியானது என்றால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போலியான நியாயங்களை கற்பிப்பதைக் கைவிட்டு மக்களின் மீது அக்கறை கொண்டவர்களாக நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை மக்களின் விடிவிற்காகப் பயன்படுத்த முன்வர வேண்டும்.

தமிழ் பேசும் மக்களின் சமகாலப் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வுகாண தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விருப்பம் கொண்டிருந்தால், அது அரசியலுரிமைப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும் யதார்த்த வழிமுறை மூலமே முடியும் என்ற மதிநுட்ப சிந்தனைகளை ஏற்றுக்கொண்டு முன்வரவேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

## பிரச்சினைக்கு...

இடதுசாரிக் கட்சிகள் அன்றைய காலத்தில் இருந்து இன்று வரை நாட்டின் தேசிய ஐக்கியத்திற்காகவே பணியாற்றி வருகின்றன. நாட்டை ஐக்கியப்படுத்தும் பிரச்சினையில் எந்தக் கட்சியுடனும் நாம் இணைந்து எந்த பேதங்களும் இல்லாது செயற்படுவோம். நாட்டில் தேசிய ஐக்கியத்தை ஏற்படுத்துவதே இடதுசாரிக் கட்சிகளின் அடிப்படை நோக்கம் எனவும் அமைச்சர் குணசேகர மேலும் தெரிவித்துள்ளார்.

## பொது...

கூறியுள்ளார். பொதுவேட்பாளராக நிறுத்த எதிர்க்கட்சிகள் தீர்மானித்துள்ளவர்களை விட அமெரிக்க தூதுவர் நாட்டுக்கு பல சேவைகளை செய்துள்ளார்.

கொழும்பு நகரின் அபிவிருத்திக்கு மிசேல் உதவினார். வடக்கில் மக்களை சந்தித்து அவர்களின் குறைகளைக் கேட்டறிந்தார் எனவும் அமைச்சர் அபேவர்தன மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## இலங்கைப் பணியாளர்

இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் பணியாற்றும் இலங்கையர்களின் நிலை குறித்து ஆராய்வதற்காக க்ரிபீன் எதிர்வரும் 19 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதிவரை இலங்கைக்கு பயணம் செய்யவுள்ளார்.

இலங்கையில் இருந்து சென்று வெளி நாடுகளில் பணியாற்றும் 24 வீதத்தினர் தேசிய பொருளாதாரத்தில் 33 வீத வருமானத்தை ஈட்டித் தருகின்றனர்.

இந்தநிலையில் வெளிநாடுகளில் பணியாற்றும் இலங்கையர்களின் உரிமைகளை கண்காணிப்பதற்காக விசேட பிரதிநிதி ஒருவர் இலங்கை வருவது இதுவே முதற்தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

# 7 ஆவது ஐ.பி.எல்

**ஹைதராபாத் 205/5**

பிஞ்ச் - 20
தவான் - 45
ஓஜா - 79
வோனர் - 44
ஆர்.தவான் 2 விக்கெட்

துரத்தி அடித்தது பஞ்சாப்

**பஞ்சாப் 211/4 (18.4)**

வோக்ரா - 47
சாகா - 54
மக்ஸ் வெல் - 43
மில்லர் - 24
பெய்லி - 35
புவனேஸ்வரகுமார், சர்மா, மிஸ்ரா தலா ஒரு விக்கெட்.
6 விக்கெட்டுக்களால் பஞ்சாப் வெற்றி
ஆட்டநாயகன் - சாகா

---

**மும்பை இன்டியன்ஸ் 141/5**

ராயுடு - 33
ரோகித்சர்மா - 51
மோர்கல் 2 விக்கெட்

**கொல்கத்தா 142/4 (18.4)**

உத்தப்பா - 80
யூசுப்பதான் - 20 (ஆ.இ)
ஹர்பஜன் 2 விக்கெட்
6 விக்கெட்டுக்களால் கொல்கத்தா வெற்றி
ஆட்டநாயகன் உத்தப்பா

## இலங்கை...

தமது குழுக்களை அனுப்பியும் இருந்தன. இன்னும் சிலநாடுகள் கப்பல்களை அனுப்பத் தயாராகின.

ஆனால், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவற்றை எல்லாம் நிராகரித்து விட்டார். அவர் போரை முடிவுக்குக் கொண்டுவருவதில் உறுதியாக இருந்தார்.

அனைத்து வெளிநாட்டுத் தலையீடுகளையும் அவர் நிராகரித்து விட்டார். ஜனாதிபதியின் இந்த முடிவு சில நாடுகளுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கவில்லை.

அதனால்தான் இலங்கை மீது வெளியக அழுத்தங்களைக் கொடுக்கத் தொடங்கியுள்ளன.

பிரிவினைவாதம் நாட்டில் செயற்படுமானால் அதனை கண்காணிப்பதன் பொருட்டு பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஐக்கிய இலங்கைக்குள் பிரிவினையை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. இந்த நிலையில் பிரிவினைவாத செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## விசாரணை...

விரைவில் அனுப்பி வைக்க உள்ளது.

விசாரணைகள் அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதத்திற்கு முன்னதாக நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எத்தனை பேர் கொண்ட பிரதிநிதிகள் குழு நியமிக்கப்படவுள்ளனர் என்பது பற்றிய தகவல்கள் வெளியிடப்படவில்லை. எனினும் மூவர் அடங்கிய பிரதிநிதிகள் குழுவினை நியமிப்பார் என சிங்கள ஊடகமொன்று ஊகம் வெளியிட்டுள்ளது.

விசாரணைகளுக்கு இடமளிக்கப் போவதில்லை என அரசாங்கம் ஏற்கனவே திட்டவட்டமாக அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தடைக்கான..

குறித்து கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அமைப்பு ஒன்றைத் தடை செய்வது என்பது ஐரோப்பிய ஒன்றிய நாடுகளைப் பொறுத்தவரையில், மிகவும் பாரதூரமான விவகாரம். இலங்கை அரசு வெளியிட்டுள்ள தடைப் பட்டியலை ஏற்பதற்குத் தேவையான ஆதாரங்களை ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றன.

இலங்கை அரசு அதனை வெளிப்படுத்தினால் மட்டுமே நிலைமைகளை ஆராயமுடியும், முடிவெடுக்க முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## சுவாமி...

அங்கு சந்நியாசம் பூண்டு சுவாமி சித்ரூபானந்தா என்ற நாமத்துடன் திரும்பினார்.

பருத்தித்துறை வல்லிபுரப் பரியாரியார் ஒழுங்கையில் கலட்டி என்ற இடத்தில் அவரது ஆச்சிரமம் அமைக்கப்பட்டு நன்கு விருத்தி செய்யப்பட்டது. பல்வேறு சமய, சமூகப் பணிகளை ஆற்றி வந்த அவர் அதன் ஒரு பங்காக பௌர்ணமி தோறும் ஆச்சிரமத்தில் அன்னதானம் வழங்கும் பணியையும் தவறாது மேற்கொண்டு வந்தார்.

நேற்று அந்தப் பணியில் மும்முரமாக ஈடுபட்டிருந்த சமயம் திடீரென மயங்கி வீழ்ந்தார். அதை அடுத்து அங்கேயே அவர் தேகவியோகம் அடைந்தார். அவரது பூதவுடல் இன்று காலை 10 மணிக்கு பருத்தித்துறை முனைப் பகுதியில் உள்ள இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 மே 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.